24 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969

நதி 24 | பாலம் 20 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | OCTOBER 15, 2014

# ரொறொன்ரோ மாநகரசபை முதல்வர் தெரிவு!

ஒக்ரோபர் 27, 2014 இல் நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களையும் அதன் தலைவர்களையும் தெரிவு செய்யும் தேர்தல் தற்போது சூடு பிடித்துள்ளது. இத்தேர்தலில் 31 இற்கு மேற்பட்ட தமிழர் போட்டியிடுவதால் இத்தேர்தல் தமிழ் மக்களிடையேயும் பிரபல்யமடைந்துள்ளது.

ரொரன்றோ மாநாகர சபை முதல்வர் பதவிக்கான போட்டியில் முன்னணியில் உள்ள முதல் மூவர்களாக John Tory, Doug Ford மற்றும் Olivia Chow உள்ளனர். இவர்களது ஆதரவு பற்றி கருத்துக் கணிப்பு நடத்திய 'Toronto Star' ஊடகம் ஒக்ரோபர் 06, 2014 நிலவரங்களின் படி ஜோன் ரோறி 39%, டக் ஃபோர்ட் 37% மற்றும் ஒலிவியா சோ 22% ஆதரவை ரொறொன்ரோ வாக்காளர்களிடம் இருந்து பெறுகிறார்கள் என்கின்றது.

இவர்கள் மூவரிலும் ஜோன் ரோறி முன்பு ஒன்ராறியோ மாகாண நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித்தலைவராக பழமைவாதக் கட்சியின் சார்பில் இருக்கும்போது இலங்கை உட்பட தெற்காசிய நாடுகளுக்கு 13 நாட்கள் பயணத்தை ஜனவரி 14, 2006 ஆம் ஆண்டில் மேற்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. அப்போது அவர் ஒன்றாறியோவில் வாழும் 6 இலட்சத்திற்கும்



மேற்பட்ட தெற்காசியர்களது கலை, கலாச்சாரம், சரித்திரம் போன்றவற்றை தான் அறிய இலங்கை, இந்தியா, பாகிஸ் தான் போன்ற சில தெற்காசிய நாடுகளுக்கு இப்பிரயாணத்தை மேற்கொண்டதாக கூறினார். அவர் இப்பயணத்தின் போது இலங்கையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களையும் சந்தித்தார்.

கடந்த செப்ரெம்பர் 27, 2014 இல் நடந்த தமிழ் ஊடகவியலாளர்களின் சந்திப்பின் போது ஜோன் ரோறி இலங்கையின் வடமாகாண சபை ஆணையாளர் CVK சிவஞானம் அவர்களுடன் தொடர்புகொண்டு உரையாடியதாகவும் அவரிடம் இலங்கையில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுடன் புலம் பெயர்ந்த தமிழ் மக்களை அதிகம் கொண்ட ரொறொன்ரோ மாநகரம் எவ்வாறான தொடர்புகள், முயற்சிகளை மேற்கொண்டால் இரு பகுதியினரும் நன்மை அடைய முடியும் என்பதை தான் ஆராய்ந்து வருவதாகவும் கூறினார்.

ரொறொன்ரோவில் பெருமளவு தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் தங்களது சொந்த தொழில் முயற்சிகளில் வெற்றிபெற்றவர்களாக இருக்கின்றார்கள். அவர்களது இந்த திறமை ரொறொன்ரோவில் வாழும் மற்றைய சமூகங்களுக்கும் பலன் பெறக்கூடியதாக செய்யவேண்டும் என்றார். இலங்கைக்கு பயணம் செய்து இலங்கை வாழ் தமிழ் மக்களது வரலாறு, கலாசாரம் என்பனவற்றை நேரடியாக அறிந்தவன் என்ற வகையிலும், தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர்களையும் சந்தித்தவன் என்ற வகையிலும், ரொரன்றோ வாழ் தமிழ் மக்களது திறமை, அவர்களது ரொறொன்ரோ மாநகருக்கான பங்களிப்புக்களையும் நான் நன்கு அறிவேன் என்றார். அவர்களது திறமை முற்றாக ரொறொன்ரோ வாழ் சகல சமூக மக்களாலும் பயன்படுத்தபடவில்லை. இது விடயத்தில் நாங்கள் பல முயற்சிகள் செய்ய இருக்கின்றன எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தான்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்







LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி

Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd.
Company#10214

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE

Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
- அவசரகால பல் வைத்திய சேவைகள்
- பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
- பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
- பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
- முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
- சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232

3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

THE TRUSTED MORTGAGE SPECIALISTS
"I Work for you Not for the Bank"
MORTGAGE ALLIANCE
The Guardian
•I will arrange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage??? "When banks says no We says yes" @ interest rate starting from 6.99%+.

Thayalan Goblakrishnan
(M12001612)
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Some Terms & Conditions May Apply
Contact: 416.575.3211
E-Mail: thaya.gobal@gmail.com







CELEBRATING 25 Years
Vlambaram Publications inc.

# 25 ஆவது ஆண்டில் விளம்பரம் நடத்தும் உலகளாவிய போட்டி

ரொறொன்ரோவில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் விளம்பரம் பத்திரிகை 25வது வருடத்தை (1991 - 2015) முன்னிட்டு நடத்தும் தமிழ் சமூக-இலக்கிய-வரலாற்றுப் போட்டி. போட்டிக்கான படைப்புக்கள் பின்வரும் முகவரிக்கு ஜனவரி முதலாம் திகதி 2015க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். அஞ்சல் உறையில் அல்லது மின்னஞ்சல் பொருள் பகுதியில் '25வது ஆண்டு விளம்பரப் போட்டி' என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி
Vlambaram Publication Inc.
GTA Square,
5215 Finch Ave. East, #201
Toronto ON, M1S 0C2
மின்னஞ்சல் முகவரி:vlambaram@sympatico.ca

போட்டியில் வெற்றிபெற்ற மூன்று படைப்புக்களை தவிர ஏனையவற்றிற்கு எவ்வித பணமும் வழங்கப்பட மாட்டாது. ஆனால் சிறந்ததென நடுவர்களால் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் விளம்பரம் பத்திரிகையிலும் விளம்பரம் மற்றும் தமிழ்வணக்கம் இணையத்தளங்களிலும் பிரசுரிக்கப்படலாம்.

படைப்புக்கள் முன்னர் பத்திரிகைகள், இணையங்கள் உட்பட்ட மற்றைய ஊடகங்கள் எதிலும் பிரசுரமாகியிருக்கக் கூடாது. இதனை எழுத்தாளர் படைப்பின் முகப்பகுதியில் உறுதிப்படுத்த வேண்டும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் விளம்பரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.

<u>போட்டி 1</u>
குறுநாவல் போட்டி

9,000-12,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

<u>போட்டி 2</u>
திரைப்படக் கதைப் போட்டி
(Script Writing)
1500-2000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

<u>போட்டி 3</u>
கவிதைப் போட்டி

60-100 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

<u>போட்டி 4</u>
கட்டுரைப் போட்டி

பின்வரும் தலைப்புக்களில் ஒன்றில் கட்டுரையை எழுதி அனுப்பலாம்.

1. புகலிட பொருளாதாரத்தில் தமிழரின் பங்கு
2. தமிழரின் கலையும் பண்பாடும்
3. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழரின் பங்கு
4. மருத்துவமும் தமிழரும்

1,500 - 2,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

நன்கொடை: போட்டி 1இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 1,000, 500, 300 வழங்கப்படும்.
நன்கொடை: தனித்தனியே போட்டி 2, 3, மற்றும் 4இற்கும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 500, 300, 200 என வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 8.5"-11" (A4) தாளில் 11pt எழுத்துரு அளவில் தமிழ் unicode font இல் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்புபவர்கள் word ல் ஆக்கத்தை பதிவு செய்து இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சலின் முகப்பில் ஆக்கத்தை பதிவு செய்ய வேண்டாம். படைப்பாளியின் முழுப்பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் உறுதிப்படுத்தலும் படைப்பின் முன் பகுதியில் தனித்தாளில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். போட்டி உலகில் வாழும் தமிழர்கள் அனைவருக்குமானது. விளம்பரம் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களோ விளம்பரத்தின் எழுத்தாளர்களோ இப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது.

# தமிழ் தேசியக் கூட்டமைப்பை தனிக் கட்சியாக பதிவு செய்ய வேண்டியதன் அவசியம் என்ன?

போர் முடிவுற்றதன் பின்னர், தமிழ் தேசியக் கூட்டமைப்பை தனியான கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்கிற கருத்து கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சி களிடையே வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், அதனை பதிவு செய்யும் பணி இதுவரை நடைபெறவில்லை. அது இழுத்தடி க்கப்பட்டு வருவதாகவே தோன்றுகின்றது.

தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளோட் ஆகிய கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. ஆனந்தசங்கரியின் தமிழர் விடுதலைக்கூட்டணி கட்சி நடந்து முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டி யிட்ட போதிலும் தற்போது கூட்டமைப் பிலிருந்து விலகிவிட்டதாகவே கருதப்படுகின் றது. இந்நிலையில், தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டும் என்கிற கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. ஆனால், தமிழரசுக் கட்சி இந்தப் பதிவை விரும்பவில்லை என்றும், அதன் காரணமாவே இப்பதிவு நடவடிக்கை இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது எனவும் அபிப்பிராயங்கள் வெளியாகியுள்ளன.

தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவர் இரா. சம்பந்தன் தமிழ் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வது குறித்து கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருந்தார். இதுபற்றி மாறான கருத்துக்கள் எதனையும் அவர் வெளியிட வில்லை. ஆனால், தற்போது தமிழரசுக் கட்சியின் தலைமையை ஏற்றிருக்கும் மாவை சேனாதிராஜா, தமிழ் தேசியக் கூட்டமைப்பை தனியான கட்சியாக பதிவு செய்வதில்லை என்கிற கருத்தை பகிரங்கமாக வெளியிட்டி ருக்கின்றார். அண்மையில் லண்டனில் வைத்து அவர் இதனைத் தெரிவித்ததாக ஊடகங்களில் அவரது கருத்துக்கள் வெளியாகியுள்ளன. அவரது இக்கருத்து இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஒரு முரண்பாடான நிலையை ஏற்படுத்தி யுள்ளது. தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கே தங்கள் ஆதரவை வழங்கி



வருகின்றனர் எனவும் அதில் அங்கம் வகிக்கும் தனிப்பட்ட கட்சிகளுக்கு ஆதரவளிக்கவில்லை என்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ முதலான கட்சிகள் கருத்து வெளியிட்டுள்ளன. தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பை தனியான கட்சியாக பதிவு செய்ய வேண்டும் எனவும் அவை கூறுகின்றன. மாவை சேனாதிராஜா கூட்டமைப்பை பதிவு செய்யத் தேவையில்லை என கூறியதற்கு பிறகு அதனை உடனடியாக பதிவு செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்கிற அழுத்தம் கட்சிக்குள் அதிகரித்துள்ளது.

உண்மையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்கின்ற அமைப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தருணத்தில் உருவாக்கப்பட்டது. மறைந்த ஊடகவியலாளர் டி. சிவராம் இதற்கு தூண்டுகோலாக இருந்தார். பல்வேறு கொள்கை முரண்பாடுகளுடன் காணப்பட்ட கட்சிகளின் தலைவர்களை நேரடியாக சந்தித்து அவர்களை ஒரு கூட்டுக்குள் கொண்டு வர அவர் பாடுபட்டார். மிதவாத கட்சிகளுடன், முன்னர் தீவிரவாத இயக்கங்களாக இருந்து பின்னர் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்த கட்சிகளையும் ஒன்றிணைப்பது என்பது சிக்கலான காரிய மாக இருந்தாலும் அது அப்போது நிறைவேற்றப்பட்டது. தமிழ் மக்களுக்கும் சில கட்சிகளுடன் முரண்பாடுகள் இருந்த போதிலும் கூட, அனைவரும் ஒற்றுமைப்பட வேண்டும் என்பதில் முரண்பாடு இருக்க வில்லை. எனவேதான் அவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு தங்கள் அமோக ஆதரவை கடந்த தேர்தல்களில் வழங்கி வந்துள்ளனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகியவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியாக இயங்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அக்கட்சி கடந்த நாடாளு மன்ற தேர்தலில் தனியாக போட்டியிட்ட போது, அவர்களை தமிழ் மக்கள் நிராகரித்த னர். அதேபோல் எம்.கே. சிவாஜிலிங்கமும் பிரிந்து சென்றபோது மக்கள் அவருக்கு வாக்களித்து வெல்லச் செய்யவில்லை. கடந்த வட மாகாண சபைத் தேர்தலில் மீண்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் இணைந்ததால் அவர் வடமாகாண சபை உறுப்பினரானார். புளோட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் கடந்த வட மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட்டதால் வெற்றி பெற்றார். அதுவும் வாக்குகளின் அடிப்படை யில் அவர் மூன்றாவது நிலையில் வந்தார்.

தனிக்கட்சிகள், தனிநபர்கள் என்பதை விட தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்கிற அமைப்பின் மீது மட்டுமே தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதற்கு இது நல்லதொரு உதாரணமாகும். எனவே, தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனியான கட்சியாக பதிவு செய்யப்படுவதை தமிழ் மக்கள் விரும்பு வார்கள். அதற்குள்ளிருக்கும் தனித்தனிக் கட்சிகள் தங்கள் கட்சிகளின் நலன்களை முன்னிறுத்தி செயல்படுவதை தமிழ் மக்கள் விரும்பவில்லை. அண்மைக் காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் தங்கள் கட்சிகளுக்கான மாநாடுகளை நடத்தின. மக்கள் அவற்றில் பெரிதாக அக்கறை கொள்ளாமலிருந்ததை அவதானிக்க முடிந்தது. தமிழ் தேசியக்கூட்டமைப்பு என்று வரும் நிகழ்வுகளில் மக்கள் பெருமளவில் கலந்து கொள்கின்றமையினையும் காண முடிகின்றது. இவற்றிலிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனியான கட்சியாக பதிவு செய்யப்படுவதை தமிழ் மக்கள் விரும்பு கின்றனர் என்பதை புரிந்து கொள்ளலாம். தனிப்பட்ட தலைவர்களை விடவும் ஒரு கூட்டுத் தலைமையை மக்கள் விரும்பும் நிலையே இன்று காணப்படுகின்றது.

இந்நிலையில், தமிழ் மக்களின் உணர்வு களையும் எதிர்பார்ப்புகளையும் அம்மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். தனிப்பட்ட தலைவர்களின் மேடைப் பேச்சுக்களுக்கு கரகோசம் செய்வதும், அவர்களுக்கு மாலைகள் அணிவித்து வரவேற்பதும், இரத்தத்தால் திலகமிட்டதுமான காலம் கடந்து போய்விட்டது. இப்போது, தங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ன செய்கின்றார்கள் என்பதை கூர்மையாக அவதானிக்கும் நிலைக்கு மக்கள் முன்னேறி விட்டுள்ளார்கள். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தலைவர்களுக்கு உள்ளது. இதனை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாக தம்மை வெளிப்படுத்தி வரும் தமிழரசுக்கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்ய முன்வராவிட்டால், ஏனைய கட்சிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்யும் முயற்சியில் இறங்கக் கூடும் என்கின்ற கருத்துக்களும் தற்போது வெளியிடப்பட்டு வருகின்றது. அவ்வாறு நிகழுமானால், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் பிளவு உருவாகும் ஆபத்து நேரலாம். இதனை தமிழ் மக்கள் விரும்பவில்லை. ஆகவே, உள்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

**- விகிர்தன் -**

> இந்நிலையில், தமிழ் மக்களின் உணர்வுகளையும் எதிர்பார்ப்புகளையும் அம்மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். தனிப்பட்ட தலைவர்களின் மேடைப் பேச்சுக்களுக்கு கரகோசம் செய்வதும், அவர்களுக்கு மாலைகள் அணிவித்து வரவேற்பதும், இரத்தத்தால் திலகமிட்டதுமான காலம் கடந்து போய்விட்டது. இப்போது, தங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ன செய்கின்றார்கள் என்பதை கூர்மையாக அவதானிக்கும் நிலைக்கு மக்கள் முன்னேறிவிட்டுள்ளார்கள். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தலைவர்களுக்கு உள்ளது. இதனை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6


# மஹாசமாதி என்றால் என்ன?






சத்குரு வாசுதேவ்

மஹாசமாதி என்றால் என்ன? யோகிகள் மஹாசமாதியின் போது தங்கள் உடலை விட்டுச் சென்றுவிடுவார்கள் என்று பல கதைகள் கேட்டிருக்கிறேன். உண்மையா?

சத்குரு:

பல யோகிகள், ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தன் உடலை விட்டுச் செல்வதாக முன்கூட்டியே அறிவித்து விடுவார்கள். அதே போல், அவர்கள் குறிப்பிட்ட நாளில், அந்த நேரத்தில், மற்றவர்கள் முன்னிலையில் உட்கார்ந்த நிலையிலேயே உடலை விட்டுச் சென்று விடுவார்கள். இதுபோல், நினைத்த மாத்திரத்தில், உடலைக் காயப்படுத்தாமல் வெளியேறுவது என்பது, சாதாரண விடயம் அல்ல.

அப்படியென்றால், அவர்கள் உட்கார்ந்த படியே இறந்துபோகிறார்களா? அதைத்தான் மகாசமாதி என்கிறோமோ?

உங்கள் உடலோடு நீங்கள் எங்கு பிணைக்கப் பட்டிருக்கிறீர்கள் என்று அறிந்திருந்தால், நீங்களும் உங்கள் விருப்பம் போல் அந்த இணைப்பைத் துண்டித்து விடலாம்.

அவர்கள் இறப்பதில்லை. அவர்கள் உடலைத் துறந்து சென்று விடுகிறார்கள். உதாரணமாக, ஒருவர் தன் உடலை உகுத்து விட்டு செல்லப் போவதாக முன்பே அறிவித்திருந்தார். நூற்றுக்கணக்கான மக்கள் இதைப் பார்க்கக் கூடியிருந்தனர். அவர்கள் முன்னிலையில் அவர் உட்கார்ந்தவாறு சொன்னார், 'நான் இப்போது போகிறேன்' என்று. சொன்ன உடனேயே, அவர் அப்படியே போய்விட்டார். அவரை யாரும் கத்தியால் குத்தவில்லை, அவர் விஷமேதும் குடிக்கவில்லை, சும்மா வெறுமனே அவ்வாறே! உட்கார்ந்திருந்த நிலையிலேயே அவர் தன் உடலை நீத்துச் சென்றுவிட்டார்.

உடலில் அணிந்திருக்கும் ஆடைகளைக் களைவதுபோல், அவர் தம் உடலையே உதறிவிட்டார். உங்கள் உடலோடு நீங்கள் எங்கு பிணைக்கப் பட்டிருக்கிறீர்கள் என்று அறிந்திருந்தால், நீங்களும் உங்கள் விருப்பம் போல் அந்த இணைப்பைத் துண்டித்து விடலாம். இதை நீங்கள் செவிவழிச் செய்தியாக, ஒரு கதையாகத் தான் கேட்டிருப்பீர்கள். உங்கள் உயிர் உடலுடன் எங்கு பிணைக்கப்பட்டிருக்கிறது என்று உங்களுக்குத் தெரியாது. ஆனால் இதை தெரிந்து கொள்ள, யோகாவில் ஒரு தனி



பகுதியே இருக்கிறது. இந்த இடம் வரையில் எப்படி வந்தீர்கள், உங்கள் உடலோடு நீங்கள் எங்கு பிணைக்கப் பட்டிருக்கிறீர்கள் என்பதையெல்லாம் சில யோக வழிமுறைகளைப் பின்பற்றினால் நீங்களே அறிந்து கொள்ள முடியும். இந்தப் பிணைப்பு எங்கே இருக்கிறது என்று தெரிந்தால், பக்குவமாக உங்களை நீங்களே இந்த உடலிலிருந்து கழற்றிக் கொள்ள முடியும். யாரும் உங்களை வலுக்கட்டாய மாக அனுப்பிவைக்கத் தேவையில்லை. நீங்கள் அருள் நிறைந்த மனிதராக இருக்கும் பட்சத்தில், விரும்பிய நேரத்தில் போகலாம்.

## எங்கே போவது?

மனதில் பதினொரு நிலையிலான பரிமாணங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒன்றுக்குள் ஒன்று அடக்கமாய் ஒரே இடத்திலேயே இருக்கின்றன.

'எங்கே' என்று கேட்கும்போது நீங்கள் எப்போதும், தூரம், சென்றடையும் இடம் போன்றவற்றைப் பற்றியே பேசுகிறீர்கள். நிதர்சனத்தில் 'இங்கு', 'அங்கு' என்று எதுவும் இல்லை. 'அப்போது', 'இப்போது' என்றும் கூட எதுவும் கிடையாது. இவை அனைத்தும் உங்களுடைய மேல் மனத்தின் உருவாக்கம். மனதின் அந்த எல்லைகளைக் கடந்து விட்டால், எல்லாமே, இங்கே இப்போது என்று ஆகிவிடும். 'இந்த இடத்திலிருந்து அந்த இடத்திற்குப் போவது' என்பதற்கு அர்த்தம் இருக்காது. இந்த இடமே எல்லாம். இது சித்தாந்தம் அல்ல. நவீன விஞ்ஞானம் இதை கோட்பாடுகளாய் இன்று வழங்கி விட்டது. 'எல்லாம் இங்கேயே இருக்கிறது, ஒன்றுக்குள் ஒன்று அடக்கமாய் இருக்கிறது' என்கிறது.

மனதில் பதினொரு நிலையிலான பரிமாணங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒன்றுக்குள் ஒன்று அடக்கமாய் ஒரே இடத்திலேயே இருக்கின்றன. எனவே 'எங்கே' என்பது தூரத்துடன் தொடர்புடையது அல்ல.

நீங்கள் உடல் சார்ந்தது என்பதிலிருந்து விலகிப் போகிறீர்கள், அவ்வளவுதான். ஐம்புலன்களின் உணர்தல் எல்லைக்குள் இருக்க மாட்டீர்கள். மனிதர்களின் கண்களுக்கு புலப்பட மாட்டீர்கள். இதனால் நீங்கள் எங்கேயோ போய்விட்டீர்கள் என்று அர்த்தம் கிடையாது. அங்கேயே இருக்கிறீர்கள், ஆனால் வேறொரு பரிமாணத்திற்கு நகர்ந்து போய் விட்டீர்கள். அதே உயிர்சக்தி ஒரு பரிமாணத்திலிருந்து இன்னொரு பரிமாணத்திற்கு நகர்கிறது. உடலளவிலிருந்து இன்னும் சற்றே நுட்பமான நிலைக்குப் போகிறது. இங்கேயே இருக்கிறீர்கள், ஆனால் உடல்சார்ந்த உருவத்தில் அல்ல. தன்னில் இருந்த வளர்ந்த உடலை மட்டும் பூமி மீண்டும் எடுத்துக் கொள்ளும்.

ஒருவர் இறந்துவிட்டால் 'அவர் இல்லை' என்பீர்கள். அது உண்மை அல்ல. அவர் இருக்கிறார், ஆனால் நீங்கள் உணரும் வகையில் அவர் இல்லை, அவ்வளவுதான். தனக்குள் இருக்கும் பதிவுகள் அனைத்தையும் முற்றிலுமாய் கரைத்துவிட்டு, உடலைத் துறந்தால் மட்டுமே, 'அவர் இல்லை'. அதுதான் ஆட்டத்தின் முடிவு.

ஆனால் ஒருவர் ஏன் ஆட்டத்தை முடிக்க விரும்ப வேண்டும்? அனைத்தையும் பார்த்தாகி விட்டது, இது போதும் என்று அவர் நினைப்பதால். ஒவ்வொருவரும் பல பிறவிகள் வாழ்ந்திருப்போம். எல்லாப் பிறவிகளின் ஞாபகங்களும் நம் ஆழ்மனத்தில் பதிந்திருக்கிறது. என்ன, தற்போதைய விழிப்புணர்வில் உங்களுக்கு அவை எட்டுவதில்லை. பூட்டி வைக்கப்பட்டது போல், அதை நீங்கள் நெருங்க முடியா வண்ணம் அவை அடைபட்டு இருக்கிறது. உங்களுக்கு இருக்கும் ஞாபகசக்தி, இந்தப் பிறவியில் பிறந்ததிலிருந்து இன்றுவரை மட்டுமே. எனவே, 'நான் ஏன் ஆட்டத்தை நிறுத்த வேண்டும்' என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ஒரு வேளை இதேபோல் நூறு முறை செய்திருக்கிறேன், வாழ்ந்திருக்கிறேன், இறந்தும் இருக்கிறேன் என்பதை நீங்கள் உணர்ந்திருந்தால், எல்லாவற்றையும் தெளிவாகப் பார்த்திருந்தால், மீண்டும் ஒருமுறை இதே அர்த்தமற்ற வாழ்க்கை வாழ விரும்ப மாட்டீர்கள் அல்லவா? இந்த வாழ்க்கையைத் தாண்டி வேறு என்ன இருக்கிறது என்று பார்க்க விரும்புவீர்கள் தானே?

ஒருவர் விழிப்புணர்வுடன் தன் உடலைத் துறந்தால், அவர் உண்மையிலேயே இல்லை என்று பொருள். எந்தப் பரிமாணத்திலும் அவர் இல்லை. இதுதான் முக்தி. ஆட்டம் முடிந்துவிட்டது, அவ்வளவுதான்.

AABS DON VALLEY PEST CONTROL INC.
Please Call @ 647-931-7124 OR 1-800-816-6406
ABDV PEST CONTROL
The Name You Can Trust



Licensed Graduate Exterminator, Insured and 10 years Experience Free Inspection, Free Estimates & Guaranteed services in GTA and out of GTA We control Cockroaches, Bedbugs, Mice, Flea, Wasps/Bees, Earwigs ,Carpenter ants and other ants, Fruit Flies, Drain flies, Silver fish, Centipedes, Spiders etc. We provide pest control services for Residential, Commercial, Industrial, Food Warehouses, Food Processing and Packaging industries.

**4 Day Inner Engineering Program**
led by an Isha teacher trained by Sadhguru
Coming to Toronto
***November 13th to 16th, 2014***

***TIMINGS:*** Thursday November 13: 6:30pm – 9:30pm
Friday November 14: 6:30pm – 9:30pm
Saturday November 15: 8:30am – 7:00pm
Sunday November 16: 7:30am – 7:00pm
Vegetarian lunch provided on Saturday; Vegetarian breakfast & lunch on Sunday.
Attendance for all sessions is required.
***VENUE:*** The Princess Banquet, 3330 Pharmacy Ave., Scarborough, ON M1W 3V8
***CONTACT:*** Email: toronto@ishafoundation.org Phone: 416-300-3010
On line registration: www.innerengineering.com/live/toronto

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

உங்கள் மாதாந்த மோட்கேஜ் கொடுப்பனவுடன் credit card, car loan, personal loan, line of credit மற்றும் ஏனைய அதிகளவு வட்டி செலுத்தும் கடன்களை ஒன்று படுத்தி எவ்வாறு உங்களது மாதாந்த கடன் சுமையை குறைப்பது???

| Current Loan | Current Balance | Current Payment | New Loan | New Balance | New Payment |
|---|---|---|---|---|---|
| Mortgage 5 % | 500,000.00 | 2,668.45 | Mortgage @ 2.89% | 548,000.00 | 2,070.26 |
| Car Loan | 17,000.00 | 315.00 | Car Loan | Paid | Paid |
| Credit Card balance | 25,000.00 | 750.00 | Credit Card balance | Paid | Paid |
| Penalty ( Assume) | 6,000.00 | - | Penalty | Paid | Paid |
| **Current Total** | **548,000.00** | **3,733.45** | **New Total** | **548,000.00** | **2,070.26** |

உங்களின் மாதாந்த சேமிப்பு
## $ 1,663.19




மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

**"மோட்கேஜ் கிளினிக்"**

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for appointment)

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

5 Yrs Fixed Rate : 2.79 % *OAC
5 Yrs Variable : Prime - .70% (2.3 %)

உங்கள் வீடு விற்பனைக் கொமிசனை நீங்களே தீர்மானியுங்கள் எமது மிகக் குறைந்த விற்பனைக் கொமிசன் $1000* மட்டுமே!!!

MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530
Corporate Office :
2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*
Corporate Office :
112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC
Office Phone : 416-391-3232

எமது முகவரி

**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
(Markham & HWY 401)



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**



ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

# எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலும் தமிழ் மக்களின் நிலைப்பாடும்!

## தாயகமடல்

இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் 2015 ஜனவரி மாதம் நடத்தப்படவுள்ளது. இது உத்தியோக பூர்வமாக இன்னும் அறிவிக்கப்படவில்லை எனினும், உறுதி செய்யப்பட்டுவிட்டதாகவே தெரிகிறது. ஜனவரி 9ஆம் திகதி தேர்தலை நடத்துவது குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சில சமயம் திகதிகள் மாறினாலும் ஜனவரி மாதத்தில் நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டிருப்பதில் மாற்றங்கள் நிகழாது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் இரண்டாவது பதவிக்காலம் 2016ஆம் ஆண்டு முடிவடைகிறது. இரண்டாவது பதவிக் காலத்தின் நான்காம் ஆண்டு, இந்த வருடம் நவம்பர் மாதம் 18ஆம் திகதி பூர்த்தியாகிறது. நவம்பர் 18ஆம் திகதிக்கு பின்னர், தேர்தல் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஜனாதிபதி ஒருவர் பதவியேற்று நான்கு வருடங்கள் நிறைவடைந்ததன் பின்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் அதிகாரம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மஹிந்த ராஜபக்ஸ மூன்றாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் பங்குபற்ற முடியாது, அதற்கு சட்டத்தில் இடமில்லை என்ற வாதங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற போதிலும், சட்டத்தில் இடமிருக்கின்றது என ஜனாதிபதி தரப்பு அழுத்தமாக கூறி வருகின்றது. மஹிந்த ராஜபக்ஸ மூன்றாவது தடவையாக தேர்தலில் போட்டியிடுவது அரசியல் சாசனத்திற்கு முரணானது எனவும், அதற்கான ஆலோசனையை நீதிமன்றிடம் பெறமுடியாது எனவும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டிற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதால் நாட்டில் சர்வாதிகார ஆட்சியே ஏற்படும் எனவும் கூறுகின்றார். ஆனால், யார் என்ன வாதத்தை முன் வைத்தாலும் மஹிந்த ராஜபக்ஸ மூன்றாவது தடவையும் தேர்தலில் போட்டியிடுவதை யாராலும் தடுக்க முடியாது. அதேபோல், ஜனாதிபதி தேர்தலையா நாடாளுமன்றத் தேர்தலையா முதலில் நடத்துவது என்பது குறித்த சர்ச்சைகளுக்கும் இடமில்லை. ஜனாதிபதி தேர்தலை பிற்போடுமாறு சில இடதுசாரி கட்சிகள் விடுத்திருக்கும் கோரிக்கைகளும் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது. இதில் ஜனாதிபதியின் முடிவும், சோதிடர்களின் ஆலோசனையும் முக்கியமானதாக அமைந்துள்ளது. ஆக, அறிவித்துள்ள படி ஜனவரி மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும். மீண்டும் மஹிந்த ராஜபக்ஸவே ஜனாதிபதியாக வருகின்ற வாய்ப்பே உள்ளது என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

ஏனெனில், ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ளும் எதிர்க்கட்சிகளின் வேலைத் திட்டங்கள் முறையாக நடத்தப்படவில்லை. நாட்டில் ஆட்சிமாற்றம் தேவை என்று கூறிவரும் எதிர்க்கட்சிகள் ஒரு பொது வேலைத் திட்டத்தில் இறங்கவில்லை. பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்பது குறித்தும் அவர்களிடையே பல்வேறு முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில் சரியானதொரு தீர்மானத்திற்கு அவர்களால் வர முடியாமலுள்ளது.

எனவே, பொதுக் கூட்டணிக்கும் வாய்ப்பில்லை. இறுதியில், ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளராகவுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த நிலைமைகளை வைத்து பார்க்கின்ற போது மஹிந்த ராஜபக்ஸவே மீண்டும் ஜனாதிபதியாவார் என்பதை அனுமானிக்க முடியும். இதற்கு பெரிய ஆய்வுகள், கருத்துக் கணிப்புக்கள் தேவையில்லை. ஆனால், எதிர்வரும் இந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றார்கள் என்ற விடயத்தை பார்க்கலாம்.



> சம்பந்தரின் கருத்தின் படி, தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து ஒரு சரியான தீர்வை முன்வைக்கும் வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் படி சில சமங்களில் தமிழ் மக்கள் கோரப்படலாம். தமிழ் மக்களின் வாக்குகள் தங்களுக்கு அவசியம் என்று கருதும் ஜனாதிபதி வேட்பாளர் தமிழ் மக்களிடம் அவர்களுக்கான வாக்குறுதிகளை வழங்க வேண்டியது அவசியமாகின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இது குறித்து கருத்து தெரிவித்திருக்கின்றார். நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் குறித்து உரிய தருணத்தில் முடிவெடுக்கப்படும் என்று அவர் கூறுகின்றார். தமிழ் மக்களின் கருத்துக்களைப் பெற்று அதன் அடிப்படையில் நகர்வுகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் சொல்கிறார். இறுதி முடிவு உரிய காலத்தில் அறிவிக்கப்படும் என்பதுடன் தமிழ் மக்களின் நலன்களையும் எதிர்காலத்தையும் பாதிக்காதவாறு அது அமைந்திருக்கும். குறிப்பாக தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் காணப்படும் தற்போதைய நிலைமைகள், இனப் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு தொடர்பில் அதிகூடிய கவனத்தையும் கருத்தில் கொண்டதாக எமது இறுதி முடிவு அமையும் என்றும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தரின் கருத்தின் படி, தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து ஒரு சரியான தீர்வை முன்வைக்கும் வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் படி சில சமங்களில் தமிழ் மக்கள் கோரப்படலாம். தமிழ் மக்களின் வாக்குகள் தங்களுக்கு அவசியம் என்று கருதும் ஜனாதிபதி வேட்பாளர் தமிழ் மக்களிடம் அவர்களுக்கான வாக்குறுதிகளை வழங்க வேண்டியது அவசியமாகின்றது.

நீண்டகாலமாக இழுபட்டுவரும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு பற்றி மட்டுமல்லாமல் அவசியமாக தீர்வு காணப்பட வேண்டிய அவசர விடயங்கள் உள்ளன. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, தமிழ் பிரதேசங்களில் முற்று முழுதான சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தல், இராணுவத்தை தமிழ் பிரதேசங்களிலிருந்து மீளப்பெறல், காணிகள் சுவீகரிக்கப்படுவதை கைவிடுதல், வட மாகாணசபைக்கு உரிய அதிகாரங்களை வழங்குதல் போன்ற பல பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வாக்குறுதிகளை வழங்குபவர்களுக்கு தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை வழங்கலாம்.

தெற்கில் இன்று இனவாத சிந்தனைகள் மேலோங்கியுள்ள நிலையில், தமிழர்களுக்கான மேற்படி வாக்குறுதிகளில் சிலவற்றையேனும் வழங்கினால் அம்மக்களின் வாக்குகளை இழக்க வேண்டி வரும் என்ற நிலை வேட்பாளர்களுக்கு உள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ, இந்த தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை பெறவேண்டும் என்ற நோக்கில் மேற்குறித்த விடயங்களில் சிலவற்றிற்கான வாக்குறுதிகளை வழங்கினால் கூட தென்னிலங்கையிலுள்ள கடும்போக்கு கட்சிகள், அமைப்புக்கள் அவருக்கு எதிரான பிரச்சாரத்தை சிங்கள மக்கள் மத்தியில் மேற்கொள்ளும். அதனை மஹிந்த விரும்பமாட்டார். எனவே தமிழ் மக்கள் கேட்கும் வாக்குறுதிகளை அவரால் வழங்க முடியாது.

எதிரணி வேட்பாளர் ஏதாவது வாக்குறுதிகளை வழங்கினால் மஹிந்த தரப்பினரே அதற்கு எதிராக தெற்கில் பிரச்சாரம் செய்வார்கள். இந்நிலையில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு குறித்த விடயத்தை விடவும் ஏனைய மேற்குறிப்பிட்ட விடயங்களை தீர்ப்பதற்கான வாக்குறுதிகளை வழங்குவது கூட எவருக்குமே முடியாத சிக்கலான காரியம்தான். இந்நிலையில், தமிழ் மக்களும் இந்த ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்து ஒரு முடிவினை எடுப்பது சிரமமான காரியமே.

ஆனாலும், தமிழ் மக்கள் தரப்பிலிருந்து நியாயமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு, அவற்றை ஏற்றுக் கொள்பவர்களுக்கு வாக்களிக்க முடியும் என்பதை அறிவிக்கலாம். இதன் மூலமாக ஒரு கருத்தோட்டத்தை வெளியுலகிற்கு தமிழர் தரப்பு வெளிப்படுத்த முடியும்.

**- ஆதித்தன் -**

விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# அடமானக் கடனில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள்!

கனடிய மத்திய அரசு அடமானக்கடன் பெறும் முறையில் 2008 ஆம் ஆண்டிலிருந்து பல மாற்றங்களைச் செய்து வந்துள்ளது.

• பெற்ற அடமானக் கடனைத் திருப்பி அடைக்கும் காலத்தின் அளவைக் குறைத்தது.

• 2012 இல் கொண்டுவரப்பட்ட திட்டத்தின் படி வீட்டை அடமானம் வைத்து பெறும் Equity line of credit இன் பெறுமதியைக் குறைத்தது.

• அரசினால் கொண்டுவரப்பட்ட பல மாற்றங்களால், அரசின் இயல்பு நிலைக்காப்புறுதி (Default Insurance) பெற்று பெறப்படும் அடமானக்கடனில் இறுக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் அடமானக் கடன் பெறும் முறையில் இறுக்கமான நெருக்கடியான நிலைமை ஏற்பட்ட போதிலும் குறைந்த அளவிலான வட்டிவீதம் பெறக்கூடிய பல முறைகள் நடைமுறைக்கு வந்தன. இதனால் குறைந்த வீத அடமானக்கடன் பெறக்கூடியதாக உள்ளது. இந்நிலைமை இப்பொழுதும் தொடர்கின்றது.

**பொதுவாக இந்த அடமானக்கடன் மாற்றங்களால்;**

1. 40 வருடத்தில் திருப்பி செலுத்தக் கூடியதாக இருந்த அடமானக்கடன் 25 வருடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. (இதனால் மாதாந்த கட்டணம் அதிகரித்துள்ளது)

2. ஆதனம் வாங்குவதற்கு ஆகக் குறைந்த முதலீடு 5% ஆகும்.



3. ஆதனம் வாங்குபவர்கள், வாடகைக்கு விடுவதற்காக வாங்கும் ஆதனங்களிற்கு குறைந்தது 20% முதலீடு தேவைப்படும்.

• மறு நிதியுதவி 'Refinancing' செய்யும் போது ஆகக்கூடியது 80% வரையுள்ள பெறுமதிக்கே கடன் பெறமுடியும்.

• ஆகக்கூடிய கடனின் அளவுகோல் மொத்த வருமானத்தின் 39% ஆகக் குறைக்கப் பட்டது. முன்பு 44% ஆக இருந்தது. (அதாவது வீடு வாங்குபவர்களின் வருமானத்தின் குறைந்த பெறுமதியே அடமானக்கடனை திருப்பி செலுத்த பாவிக்க கூடியதாக உள்ளது. இதனால் அடமானக் கடன் பெறுவதற்கு கூடியளவு வருமானமே தேவைப்படலாம்)

• முன்னைய காலங்களில் 1 மில்லியனிற்கு மேலதிகமான ஆதனத்திற்கும் காப்புறுதி பெறக்கூடியதாக இருந்தது. இப்பொழுது காப்புறுதி பெற்று வாங்கக்கூடிய ஆதனத்தின் ஆகக்கூடிய பெறுமானம் 1 மில்லியனாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எவராயினும் 1 மில்லியனிற்கு அதிக பெறுமதி உள்ள வீடு, மனை வாங்க வேண்டுமாயின், குறைந்தது 20% முதலீடு செய்ய வேண்டும்.

இவ்வாறான மாற்றங்கள், சிலரினால் உடனடியாக ஆதனம் வாங்க முடியாத நிலைமையை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மையே. இதனால் மேலதிக பணத்தை சேமித்த பின்பே வீடு / மனை வாங்கக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான இறுக்கமான கடன் வழங்கும் முறைகளினால் உலகளாவிய ரீதியல் கனடிய நிதி நிறுவனங்களிற்கு சிறப்பான இடம் உண்டு. இவ்வாறான முறைகளினால் தான் அமெரிக்காவிலும், உலகளாவிய ரீதியிலும் ஏற்பட்டது போன்றதொரு நிலைமை கனடிய பொருளாதாரத்தில் குறிப்பாக ஆதன விலையில் ஏற்படவில்லை. இன்றைய காலகட்டத்தில், உடனடியாக பெரிதான மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கமுடியாது. எதிர்காலத்தில் ஏற்படப்போகும் அடமானக்கடன் வட்டி அதிகரிப்பு, மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்றே எண்ணத் தோன்றினாலும் இவ்வட்டி வீத அதிகரிப்பு எப்ப ஏற்படும் என்பதே இன்றைய கேள்வியாக உள்ளது.

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

**தொடர் - 425**

• கனடிய பொருளாதாரம் நிதி நிறுவனங்கள் பற்றிய உலகளாவிய சிறந்த மனப்பான்மை குறைந்த வட்டிவீதம், எந்த காலகட்டத்தி லும் உடனடியாக விற்று வாங்கக்கூடிய வசதிகள் போன்றவை வெளிநாட்டு முதலீட்டவர்களின் முதலீட்டிற்கு கனடா ஒரு முக்கிய நாடாகக் கருதப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் ஒப்பிடும்போது கனடிய வீட்டின் விலை நியாயமானதாகவே தோன்றுவதாக ஆய்வாளர்கள் கூறிய போதிலும், கனடிய மக்களில் முதல் தடை-வயாக வீடு/மனை வாங்குபவர்களிற்கு இந்நிலைமை மிகவும் இறுக்கமானதாகவும் கஷ்டமானதாகவும் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.


**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



*Raja Mahendran,* P.Eng.
Broker / Owner

5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

* INDEPENDENTLY OWNED AND OPERATED

**LAND FOR SALE WITH BUNGALOW HOUSE**
- 2 Houses can be built severance available.
- Ready to build.
- Scarborough

**HOUSE FOR SALE**
**MARKHAM & STEELES**
3500 Sf. Ravine Lot. Walk-out bsmt. (Partially finished). Fully hardwood floor. 4 Washrooms. 6 Appliances. Close to TTC, school.
Asking price $899,900

**CONDO FOR RENT**
**HWY 427 & Dundas**
Brand new TRIDEL Condo. 2 Bedrooms, 2 Washrooms. swimming pool, Rec. room, 24 hrs. security, Vacant
***Asking $1400.00***

**HOUSE FOR SALE**
**MIDDLEFIELD & FINCH**
3 Bedroom house for sale. Well kept. Move in condition. Finished Bsmt with 1 bedroom, kitchen. Sep. entrance. North Agincourt location. Close to TST, school, HWY, GTA Square mall. 2 Fridge, 2 stove............
Asking price $599,000

**BRAND NEW- HOUSE FOR SALE**
**KENNEDY & SHAPPARD**
- 3800 / 4800 Sq.ft
- Starting price 1.3M

**BRAND NEW CONDO FOR SALE**
- One Bedroom condo. for sale.
- Close to Rogers Center & CN Tower
- Available January 2018.
- 2 Years rental Guranteed
- Starting $272,000
- ***No interim closing***

# ஆட்டம் காணும் டக் போர்ட் ஏமாற்றமளிக்கும் ஒலிவா சோ

கடந்த இதழில் ஜோன் ரோறி ( John Tory) பற்றி எழுதியிருந்தோம். இவ் இதழில் டக் போர்ட் (Doug Ford) மற்றும் ஒலிவா சோ (Olivia Chow) பற்றிப் பார்ப்போம்.

## டக் போர்ட்



ரொறொன்ரோ மாநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட டக் போர்ட்க்கு 50 வயதா கின்றது (1964-நவம்பர் 20). இவரது மனைவி ஹார்லா. நான்கு பெண் குழந்தைகளுக்குத் தந்தை. டெக்கோ லேபல் என்ற குடும்ப நிறுவனத்தின் முகாமைத்துவ இயக்குனர். தம்பி ரொப் போர்ட் சுகயீனமானதைத் தொடர்ந்து டக் போர்ட் களத்தில் இறங்கியுள்ளார். கடந்த தேர்தலில் 2ம் வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இம்முறை 2ம் வட்டாரத்தில் போட்டியிடவில்லை. தம்பி ரொப் போர்ட்டின் வெற்றிக்காக உழைக்கப் போகின்றேன் எனக் கூறியிருந்தார். ஆனால் உண்மைக் காரணம் தம்பி பல சட்டச் சிக்கல்களை சந்தித்துக் கொண்டிருக்கின்றார். ஏதாவது காரணத்துக் காக தம்பி போட்டியிட முடியாமல் போனால் தான் போட்டியிடலாம் என்பதே உள் நோக்கமாக இருந்திருக்கலாம். மேயர் பதவி குடும்பச் சொத்தாக வேண்டும் என்பது இவர்களது நோக்கமாக இருந்திருக்கலாம்.

இவர் செய்த சாதனைகள் இவை:
மாநகர வாழ் யூதர்களை கேலி செய்தார். "You know something, my doctor, my Jewish doctor, my Jewish dentist, my Jewish lawyer, my Jewish – hold it – accountant…"
டக் இருந்த வீட்டில் பணம் காணமல் போனமைக்காக குடும்ப உறுப்பினர்களை (மனைவி, பிள்ளைகள்) ஒரு தனியார் புலன் நிறுவனத்தின் மூலம் விசாரணைக்கு உற்படுத்தினார். ரொரன்ரோ பொலிஸ் தலைமை அதிகாரியைப் பற்றி உண்மைக்கு புறம்பான செய்தியைக் கூறியமைக்காக பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டார். தம்பி ரொப் போட்டின் மனைவியார் போலாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவரைப் பற்றி 1010 வானொலியில் கேலி செய்தார். சிபிசி வானொலிக்கு அளித்த செவ்வி ஒன்றில் போட்டியிடும் வேட்பாளர்கள் கூறாததை கூறியதாக கூறினார். இவருடன் உரையாடிக் கொண்டிருந்த வானொலி கலைஞர் மறுத்தும் தொடர்ந்து தவறான கருத்துக்களை கூறிக்கொண்டிருந்தார். தம்பி ரொப் போர்ட்டின் பிரச்சார கருத்துக்களையே இவரும் முன் வைக்கின்றார். ரொரண்ரோ மாநகரத்தின் முக்கிய பிரச்சினையான போக்குவரத்துக்கு சரியான திட்டங்கள் எதையுமே இவர் முன்வைக்கவில்லை. ஸ்காபரோ பகுதி மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து துயரங்களை இவரும் கண்டு கொள்ளவில்லை.

## ஒலிவா சோ



ஹொங்கோங்கில் பிறந்து 1970ல் கனடாவி ற்கு புலம் பெயர்ந்தார். 1957ம் ஆண்டு பங்குனி 24ல் பிறந்த இவருக்கு 57 வயதாகி ன்றது. ரொறொன்ரோ பல்கலைக்கழக கலைப் பட்டதாரியான இவர் நல்லதொரு ஓவியருமாவார். வன்முறையால் பாதிக்கப் பட்ட பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தீர்வுகள் என்ற விடயத்தை ஜோர்ஜ் பிறவுன் கல்லூரியில் போதித்து வந்தார். ஒன்றாறியோ கலைக் கல்லூரியில் ஓவியராகவும் கடமையாற்றினார். 1985ல் ரொறொன்ரோ கல்விச்சபை பொறுப்பாட்சி யராக போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதனைத் தொடர்ந்து 1991ல் மாநகர கவுன்சிலராக வெற்றி பெற்றார். 2005ம் ஆண்டு வரை கவுன்சிலராக கடமை யாற்றினார். 2006ல் நாடாளுமன்ற உறுப்பினராகினார். அதனைத் தொடர்ந்து 2008, 2010 தேர்தல்களிலும் வெற்றி பெற்றார். 2014ம் ஆண்டு மாநகர முதல்வராக போட்டியிடுவதற் காக நா.உ பதவியை இராஜினாமாச் செய்தார்.

இவர் கவுன்சிலராக இருந்த காலங்களில் வருமானம் குறைந்த மக்களுக்கு பல உதவிகளைச் செய்தார். வீடற்றோருக்கு அரச வீடமைப்புத் திட்டத்தில் வீடு பெறுவதற்காக போராடினார். இத்தேர்த லிலும் இவர் பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளார். ரொரன்ரோ மாநகரத்தி னுள் 200 கி.மீ துவிச்சக்கரவண்டி (சைக்கிள்) பாதை அமைத்தல், சிறிய வணிக நிறுவனங்களுக்கான வரியைக் குறைத்தல் போன்றவை முக்கியமானவை. பிரதான பிரச்சினையான போக்குவரத்துக்கு இவராலும் முறையான தீர்வு எதனையும் முன்வைக்க முடியாதுள்ளார்.

**- வினோதன் -**

ஒலிவா சோ, டக் போர்ட், ஜோன் ரோரி ஆகிய மூவரையும் ஒப்பிடும் போது பின்வரும் பெறு பேறுகளை கொடுக்கக் கூடியதாகவுள்ளது.

| ஜோன் ரோரி | ஒலிவா சோ | டக் போர்ட் |
|---|---|---|
| 6.5/10 | 4.5/10 | 3/10 |

# இரு உறுதிமொழிகளை தமிழர்களுக்கு முன்வைத்த நகர முதல்வர் வேட்பாளர் ஜோன் ரொறி

எதிர்வரும் ஒக்ரோபர் 27th, 2014 இல் நடைபெறவுள்ள ரொறொன்ரோ நகரசபை தேர்தலில் வெற்றியின் விளிம்பில் நிற்கும் நகரசபை முதல்வர் வேட்பாளர் திரு. ஜோன் ரொறி அவர்கள் கடந்த செப்ரெம்பர் 27, 2014 இல் ரொறொன்ரோவில் நடத்திய தமிழ் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் ரொறொன்ரோ வாழ் ஈழத்தமிழர்களுக்கு இரு பாரிய உறுதிமொழிகளை வழங்கியுள்ளார்.

அவையாவன 1. இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் கனடாவில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் ரொறொன்ரோ நகரத்துக்கும் ஒரு இணைப்பினை உருவாக்கி, இலங்கையின் வட, கிழக்கு பிரதேசத்தின் பொருளாதார, வர்த்தக, சமூக வளர்ச்சிகளுக்கு கூட்டாக கைகொடுத்து செயல்படுவது.

இது தொடர்பாக வடமாகாண சபை ஆணையாளர் திரு. சி. சிவா. கே. சிவஞானம் அவர்களுடன் தாம் ஏற்கனவே பேசியதாகவும், அடுத்த கட்டமாக வடமாகாணசபை முதல்வர், உறுப்பினர்கள், மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளை ரொறொன்ரோவுக்கு அழைத்து இவை தொடர்பாக பேச்சு வார்த்தைகள் நடத்தி தமது செயல்பாட்டினை ஆரம்பிப்பேன் என தெரிவித்திருந்தார். ஜோன் ரோறி முன்னர் இலங்கைக்கு பயணம் செய்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



2. ரொறொன்ரோவில் தமிழர்கள் செறிந்து வாழ்வதால், அவர்களின் சௌகரிய வாழ்வுக்கு என தமிழ் கலாச்சார மையம் ஒன்றினை முதியோர் நலன் வசதிகளுடன் உருவாக்கி கொடுப்பேன் எனவும் உறுதி மொழி வழங்கியிருந்தார்.

60 வயது நிரம்பிய, வெற்றி நிச்சயம் என நிற்கும் திரு.ஜோன் ரொறி அவர்கள் ஒரு பல்கலைக்கழக பட்டதாரி, வக்கீல் கனடாவில் முன்னணியில் நிற்கும் ஒரு தொழில் அதிபர், ஆங்கில வானொலி ஒலிபரப்பாளர் ஆவார். ஏற்கனவே ஒன்ராரியோ மாகாண கன்ஷவேட்டிவ் என பல்வேறு அரசியல் களங்களை சந்தித்தவர் என்பதுடன் 2003 ஆம் ஆண்டு நடந்த நகரமுதல்வர் போட்டியில் சொற்ப வாக்குகளினால் வெற்றி வாய்ப்பினை இழந்தவர் ஆவார்.

**- சிவ பஞ்சலிங்கம் -**

**அன்பான கனடா வாழ் என் தமிழ் உறவுகளுக்கு**

எதிர் வரும் ஒக்டோபர் 27. 2014 நடைபெறவுள்ள நகரசபை தேர்தலில் ஸ்காபுரோ 41வது தொகுதியான ரூஜ் றிவர் பகுதிக்கு நகரசபை வேட்பாளராக போட்டியிடுகின்றேன் என்பதை உங்கள் அனைவரோடும் பகிர்ந்து கொள்வதில் மனநிறைவும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். இதுவரை காலமும் சமூக சேவையாளராக, அரச ஊழியராக, கணக்காளராக, காப்புறுதி முகவராக, ஊடகவியலாளராக, தன்னார்வத் தொண்டராக என பல்வேறு துறைகளில் பல்வேறு திணைக்களங்களில் சுமார் 20 ஆண்டுகளாக கனடிய மண்ணில் பல்லின மக்களோடும் பணியாற்றிய சிவவதனி பிரபாகரனாகிய நான் எனது சேவைகளை இன்னமும் கனடிய பல்லின தேசிய மக்களுடன் விரிவுபடுத்தும் பெருவிருப்பின் ஆர்வத்தினாலும், அதனூடாக எம் இனத்திற்கும் ஏதேனும் அங்கீகாரம் பெற்ற நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையிலும், எமக்கான எம்மை அடையாளப்படுத்தும் குரல் ரொறன்ரோ நகரசபையிலும் ஒலிக்க வேண்டும் என்பதை மனதில் கொண்டும், பல அன்புறவுகளின் வேண்டுகோளுக்கு அமையவும் எதிர் வரும் நகரசபை தேர்தலில் வலிமையான நம்பிக்கையோடு களமிறங்கியுள்ளேன். எனது தொகுதியிலுள்ள அனைத்து மக்களின் சனநாயக குரலாகவும் மக்கள் எதிர்பார்க்கும் நன்மை நோக்கிய மாற்றங்களுக்காகவும் எனது குரல் நேர்மையாகவும் வலிமையாகவும் என்றுமே ஒலிக்கும் என்பதை இத்தால் உறுதியாக மொழிகின்றேன். என் ஆற்றல்களையும் உணர்வுகளையும் உழைப்பையும் கனடிய தேசியத்திற்கு பயனளிக்கச் செய்ய என்னைத் தெரிவு செய்வதற்கான உங்கள் அன்பான வாக்குகளையும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெரிதும் நல்குங்கள் என பணிவோடு வேண்டுகின்றேன்.

**நெஞ்சார்ந்த நன்றிகளுடன்**
என்றும் உங்கள் அன்பின்
உங்களில் ஒருத்தி
**சிவவதனி பிரபாகரன்**

**சிறிலங்கா அரசாங்கத்தினால் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றம், தொடர்ச்சியாக நடத்தப்படும் மானுடத்திற்கு எதிரான குற்றம் மற்றும் இனப்படுகொலை / இனஅழிப்பு ஆகியவற்றுக்கு எதிராக உலகளாவிய நீதியல் மேற்கொள்ளப்பட்டுவரும் நீதிக்கான போராட்டத்தில் என் தமிழின உறவுகளுடன் தோளோடு தோள் நிற்பேன்.**

20 Nugget Avenue, Scarborough , ON M1S 3A7
647 706 4925
sivavathaniprabaharan1@gmail.com
www.sivavathani.com

மாற்றத்திற்கான ஒரு குரல்
# சிவவதனி பிரபாகரன்
வாக்களியுங்கள்




**COUNCILLOR** SCARBOROUGH ROUGE RIVER **WARD 41**

# நகரசபைத் தேர்தல் - தமிழ் வேட்பாளர்கள்

எதிர்வரும் ஒக்ரோபர் 27, 2014 இல் நடைபெற உள்ள நகர-சபைத் தேர்தலில் போட்டியிடும் 31 தமிழ் வேட்பாளர்களிடம் பின்வரும் கேள்விகள் விளம்பரம் சார்பில் கேட்கப்பட்டன. அவர்கள் அளித்த பதில்களில் இதுவரை விளம்பரம் பத்திரிகைக்கு கிடைக்கப்பெற்றவை.

A. வேட்பாளர் தொகுதியில் உள்ள முக்கிய 3 பிரச்சினைகள்.

B. அதற்கு அவர்கள் முன்வைக்கும் தீர்வுகளும், அவர்கள் ஏனைய போட்டியாளர்களிலிருந்து எவ்வாறு வித்தியாசப்படுகிறார்கள் என்றும், மக்கள் ஏன் அவர்களுக்கு வாக்களிக்கவேண்டும் என்றும் கேட்டிருந்தோம்.



## ருக்ஷான் பரா

யோர்க் பிராந்தியம் ஆங்கில பாடசாலைசபை

மாக்கம் 4 & 5 ஆம் வட்டாரம்

A. 1. தமிழ் மாணவர் களுக்கு பிரச்சினைகள் ஏற்படும் போது அவர்களுடைய பெற்றோர்கள் தமிழ் மொழியிலேயே உரையாடுவதற்கு ஒரு பிரதிநிதி இல்லை.

2. தற்போதைய கல்விப்போதனை முறையில் மாணவர்களின் விசேட தேவைகளை கவனிப்பதற்கு போதிய வசதிகள் இல்லை.

3. புதிய தொழில் நுட்ப கல்விமுறைகள் தற்போது பாடசாலைகளில் இல்லை.

B. கடந்த ஐந்து வருடங்களாக பிள்ளைகளின் பிரச்சனைகளுக்காக பெற்றோருடன் கதைத்து இருக்கின்றேன். மற்றும் 10 வருடங்களுக்க மேலாக பாடம் சம்பந்தமாக மாணவர்களுக்கு உதவி புரிந்திருக்கின்றேன்.

நான் சமூகத்தொண்டில் ஈடுபட்டிருந்த காலத்தில் பல பெற்றார் என்னிடம் தங்கள் பிள்ளைகளின் பாடசாலை சம்பந்தப்பட்ட பிரத்தியேகத்தேவை பற்றி கலந்து உரையாடி இருக்கின்றனர். என்னுடன் போட்டியிடும் மற்ற வேட்பாளர்களுடன் ஒப்பிடும்போது நான் இத்தொகுதியில் வாழ்வதுடன் இங்குள்ள பாடசாலைகளுக்கு பல மாணவர்களைப் பிரதிநிதிப்படுத்தி சென்று அவர்களது கல்வி சம்பந்தமான விடயங்கள் பற்றி பாடசாலை நிர்வாகத்துடன் உரையாடி இருக்கிறேன்.

நான் ஒன்ராரியோவிலேயே ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி பயின்றுள்ளதால் எனக்கு ஒன்ராரியோவின் கல்வி அமைப்பு முறைபற்றி நன்கு தெரியும். ஒரு பட்டதாரியான நான் எனது வேலையை துறந்துவிட்டு மாணவர்களின் நலனை நோக்கமாகக் கொண்டு உழைக்க முன்வந்துள்ளேன். இதனால் என்னை உங்கள் தொகுதியின் பாடசாலை உறுப்பினராக தெரிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலதிகமாக அறிந்து கொள்ள - www.rukshanpara.com

**வேறு தமிழரும் இவ் ஒன்ராரியோ மாகாண தேர்தலில் உள்ளூராட்சி மன்ற தலைவராகவோ, உள்ளூராட்சிமன்ற உறுப்பினராகவோ அல்லது பாடசாலை சபை உறுப்பினராகவோ வர போட்டியிடக்கூடும். 31 வேட்பாளர்களுடைய தகவலே விளம்பரத்திற்கு இதுவரை கிடைத்துள்ளது.**

# ரொறொன்ரோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி




ரொறொன்ரோ மாநகர சபை தலைவராக தெரிவு செய்யப்பட்டால் இலங்கை வடமாகாண சபை முதல்வர் விக்னேஸ்வரனுக்கு அவரது மாகாண சபை உறுப்பினர்களுடன் ரொறொன்ரோ மாநகருக்கு வருமாறு CVK சிவஞானம் அவர்களூடாக அழைப்பு விடுவேன் எனவும் தெரிவித்தார்.

ஜோன் ரோறி ரொறொன்ரோவில் உள்ள தமிழர் அமைப்புக்களை ஒன்று சேர்த்து தமிழ் கலாச்சார மையம் ஒன்றையும் வயது முதிந்தவர்களை பராமரிக்கும் வசதியுடைய இல்லம் ஒன்றையும் அமைக்க ரொறொன்ரோ மாநகர சபை எவ்வாறு உதவ முடியும் என தான் ஆராய்வேன் என உறுதி அளித்தார்.

இவற்றை விட இந்த ஊடகவியலாளர்கள் மாநாட்டில் ஜோன் ரோறி தனது கொள்கைகளான ரொறொன்ரோ மாநகரில் போக்குவரத்து வசதிகளை முன்னேற்றுவது, வியாபார நிறுவனங்களை ரொறொன்ரோ மாநகரில் முதலிட ஊக்குவித்தல், எவ்வாறு வேலை வாய்ப்பை அதிகரித்தல், இளையோர் வேலையின்மையின் அளவை குறைத்தல் போன்றவை பற்றியும் விபரித்தார்.

## விளம்பரத்திற்கு இதுவரை கிடைத்த தகவல்களின்படி பின்வரும் 31 தமிழ் வேட்பாளர்கள் இம்முறை நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

# *Ontario Municipal Election 2014*

| No. | Candidate Name | Municipal | Position | Ward |
|---|---|---|---|---|
| 1 | Balachandran Niranjan | Toronto | Councillor | Ward 37 |
| 2 | David Thomas | Toronto | Councillor | Ward 38 |
| 3 | Sivavathani Prabaharan | Toronto | Councillor | Ward 41 |
| 4 | Neethan Sabaratnam | Toronto | Councillor | Ward 42 |
| 5 | Neethan Shan | Toronto | Councillor | Ward 42 |
| 6 | Venthan Ramana | Toronto | Councillor | Ward 42 |
| 7 | Ganesh Kulasekarampillai | Toronto | Councillor | Ward 42 |
| 8 | Ragu Thanabalasingam | Toronto | Councillor | Ward 44 |
| 9 | Neethra Vipulananthan | Toronto | Councillor | Ward 44 |
| 10 | Raj Subramaniam | Markam | Councillor | Ward 5 |
| 11 | Siva Sivagnanam | Markam | Councillor | Ward 5 |
| 12 | Logan Kanapathy | Markam | Councillor | Ward 7 |
| 13 | Sothy Sella | Markam | Councillor | Ward 7 |
| 14 | Vasu Murugesu | Markam | Councillor | Ward 7 |
| 15 | Joseph (Mohan) Remisiar | Markam | Councillor | Ward 8 |
| 16 | Susie Nadarajah | Whitchurch S | Councillor | Ward 6 |
| 17 | Senthuran Paramasamy | Whitchurch S | Councillor | Ward 6 |
| 18 | Cassian Joseph | Brampton | Councillor | Ward 2 & 6 |
| 19 | Kiru Kulendiren | Mississauga | Councillor | Ward 10 |
| 20 | Waran Vaithilingam | Ajax | Mayor | Town |
| 21 | Eli Sivalingam | Toronto Eng. | SB Trustee | Ward 1 |
| 22 | Pushpalatha Mathanalingam | Toronto Eng. | SB Trustee | Ward 13 |
| 23 | Parthi Kandavel | Toronto Eng. | SB Trustee | Ward 18 |
| 24 | Shopana Pannerselvan | Toronto Eng. | SB Trustee | Ward 20 |
| 25 | Jeevitha Deborah Lieberman | Toronto Eng. | SB Trustee | Ward 21 |
| 26 | Praveena Sathiyanatham | Toronto Eng. | SB Trustee | Ward 21 |
| 27 | Krishanthy Sarojkumar | Toronto Eng. | SB Trustee | Ward 21 |
| 28 | Mario Gunayagam | Toronto F Cath. | SB Trustee | Ward 4 |
| 29 | Rukshan Para | York Reg. Eng. | SB Trustee | Markam Ward 4 & 5 |
| 30 | Juanitha Nathan | York Reg. Eng. | SB Trustee | Markam Ward 7 & 8 |
| 31 | Sathiyanithi Sadagopan | Peel Reg. Eng. | SB Trustee | Mississauga Ward 6 & 11 |

# அமைதிக்கான 2014 ஆம் ஆண்டின் நோபல்பரிசு

அமைதிக்கான 2014 ஆம் ஆண்டின் நோபல் பரிசு இந்தியரான கைலாஷ் சத்யார்த்திக்கும் பாகிஸ்தான் சிறுமி மலாலாவுக்கும் வழங்கப்பட்டுள்ளது. நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நோபல் கொமிற்றியின் தலைவர் 'Thorbjørn Jagland' ஒக்ரோபர் 10, 2014 அமைதிக்கான நோபல் விருதுகள் பற்றிய அறிவிப்பை வெளியிட்டார். மொத்தம் 278 பேரின் பெயர் அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிசீலிக்கப்பட்டது. இறுதியாக இந்தியரான கைலாஷ் சத்யார்த்தி, பாகிஸ்தான் சிறுமி மலாலா ஆகியோருக்கு நடப்பாண்டின் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய பிரதேச மாநிலத்தில் பிறந்த கைலாஷ் சத்யார்த்தி டெல்லியில் வாழ்ந்து வருகிறார். இவர் தனது பச்பான் பச்சோ அந்தோலன் என்ற அமைப்பின் மூலம் சுமார் 80 ஆயிரம் குழந்தை தொழிலாளர்களை மீட்டு அவர்களது வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்துள்ளார். 1984ஆம் ஆண்டு முதல் பல்வேறு மனித உரிமை விருதுகளைப் பெற்றுள்ள சத்யார்த்திக்கு நடப்பாண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல் பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப் புற மாகாணத்தில் 1997ஆம் ஆண்டு பிறந்தவர் சிறுமி மலாலா. அப்பகுதியில் பெண்கள் கல்வி கற்க தலிபான் தீவிரவாதிகள் தடை விதித்திருந்தனர். தலிபான்கள் ஒடுக்குமுறை குறித்து பிபிசியின் உருது மொழி இணையதளம் ஊடக பரப்புரை மேற்கொண்டு வந்தார். பின்னர் வெளிப்படையாக தொலைக்காட்சியில் பேட்டியளித்தார் மலாலா. இதனால் தலிபான் தீவிரவாதிகள் 2012ஆம் ஆண்டு மலாலாவை கொல்ல முயன்றனர். தலிபான்களில் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த நிலையில் இங்கிலாந்தில் அடைக்கலம் புகுந்தார் மலாலா. அதன் பின்னர் தொடர்ந்தும் பெண்களின் கல்வி முன்னேற்றம் பற்றிய பிரசாரத்தை மேற்கொண்டு வருகிறார். மலாலாவின் பிறந்த நாளை ஐ.நா. 'மலாலா தினம்' என்று கடைபிடிக்க கேட்டுக் கொண்டது. பாகிஸ்தான் நாட்டின் முதலாவது அமைதி, உலக அமைதி அறக்கட்டளையின் 'தைரியத்துக்கான விருது' ஆகியவற்றை பெற்ற சிறுமி மலாலாவுக்கு நடப்பாண்டின் அமைதிக்கான நோபல் பரிசு



வழங்கப்பட்டுள்ளது. உலகிலேயே மிகச் சிறிய வயதில் நோபல் பரிசு பெற்றவர் என்ற பெருமை மலாலாவுக்கு கிடைத்துள்ளது.

17 வயதில் அதாவது இவ்வளவு இளம் வயதில் நோபல் பரிசு பெறும் முதல் நபர் மலாலா தான் என்பது குறிப்பிடத்தக்கது. அஸ்திரேலியாவில் பிறந்த இங்கிலாந்து இயற்பியலாளரான வில்லியம் லோரன்ஸ் பிராக் எக்ஸ் ரே மூலம் கிரிஸ்டல் உருவத்தை ஆய்வு செய்ததற்காக தனது தந்தை வில்லியம் ஹென்றி பிராகுடன் சேர்ந்து தனது 25 வயதில் 1915ம் ஆண்டு பிராக் இயற்பியலுக்கான நோபல் பரிசை பெற்றார். பிராக் தான் இளம் வயதில் நோபல் பரிசு பெற்றவர் என்ற பெருமையை முதன்முதலில் பெற்றார். பிராகி ன் 99 ஆண்டு கால சாதனையை மலாலா இன்று முறியடித்துள்ளார். ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் பிறந்த பொருளாதார நிபுணர் லியோனிட் ஹர்விச் தனது 90வது வயதில் நோபல் பரிசு பெற்றார். நோபல் பரிசு பெற்ற மிகவும் வயதானவர் ஹர்விச் தான்.

அமைதிக்கான நோபல் பரிசு வென்ற இந்தியாவின் கைலாஷ் சத்யார்த்தி மற்றும் பாகிஸ்தானின் மலாலாவுக்கு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். இதுகுறித்து ஒபாமா கூறியுள்ளதாவது: மலாலாவையும், கைலாஷ் சத்யார்த்தியையும் நானும், அமெரிக்க மக்கள் அனைவரும் வாழ்த்துகிறோம். மானுடத்தின் மதிப்பை உயர்த்த பாடுபடும் ஒவ்வொருவருக்கும் இந்த விருது வெற்றியை தேடிக் கொடுத்துள்ளது. இளம் வயதினரின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் காக்க வேண்டிய அவசர தேவை இருப்பதை உணர்ந்து நோபல் பரிசு கொமிற்றி, இந்த விருதை மலாலாவுக்கும், கைலாஸுக்கும் அளித்துள்ளது. சிறுவர்களுக்கு கடவுள் கொடுத்த திறமையை முழுமையாக பயன்படுத்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மலாலாவும், கைலாஸும் இந்த விருதுக்கு முற்றிலும் தகுதியானவர்கள். பதினேழு வயதில், உலகிலுள்ள மக்களை தன்பக்கம் திருப்பியவர் மலாலா. தாலிபான்கள் அவரது குரலை ஒடுக்க முற்பட்டபோது, தனது வலிமையால், அவர்களின் கொடுமைகளுக்கு பதிலடி கொடுத்தவர் மலாலா. கைலாஷ் சத்யார்த்தியை பொறுத்தளவில், தனது மொத்த வாழ்நாளையும், குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்புக்கு எதிராக பயன்படுத்தியுள்ளார். அவருக்கு இதுவரை எந்த விருதும் கிடைக்கவில்லை என்பதை வைத்து அவரது பணியை மதிப்பிடக்கூடாது. ஆனால் கைலாஷால் விடுதலையும், மரியாதையும் பெற்று வாழும் பல ஆயிரம் பேரின் நன்றியைத்தான், இவருக்கான அளவுகோலாக பார்க்க வேண்டும். மலாலாவும், கைலாஸும், தங்களது உயிரையை பணயம் வைத்து வருங்கால சந்ததிக்காக உழைத்துள்ளனர். இருவருமே வெவ்வேறு நாடுகளில் இருந்தும், வெவ்வேறு மதங்களில் இருந்தும், வெவ்வேறு தலைமுறையிலும் இருந்து வந்தவர்கள். ஒரு இந்து, ஒரு முஸ்லிம், ஒரு இந்தியன், ஒரு பாகிஸ்தானி. ஆனால் இருவருமே மனிதர்களுக்கான குறைந்தபட்ச மரியாதை, நீதியின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள். இவ்வாறு ஒபாமா தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# தமிழ் தேசியக்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

முரண்பாடுகளுக்கு கலந்துரையாடல்கள் மூலம் தீர்வு கண்டு அனைத்து கட்சிகளும் தங்கள் தங்கள் கட்சிகளின் நலன் பேணல் என்ற நிலையிலிருந்து விலகி ஒட்டுமொத்த அமைப்பாக உருமாற வேண்டும். அவ்வாறில்லையெனில், எதிர்வரும் காலங்களில் இக்கட்சிகள் தமிழ் மக்களால் புறக்கணிக்கப்படும் நிலையே ஏற்படும்.

போரின் பின்னர், பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை கொண்டு நடத்த தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்றனர். வட மாகாணசபை உருவாகி ஒரு வருடம் கடந்து விட்ட நிலையில், அதற்கான அதிகாரங்கள் முறையாக வழங்கப்படாததால் மக்களுக்கான பணிகளில் முழுமையாக ஈடுபட முடியாமலுள்ளது. இவ்வேளையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஏற்படும் முரண்பாடுகள் மக்களை மேலும் விரக்தி நிலைக்கே இட்டுச்செல்லும். இதனை, தமிழ் மக்களின் வாக்குகளினால் அவர்களின் பிரதிநிதிகளாக வந்துள்ளவர்கள் கருத்திலெடுத்து செயற்பட வேண்டும்.



## கனடா - ஒன்ராறியோ வாழ் இலங்கை ஓய்வூதியம் பெறுவோருக்கான முக்கிய அறிவித்தல்

ஒன்ராரியோ வாழ் இலங்கை ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் இயக்குனர் சபை, பின்வரும் அறிவித்தலை, மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறது.
ஓய்வூதியம் பெறுவோர், அவர்களின் மறைவின் பின் விசேட வங்கிக் கணக்கில் இருக்கும் அவர்களது பணத்தை பெறுவதற்கு ஒருவர் அல்லது இருவரை நியமிக்கலாம். இந்த நியமனத்தை செய்வதற்கு இதற்கான படிவத்தை நிரப்பி சம்பந்தப்பட்ட வங்கிக்கு அனுப்பி, பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மன்ற அங்கத்தவர்கள், பின் தரப்பட்டிருக்கும் நிர்வாகப் பணிப்பாளர்களுடன் தொடர்புகொண்டு, படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்: ரெனிஸ் : 647.285.9336 செயலாளர்: ரகு : 416.431.4360
உபதலைவர்கள்: ஸ்ரான்லி: 416.293.8592 - மாயா : 416.291.6667

TUTORING
KEEN TUTORING CENTRE
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
By Qualified & Experienced Tutors
➤ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➤ FUNCTIONS, ADV. FUNCTIONS
➤ CALCULUS & VECTORS, DATA MGT
➤ SCIENCE, MATH, ENGLISH
❖ REGULAR CLASSES
"Throughout the year"
Individual & Small Group classes, Individual care
Affordable fees
SUMMER CLASSES
"July- August"
GR 1- 12 , UNIV. 1st & 2nd Yr; IB classes
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

# SPECIAL DEAL FOR BUYERS & SELLERS

என் மூலம் வீடு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை அல்லது இந்தியா சென்று வர இலவச விமானச்சீட்டுகள் எந்தவொரு குலுக்கலும் இன்றி வழங்கப்படும். அல்லது வேண்டுமானால் அதற்கு சமமான பணம் வழங்கப்படும்.

| Purchase Price | Number of free tickets |
|---|---|
| 400,000 - 674,999 | 1 |
| 675,000 - 849,999 | 2 |
| 850,000 - 999,000 | 3 |
| 1,000,000+ | 4 |

**Also Free Moving**

## March Special For Sellers

My listing Commission is Flate Rate of - $2,999 + HST
My listing Commission For Condo. is Flate Rate of - $999 + HST

**Services Offered:**

- Open Houses
- Professional Photography
- Flyer Distribution for Your Property
- Home Staging
- Free Moving

## Get More $$$ For Your House By Calling Me!

என்னை அழைப்பதன் மூலம் உங்கள் கட்டணங்களை எவ்வாறு குறைப்பது உங்களின் வருமானத்துக்கு ஏற்ப வீடுகளை எவ்வாறு தெரிவு செய்வது போன்ற பல்வேறு விடயங்களுக்கான ஆலோசனைகளை வழங்கி உங்கள் முதலீட்டுக்கான உச்ச பயனை அடைய என்னை அழையுங்கள்.

**(This Deal Start From March 01st to November 30th)**



## Lourdson Antonipillai

(Sales Representative)

**Dir: 416.738.8824**

**Offi: 905.201.9977**

HomeLife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, #205, Markham ON, L3S 4N8

*Independently Owned & Operated

# இறந்தவர் யார்?

போராடினாள் ஒரு மாணவி
பல மாதங்கள்
உயிருக்காக!
போராடினர் வைத்தியர்
அமெரிக்காவில்
அவளுக்காக!



மூன்று மணிநேரம்
முற்றாக அவளை
இறப்பில் கிடத்தி -
தலையைப் பிளந்து
மூளையில் வளர்ந்த
முளையைக் களைந்து
சிகிச்சையை முடித்து -
போக்கிய உயிரை
வரவழைத்தனர்
இருதயத்தைப் பிடித்து!

மறுவாழ்வு பெற்றவள்
அறுவை செய்தவரிடம் கேட்டாள்:

'அந்தச் சில்லுக் கத்தியின்
பெயர் என்ன டாக்டர்?'

சாதனை படைத்தவருக்குச்
சோதனை வந்தது!

'செத்துக் கிடந்த நீ
கத்தியைக் கண்டது எப்படி?'

'நீங்கள் சாகடித்தது
என்னையல்ல - என் உடலை!
நான்தான் நீங்கள் செய்த
சிகிச்சையை எல்லாம்
பார்த்துக்கொண்டிருந்தேனே!'

வியந்துபோனார்கள் விற்பன்னர்கள்!

நோயாளி கொடுத்தது
மெய்ஞ்ஞானப் பூட்டு!
அதனை
விஞ்ஞான வைத்தியர்கள்
திறக்க முயன்றார்கள்
அவளைக்
கேள்விக்குமேல் கேள்விகள் கேட்டு!



- தமிழ்வேள் விநாயகர் கந்தவனம் -

# காத்திருப்பு



ஆற்று நீரில் மீன்கள் கூட்டம்
அலை வரிசையாய் ஓடக் கண்டு கொக்கு
ஓடு மீன் ஓடி உறுமீன் வரும் வரை
ஓரத்திலே ஒற்றைகாலில் காத்திருப்பு

வானிலே பறவை இனம் இரைதேடி
வரிசை வரிசையாய் பறக்கக் கண்டு
தரையிலே வலை விரித்து வேடன்
வேட்டையாட பற்றைமறைவில் காத்திருப்பு

மேகத்தில் கருமுகில் கூட்டம் எங்கும்
மேவிய பரந்து செல்லக் கண்ட உழவன்
பெருமழை வரப் போகின்றது என்று
பெருமையுடன் மழைக்காக காத்திருப்பு

ஆபீசுக்குப் போகவென்று அவசர
அவசரமாய்
ஆடை அலங்காரம் செய்த வண்ணம்
வீட்டை விட்டு வெளியேறியவர்
வீதியிலே பேரூந்துக்காய் காத்திருப்பு

ஊர் அடங்கும் வேளை பார்த்து
ஊரவர் அறியாது வீடுபுகுந்து திருட
கள்வன் ஒருவன் பற்றை மறைவில்
கண் உறங்காமல் காத்திருப்பு

உரிமை இழந்து உடமைகள் இழந்து தம்
உயிருக்கு உயிரான உறவுகளை இழந்து
வாழ்வு வாழ்வாதரம் இழந்து விடியாத
இரவுக்குள்
மக்கள் தம்விடியலுக்காய் காத்திருப்பு

**கவிநாதம் - பரந்தாமன்**

**Computek College**
BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY
Registered as a private career college under the Private Career Colleges Act, 2005

Enroll in a
Diploma Course
and receive a
FREE Laptop
(Offer valid until Dec 31, 2014)



Food Handler Training
Saturday October 25th
Bank Teller Course
Wednesday October 15th

LAID OFF?
UNEMPLOYED?
NEW SKILLS!
NEW CONFIDENCE!!
NEW CAREER!!!



SECOND CAREER
&
OTHER FUNDING, OPTIONS AVAILABLE
CALL FOR DETAILS

DIPLOMA COURSES

| | |
|---|---|
| Enterprise Network Engineering | 50 wks |
| Community Services Worker | 50 wks |
| Int. Application Development | 50 wks |
| Early Childcare Assistant | 38 wks |
| Personal Support Worker | 32 wks |
| Accounting & Payroll Admin | 35 wks |
| Medical Office Admin | 28 wks |
| Network Engineering | 28 wks |
| Computerized Accounting | 26 wks |
| Business Administration | 26 wks |

PART-TIME COURSES (WEEKEND /EVENING)
Bank Teller, MS Office
Food Handler, Food Service Worker
AccPac, Simply Accounting, Quick books
Exam Prep: A+, MCSA, MCSE
ICDN 1, ICDN 2, Canadian Securities Course
C/C++, C#, Java, VB.net, HTML, SQL
Medical Coding & Billing
CPR & First Aid

WWW.COMPUTEK.EDU
Financial assistance may be available for those who qualify

Toronto Campus
301-2347, Kennedy Rd.
(Kennedy/Sheppard)
416-321-9911

Markham Campus
202 - 7 Eastvale Drive
(Markham / Steeles)
905-471-3344

Scarborough Campus
248-2390 Eglinton Ave E
Kennedy/Eglinton)
416-285-9941

# உடலைக் கவனியுங்கள்!




## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

உடலில்லையேல் உயிர் இல்லை. உடல் என்பது சுவர். இதை வைத்துத்தான் சித்திரம் எழுதவேண்டும். அதாவது வாழ்க்கை நடத்த வேண்டும். உலகில் வாழ இன்றியமையாத உடலை வெறுக்க கூடாது. பிறப்பில் எப்படி அமைந்ததோ என்றைக்கும் அப்படித்தான் இருக்கும். கறுப்போ - சிவப்போ, அழகோ - அழகின்மையோ, உயரமோ - குள்ளமோ, கம்பீரமோ - ஊனமோ எந்த உருவத்தில் எந்த நேரத்தில் பிறந்திருந்தாலும் முதலில் வாழ வேண்டுமென்று நினையுங்கள். உடல் எப்படியிருந்தாலும் உள்ளத்தில் தெளிவாக இருங்கள் பின் ஒருவிதமான கவர்ச்சி உங்கள் தோற்றத்திற்கு வந்துவிடும்.

முகத்தை நன்கு கழுவி சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். அழுக்கு, எண்ணெய் படிய விடாதீர்கள். சிலர் முகத்தில் எண்ணெய் வழியும். இன்னும் சிலர் முகத்தில் வியர்வை வழியும். பலர் முகத்தில் அசடு வழியும். எது வழிந்தாலும் அதனை துடைத்து சுத்தமாக வைத்திருங்கள். இது ஒரு கவர்ச்சித் தோற்றம் தரும்.

எவ்வளவு அழகான முகம் உடல் இருந்தாலும் அழுக்கும் கெட்ட வாடையும் இருந்தால் கவர்ச்சியாக இருக்குமா? சிறு பிள்ளைகளைப் பார்த்தால் சிலர் முகத்தில் ஜொள்ளு வழியும், கண்ணில் பீளை, மூக்கில் காய்ந்த சளி, காதில் அழுக்கு. எனவே இதனைக் கழுவி தூய்மையாக வைத்திருந்தால் அது பிறரைக் கவரும். இவ்வாறு உடலையும் முகத்தையும் பளிச்சென்று வைத்திருப்பது மறு பாலினத்தைக் கவர்ந்திட மட்டுமன்றி தினமும் எத்தனையோ பேர்களைப் பார்க்கிறோம். பலரது உதவிகளைப் பெறுகிறோம். வேலைத்தளத்தில் பலருட னும் இணைந்து பழகி அவர்களது அன்பையும் ஆதரவையும் பெறவேண்டுமா யின் ஓரளவுக்கேனும் கவர்ச்சியான தோற்றம் இருக்க வேண்டும். நேர்முகப் பரீட்சையில் இது மிகவும் அவசியமானது. எந்த விடயத்திலும் தோற்றம், ஆளுமை (Personality) என்பது அதன் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும்.

கெந்தி நடப்பது, சாய்ந்து நடப்பது, ஆடி நடப்பது என்பது இக்காலத்து ஸ்ரைல் (Style) என்று சிலர் எண்ணக்கூடும். ஆனால் இந்த மாதிரியான செயல்கள் தமது தன்மையேயே அழித்துவிடும். நிற்கும்போது நிமிர்ந்து நிற்க வேண்டும். ஒருபக்கம் சாய்ந்து, முன்னால் வளைந்து ஒரு கையை இடுப்பிலோ அல்லது வேறு பொருளிலோ வைத்தபடி நிற்கக் கூடாது. உடலை நாம் இருக்கும் காலம் வரையும் எடுப்பான தோற்றத்துடன் வைத்திருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

உடலானது என்றும் நிலையான ஆரோக்கியத்துடன் இருந்தால் இவ்வுலகமே சொர்க்கமாகி விடும். எனவே இவ்வுலகில் வாழ பணம், மனைவி, மக்கள், வீடு, வாசல் எல்லாம் இருக்கிறதோ இல்லையோ உடல் நிச்சயம் வேண்டும். உடல் அழிந்தால் உயிரும் அழியும். உயிர் இருக்கும் கோயில் தான் உடல். எனவே அதன் மீது கவனம் செலுத்த வேண்டும். அதற்கு பலவிதமான பயிற்சிகளும், கருவிகளும் இப்போது



நிறைய இருக்கின்றன. அவை அனைத்தையும்விட செலவு இல்லாமலும் ஒரு உடலனாது படுக்கக்கூடிய அளவு இடத்தை பயன்படுத்தியே சிறந்த பயிற்சிகளைச் செய்து அற்புதமான உடல் மற்றும் மனம் சார்ந்த பலன்களை நமக்களிப்பதே யோகாசன பயிற்சியாகும்.

### உடலுக்கும் உயிருக்கும் யோகா

நாளமில்லாச் சுரப்பிகளைக் கசக்கி சரிவர சுரக்கச் செய்து உடலின் அனைத்துப் பகுதி களுக்கும் உறுப்புகளுக்கும் அழுத்தத்தைக் கொடுத்து சுகத்தைத் தருவதே இந்த யோகா பயிற்சிதான். ஒருவரது முள்ளந்தண்டின் இயக்கத்தைப் பொறுத்தே அவரது உடல் ஆரோக்கியமும் இருக்கும். இந்த முதுகுத்தண்டு இளமையாக நன்கு வளையக்கூடிய நிலையிலிருந்தால் தான் மனிதனின் இளமையும் அழகும் நிலைத்திருக்கும். வந்த நோய்களை குணமாக்குவதுடன் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படச் செய்து எந்த நோயையும் வராமல் தடுப்பதற்குத்தான் இந்த ஆசனப்பயிற்சி பேருதவியாகின்றது.

### தூய்மை

முதலில் அகச் சுத்தத்தை நோக்கினால் பெரும்பாலானோர் தமது உடலை நன்கு கழுவி பகட்டான ஆடைகளையும் வாசனைத் திரவியங்களையும் பாவித்து வெளியில் உலாவித் திரிவார்கள். ஆனால் உடலிலுள்ள கழிவுகள் முறையாக வெளியேற்றப்பட்டு உள்உறுப்புக்களைச் சுத்தமாக வைத்திருப்பதில் அக்கறை கொள்வதில்லை. அந்த வகையில் நுரையீரல் கழிவுகள் சளியாகவும் பெருங் குடல் சிறுகுடல் போன்றவற்றிலுள்ள கழிவுகள் முழுமையாக மலமாகவும், சிறுநீராகவும், வியர்வையாகவும் வெளியேற் றப்படுவது தான் மிகுந்த ஆரோக்கியம் தரும் அடுத்து புறச்சுத்தத்தை எடுத்துக் கொண்டால் வீட்டில் அதிவிலை உயர்ந்த பொருட்களை வாங்கிக் குவித்திருப்பார்கள். ஆனால் அதனை பல நாட்களாக சுத்தம் செய்ய நேரமின்றி விட்டுவிடுவார்கள். உதாரணமாக தொலைக்காட்சிப் பெட்டியில் கை வைத்து பாருங்கள். கால் அங்குலம் தூசிகூட படிந்திருக்கலாம். இவ்வாறான நிலைமையில் அந்த வீட்டிலுள்ளவர்கள் ஆஸ்துமா மற்றும் இதர நோய்களால் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

அதை எல்லாம் விடுங்கள் நம் கால் பாதங்கள் எவ்வளவு உழைக்கின்றன? அவற்றைக் கழுவி சுத்தமாக வைத்துக் கொள்கிறோமா? விரல்களின் இடுக்கில் படிந்திருக்கும் அழுக்கை எப்போதாவது துடைத்தோமா? அந்த பாதங்கள், குதிக்கால் நம்முடையது இல்லையா? அடுத்து கைவிரல் நகங்களின் இடுக்கு களில் படிந்திருக்கும் அழுக்குகளை எப்போதாவது சுத்தம் செய்தோமா? இவற்றை உணர்ந்து அனைவரும் செயல்படவேண்டும்.

### இனிய வாழ்விற்கு

இனிய வாழ்விற்கு உடலின் எல்லா உறுப்புகளும் சுத்தமாகவும், ஆரோக்கியமாவும் இருக்க வேண்டும் இதன்போதுதான் மற்றவர்கள் மட்டுமன்றி உங்களையே நீங்கள் விரும்புவீர்கள். ஒரு கவர்ச்சி உங்களிடமிருக்கும். உங்களைக் காணும்போதே பிறர் மகிழ்வோடு வரவேற்பர். நினைத்த காரியம் கைகூட இது மிகவும் அவசியம்.


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4





ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

# அன்புடைமை - 4

திருவள்ளுவரின் 74வது குறளில் இருந்தே இந்த இதழின் தொடர் கட்டுரையை ஆரம்பிப்போம்.

'அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும் நண்பு என்னும் நாடாச் சிறப்பு'



இந்தக் குறளிற்குப் பரிமேலழகர் 'ஒருவனுக்குத் தொடர்புடையார் மாட்டுச் செய்த அன்பு அத்தன்மையால் பிறர் மாட்டும் விருப்பமுடையமையைத் தரும். அவ்விருப்பம் உடைமைதான் பகையும் நொதுமலும் இல்லையாய் யாவரும் நண்பு என்று சொல்லப்படும் அளவறந்த சிறப்பினைத் தரும்.' என்றவாறு பொருள் உரைத்துள்ளார். 'அன்பு பிறரிடம் பற்றுள்ளம் கொள்ளச் செய்யும். அந்த உள்ளம் நட்பு என்னும் பெருஞ்சிறப்பை உருவாக்கும். 'என்று கலைஞர் இதற்கு விளக்கம் கொடுத்துள்ளார். 'அன்பு பிறரிடம் விருப்பம் உடையராக வாழும் தன்மையைத் தரும். அஃது எல்லாரிடத்தும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும்.' என்று மு.வ விளக்கம் கொடுத்துள்ளார். 'அன்பு ஆசையை உண்டாக்கும். அது நட்பையும் உண்டாக்கும்.' என்று சாமி சிதம்பரனார் விளக்கம் கொடுத்துள்ளார். இந்தக் குறளின் மூலம் நட்பிற்கு அன்புடைமை அவசியம் என்பது தெரிகின்றது. மனிதர்களாகிய நமக்குப் பலவிதமான இலக்குகள் (Goals) உள்ளன. நமக்கு இறைவனோடு உள்ள உறவை வளர்த்துக் கொள்ளுதல், உயர்ந்த ஆன்மீக வளர்ச்சி நிலைகளை நோக்கி நகருதல் போன்றவற்றை ஆன்மீக இலக்கு (Spiritual Goals) எனலாம். நாம் பெற்ற அறிவைப் பிறருக்கு கொடுத்தல், சமூக நலனுக்குப் பங்களிப்புச் செய்ய விருப்பத்தையும் ஆற்றலையும் உருவாக்குதல் போன்றவற்றை சமூகநல இலக்கு (Social Welfare Goals) எனலாம். இவ்வாறே உறவாடல் திறன் இலக்குகள் (Relationship Skills Goals) என்றும் ஒருவிதமான இலக்கு நம்மிடம் காணப்படுகின்றது. உறவாடல் திறன்களைக் கற்றுக் கொள்ளலும் நமக்கு வேண்டிய முக்கியமான இலக்காக இருப்பது நல்லது. நாங்கள் சமூகத்தில் உள்ளவர்களுடனும், நம்முடன் நெருக்கமாகப் பழகுபவர்களிடமும் நல்ல உறவைக் கொண்டிருப்பதற்கு வேண்டிய திறன்களைக் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் நமக்கு உள்ளது. மற்றவர்கள் நம்மிடம் ஏதாவது கூறும்பொழுது குறுக்கீடு செய்யாது நன்கு கவனித்து கேட்டல், மிகவும் கனிவாக அன்பைப் பகிர்ந்து உரையாடுதல், நாங்கள் உரையாடும் பொழுது மற்றவர்களின் முகத்தைப் பார்த்து பேசுதல், கோபத்தை நெறிப்படுத்திக் கொள்ளுதல், மற்றவர்களுடன் திருப்தியாக நல்லுறவை ஏற்படுத்தியும், பேணியும் கொள்ளுதல், குடும்ப உறுப்பினர்களிடமும், தொழில் இடத்தில் உள்ளோருடனும் நல்ல உறவைக் கொண்டிருத்தல் போன்ற இலக்குகளை நாம் கொண்டிருத்தல் வேண்டும்.




மேலும் மற்றவர்களின் தேவைகளை அடையாளம் கண்டு அவற்றைப் பொருத்தமான முறையில் பூர்த்தி செய்து வளர்ச்சி தரும் தொடர்பாடலில் ஈடுபடுவதன் மூலம் ஆரோக்கியமான உறவுநிலை ஏற்படும். பிறரை மன்னித்து அன்பாகவும், ஒற்றுமையாகவும் இருத்தலும் உறவாடுதலில் முக்கியமானது. உறவாடலில் முக்கியமான ஒரு நல்ல பண்பாக உண்மைத் தன்மையோடு பழகுவதைக் குறிப்பிடலாம். 'எமது உண்மையான அக உணர்வுகள், சிந்தனைகள், மனப்பாங்குகள் என்பவற்றைப் புறநடத்தையிலும், பொருத்தமாக வெளிப்படுத்தலே உண்மைத் தன்மை' என அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் அவர்கள் தனது 'ஆளுமை மலர உள ஆற்றுப்படுத்தல்' என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆழமான அன்பு, அக்கறை போன்ற நற்பண்புகளைக் கொண்டு இருத்தல் உறவாடலில் முக்கியமானது. மற்றவர்களுடன் பழகும் பொழுது நாம் ஆற்றல் நிறைந்தவர்கள் என உணர்வதோடு மற்றவர்களையும் அதே உணர்வோடு வாழ அனுமதித்தல் முக்கியமானது. திறந்த மனப்பான்மையுடன் நாம் பழகவேண்டும். 'வாழ்க்கை என்ற இருட்டிலே மனிதனின் காலடிகளை வழிநடத்துவது அன்பு என்ற ஒளி' என்றும் 'அன்பு பிரதியுபகாரத்தை எதிர்பார்ப்பதில்லை. அன்பே அதன் சன்மானம்' என்று சாயிபாபா கூறியுள்ளார். சுயநலம் கொண்டவர்களாக மனித இனம் உள்ளது. காகங்கள் உணவைக் கண்டதும் கரைந்து ஏனைய காகங்களையும் வரவழைக்கும் உயர் பண்பைக் கொண்டுள்ளன. ஒரு எறும்பு சர்க்கரையைக் கண்டதும் ஏனைய எறும்புகளை கூட்டிச் சென்று பகிர்ந்து உண்கின்றன. இவற்றிடம் இருந்து மனிதர்களாகிய நாம் சில நல்ல பண்புகளைக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய ஒற்றுமை மனிதர்களிடம் இல்லாது இருப்பது மிகவும் வேதனைக்குரியது. தேசம், மதம், குலம் போன்ற வேறுபாடுகள் இன்றி சகோதர உணர்வுடன் வாழ வேண்டும். கடவுளை அடைவதற்கும் வேண்டியது அன்புடைமையே என்று ஆன்மீகவாதிகள் கூறுவதை நாம் அறிந்துள்ளோம். 'அன்பே சிவம்' என்ற திருமூலரின் கூற்றும் அன்பிற்கும் கடவுளிற்கும் உள்ள தொடர்பைக் காட்டுகின்றது. அன்பு பிரபஞ்சத்தை உயிராக இயங்க வைத்திருப்பது என்பதும் ஆன்மீகக் கருத்தாகும். மனித மேம்பாடுகளின் தாயாக விளங்குவதும் அன்பு ஆகும். இத்தகைய மேன்மை பொருந்திய அன்பு எனும் சொத்தைக் கொண்டவர்களாக நாம் இருக்க வேண்டும்.

அன்புடைமை பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்...



- அகணி -
authorakani@yahoo.com

**AUM WELLNESS CLINIC IN**

**Healing Massage, Suffering From Pain?**

**Get Relief From:**

முதுகுவலி — கழுத்துவலி — தோள்பட்டைவலி
முழங்கால் வலிகள் — தீராததலைவலி — நரம்புப்பிடிப்பு
நீரிழிவு — தூக்கமின்மை — கொலஸ்ரோல்
உடல் எடை குறைத்தல் — இரத்த ஓட்டத்தை சீராக்குதல்
**போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்**

**Dr. Lata**

Based on Appointment



**Cell: 416.890.9217 Office: 647.304.6046**
**5215 Finch Ave. E. #220, Toronto, ON**

**LAW OFFICE**

**STEFANO FORTINI**

B.A., LL.B., Barrister & Solicitor

3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4

Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# உலகமயமாதல் - சினிமா

உலகமயமாதல் கூறிச் செல்லும் கருத்துக் களை மையமாகக் கொண்ட சில படங்களை முதலில் பார்த்துவிட்டு உலகமயமாதல் பற்றி விளக்கமாக பார்ப்பது நல்லது.

உலகமயமாதலின் முக்கிய கூறு கோப்பிரேட் உலகம். தமிழில் தனியார் கூட்டுத் தாபனங்கள். இன்று ஜி எட்டு நாடுகள் உட்பட்ட உலக நாடுகளில் தனியார் கூட்டுத்தாபனங்களின் தலைமை நிறுவனம் மற்றும் பெரும்பான்மை பங்குதாரர்கள் வேறு நாட்டைச் சேர்ந்த நிறுவனங்களாக இருக்கும். இவற்றிற்குள் கடும் போட்டியும் நிலவுகின்றது. இப்போட்டியினால் ஏற்படும் சட்ட மீறல்களை பல படங்கள் பதிவு செய்துள்ளன. அவ்வாறான படங்களில் ஒன்று இங்கே தரப்படுகின்றது. ரொரன்ரோ நூலகங்களில் இப்படத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

## Le Capital

1) மூலதனம் என்றவுடன் நினைவுக்கு வருவது மார்க்சின் மூலதனம் நூல். இன்றைய மூலதனம் பல்வேறு நிலைகளில் உருமாறி பூதகாரமாகிவிட்டது. பெரும் நிறுவனங்களின் உள்ளரங்கில் நடைபெறும் மோசடிகள் சாதாரணமக்களுக்குத் தெரிவ தில்லை. "நான் உங்களது ரோபின் கூட். வறியவர்களிடமிருந்து பறித்து செல்வந்தர் களிடம் கொடுப்பேன்" என்ற வாக்குறுதியுடன் பிரான்சின் முக்கிய வங்கியொன்றின் தலைவ ராக பொறுப்பேற் கின்றார் டிற்மார். இந்த இளம் வயது வங்கித் தலைவரை தங்கள் சொற்படி நடக்கத் தூண்டுகின்றார்கள் அமெரிக்காவின் மயாமி நகரை மையமாகக் கொண்டு இயங்கும் ஒரு ஹெட்ஜ் பன்ட் நிறுவன தலைமை முகவர்கள். இவர்கள் இந்த பிரான்ஸ் வங்கியில் அதிகளவு பங்குகளை வைத்திருக்கின்றார்கள். அது காணாது. ஆசை அதிகம். மேலும் பங்குகளை அதிகரிக்க வேண்டும். என்ன செய்வது? யப்பானில் நட்டத்தில் இயங்கும் வங்கியை வாங்கச் சொல்லி டிற்மாரை




தூண்டு கின்றார்கள். நிர்பந்திக்கின்றார்கள். மறுபுறம் தங்களது முதலீட்டுக்கான வெகுமதியை அதிகம் பெற விரும்பு கின்றார்கள். இதற்காக பிரான்ஸ் வங்கியின் தொழிலாளிகளை ஆயிரக்கணக்கில் வேலை நீக்கம் செய்யுமாறு வற்புறுத்துகின்றார்கள். டிற்மாரை தங்கள் பக்கம் இழுக்க ஒரு அழகான மொடலை பயன்படுத்துகின்றார்கள். டிற்மாருக் கு அழகிமேல் ஈர்ப்பு ஏற்பட்டு விட்டது என்று தெரிந்தவுடன் அவரை வைத்தே காயை வெகுகச்சிதமாக நகர்த்துகின்றார்கள்.

பெரும் நிறுவனங்களின் உள்ளரங்கில் நடக்கும் மோசடிகளை இடதுசாரி பிரெஞ்ச் இயக்குனர் Costa-Gavras சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். இது ஒரு நிறுவனத்துக்கு மட்டும் பொருந்தாது. இன்று நாடுகளையும் அதன் தலைவர்களையும் ஒரு குழுவே இயக்கிக் கொண்டிருக்கின்றது. இவர்கள் சாதாரண மக்களின் நலன்களை கணக்கிலெடுப்பதேயில்லை.

2) வைத்திய சேவை இன்று வியாபாரமாகி விட்டது. முதலில் மருந்துகளே மருத்துவ வியாபாரத்தின் பொருட்களாகவிருந்தது. இன்று பரிசோதனை இயந்திரங்கள் பெருகி விட்டதன் விளைவால் மருத்துவரை நாடும் ஒவ்வொருவரும் பல பரிசோதனைகளைச் செய்ய வேண்டும். இதற்காக தனிக் கட்டணம் அறவிடப்படும். பெரும்பாலான வளர்ந்துவரும் நாடுகளில் தனியார் மருத்துவ மனைகள் பரிசோதனைக் கூடங்களையும் நடத்திவருகின்றனர். சென்னை போன்ற நகரங்களுக்கு வெளிநாடு களில் இருந்து நோயாளிகள் வந்து குவிகின்றனர். ஒப்பீட்டளவில் மேற்கு நாடுகளை விட சென்னையில் மருத்துவச் செலவுகள் குறைவு. இதன் பாதிப்பு உள்ளூர் நோயாளி கள் கைவிடப்படுகின்றனர். மருத்துவர்களும் பணத்தையே குறியாகவும் கொள்கையாகவும் கொள்கின்றனர். அவ்வாறான ஒரு வைத்தியரைப் பற்றிய பதிவே இப்படம்




Kingsway-Queensway
சந்திக்கருகாமையில்

- எட்டு நிமிடங்களில் ரொரன்ரோ டவுன் ரவுன்
- இரண்டு நிமிடங்களில் கார்டினர் விரைவுப் பாதை
- நிமிடங்களில் பாடசாலை, வணிக மையங்கள்
- 24 மணிநேர பாதுகாவலர்கள் மற்றும் ரெனிஸ் கோர்ட், உடற்பயிற்சியரங்கம், உள்ளக,வெளியக நீச்சல் குளங்கள்
- குறைந்த விலையில் சகல வசதிகளும் உள்ளடங்கிய ஒரு அறை நவீன Condo

Ragunathan Mahesu - Sales Rep - 416-450-6833

VEEDU REALTY INC. BROKERAGE
416-759.6000

## Alik Sukh (Bengali Movie)

*Cast:* Debshankar Halder, Rituparna Sengupta, Sohini Sengupta, Biswanath Basu, Kharaj Mukherjee

*Direction:* Shiboprosad Mukherjee, Nandita Roy

மகப்பேறு மருத்துவர் கின்சுக் Dr. Kinshuk Guha (Debshankar Halder), நகரின் பிரபல்யமானவர். தனது திருமண நிறைவு நாளுக்கு மனைவிக்கு ஒரு புதிய அப்பார்ட் மென்ட்டை பரிசளிக்க விரும்புகின்றார். அதற்கான படிவங்களை பூர்த்திசெய்து கொண்டிருக்கும் வேளையில் தொடர்ச்சியாக மருத்துவமனையிலிருந்து தொலைபேசி அழைப்புக்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றிற்கு பதில் கூறி கட்டளையிட்ட போதும் சத்திர சிகிச்சையின் பின்னர் ஏற்பட்ட மருத்துவச் சிக்கலை நேரடியாக சென்று இவரால் தீர்க்க முடியவில்லை. நோயாளி கபிற்றா மொன்டல் இறந்து விடுகின்றார். இதனால் கோபமுற்ற நோயாளியின் குடும்பத்தினர் மருத்துவ மனையை சின்னாபின்னமாக்கி விடுகின்றனர்.

நோயாளியின் இறப்பிற்கு தனது கணவன் மருத்துவர் கின்சுக் காரணமாகிவிட்டார் என்பதை மனைவி Ramyani (Rituparna Sengupta) யால் தாங்கமுடியவில்லை. எப்போதும் நோயாளியின் மனச்சாட்சி ஆவியாக தொடருவதாக நினைத்துக் கொண்டிருக்கின்றார். இந்நேரத்தில் இவரது வயிற்றிலும் ஒரு சிசு வளரத் தொடங்குகின் றது. தான், தனது கணவன், மகன் ராற்றன், கணவனின் பெற்றோர் ஆகியோருடன் அமைதியாக வாழ்ந்து வருகின்றார். நோயாளி யின் மரணத்தில் கணவனுக்கும் மனைவிக்கு மிடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின் றன. நோயாளியின் கணவன் சட்டத்தை நாடுகின்றார். நோயாளியின் பிள்ளையை நோயாளியின் சகோதரி வளர்த்து வருகின்றார். நோயாளியின் கணவனுக்கும், சகோதரிக்குமிடையில் ஒரு நெருக்கம் அழகான கவிதையாக மலர்கின்றது.

மகப்பேற்றுக்காக ரம்யனி தனது சொந்தக் கிராமத்துக்குச் செல்கின்றார். அவர் குளக்கரைக்குச் சென்றபோது நோயாளி குளத்திற்குள் இருந்து அழைப்பதாக நினைத்து குளத்துக்குள் இறங்கியதால் மருத்துவமனைக்குச் செல்லவேண்டி வருகின்றது. கிராமிய மருந்தகம். வசதி இன்மையால் இவர் வயிற்றுக் கருவிற்கு பாதிப்பு ஏற்படுகின்றது. ஒருபுறம் மருத்துவர் களின் சேவை மனப்பான்மை குறைந்து பணத்தை குறியாகவைத்து இயங்குவதை இயக்குனர் வலியுடன் வெளிப்படுத்தியுள்ளார். எதற்கும் ஒரு விலை உண்டு. நோயாளியின் கணவரும் நீதிமன்றத்துக்கு வெளியே விலைக்கு வாங்கப்படுகின்றார். அவர் பணத்தை பெறும் தருணத்திலேயே வைத்தியரின் மனைவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தொலைபேசி அழைப்பு வருகின்றது.

வைத்தியர்கள் மக்களுக்கு சேவை செய்பவர் கள். இவர்களுக்கு சேவை நோக்கிருக்க வேண்டும். மத்திய வர்க்க மக்கள் தங்களது பிள்ளைகளை எப்படியாவது வைத்தியராக்கி விட வேண்டும் என்ற நோக்கிற்காக அவர்கள் கடும் பிரயத்தனம் செய்வது சேவை நோக்கை கருத்திற்கொண்டல்ல. இதன் பின்னால் உள்ள செல்வம். ஒன்ராரியோ போன்ற மாநிலங்களில் வைத்தியர்களுக்கு அரசு சம்பளம் வழங்குகின்றது. இதில் சத்திரசிகிச்சை போன்றவற்றிற்கு அதிகளவு சம்பளம் வழங்கப்படும். இதனால் பல வைத்தியர்கள் தேவையற்ற விடயத்துக்கும் சத்திரசிகிச்சைக்கு அனுப்புகின்றார்கள் என்ற விமர்சனம் பரவலாகவே முன்வைக்கப்படு




கின்றது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் தனியார் வைத்தியசாலைகள் பணத்தை விழுங்கிவிடுகின்றன. தனியார் மருத்துவமனைகளின் அதீத கவனிப்பில் மயங்கி மக்கள் தனியார் வைத்தியசாலை-களை நாடவேண்டிவருகின்றது. அங்கு வேலை செய்யும் வைத்தியர்களும் பண மோகத்தில் இயங்குகின்றார்கள். இவர்கள் தவறால் ஒரு உயிர் இழந்துவிட்டால் கேட்பதற்கு யாரும் அங்கு இல்லை. தட்டிக்கேட்டால் துட்டால் உங்கள் முகத்தை துடைத்துவிடுவார்கள். Alik Sukh படத்தைப் பாருங்கள். வைத்தியர்களின் பண ஆசை யால் ஏற்படும் விளைவுகளைக் காணலாம். இன்றைய நிலையில் பலரால் மிக முக்கிய பிரச்சினையாக இது கருதப்படுவதில்லை. இது ஒரு வங்காள மொழிப்படம்.

# வெள்ளிவிழா காணும் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

1989 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மகாஜனாக்கல்லூரி கனடா பழைய மாணவர் சங்கம் தனது வெள்ளிவிழாவை ஸ்காபரோவிலுள்ள சீனக்கலாசார மண்டபத்தில் ஒக்ரோபர் 5 மற்றும் 11ஆம் திகதிகளில் இரண்டு நாள் நிகழ்வுகளாக கொண்டாடியது. இரண்டு நாட்களும் நிகழ்வுகள் சரியாக மாலை 5 மணிக்கு ஆரம்பமானது. இவ்விரு நிகழ்வுகளின் போதும் சிறப்பு 25 ஆம் ஆண்டு விழாவிற்கான மகாஜனன் வெள்ளிவிழா மலர் வெளியிடப்பட்டது. 122 பக்கங்களைக் கொண்ட இம்மலர் வழமைபோல கதை, கவிதைகள் என இல்லாமல் பழைய மாணவர் சங்கத்தின் 25 வருடகால செயற்திட்டங்கள், சாதனைகள், 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ், கணித, பொதுஅறிவு போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்களின் படங்கள் மற்றும் முதல் பத்து மாணவர்களின் பெயர்கள் என்பவற்றுடன் வெளியிடப்பட்டது. இவ்வாறான அழகிய மலரை இலவசமாக வெளியிட இன்றியமையாத தேவையான விளம்பரங்களை அடக்கிய 31 பக்கங்களை தவிர ஏனைய 91 பக்கங்களில் மகாஜனக்கல்லூரி பழையமாணவர் சங்கம் கனடாவில் கடந்த 25 வருடகாலம் பதித்த காலடித்தடங்களை மிகவும் அழகாகவும் ஆணித்தரமாகவும் தடம்பதித்திருந்தனர்.

ஒக்ரோபர் 05, 2014 இல் நடைபெற்ற முதல் நாள் நிகழ்வுகளுக்கு மகாஜனக்கல்லூரியின் முன்னாள் அதிபரும் கனடாவில் பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்க முன்னோடியாக



இருந்தவரும் ஏழு வருடங்களுக்கு மேலாக அதன் நிர்வாகசபைத்தலைவராக இருந்தவருமான மதிப்பிற்குரிய அதிபர் பொ. கனக சபாபதி அவர்கள் பிரதம விருந்தினராக சமூகமளித்திருந்தார். கௌரவிருந்தினராக மகாஜனக்கல்லூரி கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் முன்னாள் தலைவர் திரு. தம்பையா இலங்காநேசன் அவர்கள் கலந்து கொண்டார். அன்றைய நிகழ்வுகளை சந்திரசேகரன் ரமணன் மற்றும் விஜிதா சுரேஸ்குமார் தொகுத்து வழங்கினர். நிகழ்வுகள் மங்கல விளக்கேற்றுதல், கனடிய தேசியகீதம், கல்லூரிகீதம், அமைதிவணக்கம் என்பவற்றுடன் ஆரம்பமானது. அதைத் தொடர்ந்து பழைய மாணவர் சங்க செயலாளர் சிவ கௌரிபாலன் அவர்களின் வாவேற்பு உரை நடைபெற்றது. இதை தொடர்ந்து மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், வெள்ளிவிழாவின் சிறப்பம்சமாக மாணவர்களுக்கு இடையே நடத்திய கர்நாடக இசைப்போட்டி, திரையிசைப்போட்டியில் வெற்றி பெற்ற முதல் ஆறு மாணவர்களுக்கும் இடையேயான இறுதிப்போட்டி நடைபெற்றது.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. முதலாவதாக மேனகா தக்கர் டான்ஸ் கொம்பனி வழங்கிய நடன நிகழ்வு நடைபெற்றது. கலைநிகழ்வுகளின் இடையே சங்கத் தலைவர் க. ஜெயந்திரன், பிரதம விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினரின் உரைகள் நடைபெற்றன. இந்நிகழ்வுகளுக்கு பின்னர் அரவிந்தனின் மெகா ரியூனேஸ் இசைகானம் வழங்கினர். நிகழ்வுகளின் சிறப்பு அம்சமாக நா. சாந்திநாதனின் நெறியாள்கையில் "கீறாத கோடுகள்" நாடகம் நடைபெற்றது.

ஒக்ரோபர் 11, 2014 இல் நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்வுகளுக்கு மகாஜனக்கல்லூரியின் பழைய மாணவர்களான வைத்திய கலாநிதி வரன் ரமேஸ் அவர்கள் பிரதமவிருந்தினராகவும் வைத்திய கலாநிதி சி. ரகுராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் சமூகமளித்திருந்தனர்.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்



# வெள்ளி விழா...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

கௌரவ விருந்தினர்களாக சரவணபவன் தம்பதிகள் சமூகமளித்திருந்தனர்.

இரண்டாம் நாள்விழா பழைய மாணவர் சங்க உபதலைவர் ரவீந்திரனின் ஆரம்ப உரை



யுடன் சரியாக ஐந்து மணிக்கு ஆரம்பமானது. நிகழ்வுகள் மங்கல விளக்கேற்றுதல், கனடிய தேசிய கீதம், கல்லூரி கீதம், அமைதி வணக்கம் என்பவற்றுடன் தொடர்ந்தன. மங்கல விளக்கு ஏற்றுதலில் பிரதம, சிறப்பு மற்றும் கௌரவ விருந்தினர்களுடன் பழைய மாணவர் சங்கத்தலைவர் க.ஜெயந்திரனும் பாரியாரும் மற்றும் இந்த இரண்டு நாள் வெள்ளிவிழா நிகழ்வுகளுக்கும் அரங்க அனுசரணையாளர்களான மகாஜனக் கல்லூரியின் பழையமாணவர்களும் வைத்தியகலாநிதிகளுமான செந்தில்மோகன் தம்பதிகளும் கலந்துகொண்டனர்.



கதிர் செல்வக்குமார் மற்றும் மீரா விமலநாதன் இவ்விழாவின் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினர். பழையமாணவர் சங்க செயற்குழு உறுப்பினர் சி. ஸ்கந்தராஜாவின் வரவேற்புரையை தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. வரவேற்புரையை தொடர்ந்து பழையமாணவர் சங்க உப செயலாளரும் சங்கீத ஆசிரியையுமான யசோதா அரவிந்தனின் தயாரிப்பில் “விரலோடு பேசும் வீணை” என்னும் வாத்திய விருந்து நடைபெற்றது. இதை தொடர்ந்து தலைவர் உரையில் ஜெயேந்திரன் பழைய மாணவர் சங்கத்தின் 25 வருடகால சாதனைகள் சிலவற்றைக் கூறினார். அதை தொடர்ந்து பிரதம விருந்தினரும் மகா-ஜனக்கல்லூரி மாணவனும் எட்மென்ரன், அல்பேட்டாவில் வைத்திய நிபுணராகவும் இருக்கும் வைத்திய கலாநிதி வரன் ரமேஸ் பிரதமவிருந்தினர் உரையாற்றினார்.

கலை நிகழ்ச்சிகளுக்கு இடையிடையே தரம் 1 தொடக்கம் 12 வரை நடைபெற்ற தமிழ், கணித, பொது அறிவுப் போட்டிகளில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களுக்கு வந்த மாணவ மாணவிகளுக்கு பதக்கமும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் விழாக்களில் அதற்கென பிரத்தி யேகமாக தயாரித்த நடன நிகழ்வுகளை வழங்கும் மகாஜனாவின் பழைய மாணவி ஆடலரசி செந்தில்செல்வி சுரேஸ்வரனின் ஸ்ரீ அபிராமி நாட்டியாலய மாணவிகள் வழங்கிய “மயக்கமும் கலையும்” நிகழ்வு நடந்தது. தனது உருவ அமைப்பால் சகமாணவர்களின் கொடுமைப்படுத்துதலுக்கு (Bullying) ஆளாகி தீயவழியில் புகுந்து போதை ஊசிக்கு அடிமைப்பட்ட ஒரு மாணவியை கலைபயிலவைத்து போதை பழக்கத்தி லிருந்து மீட்டு எடுத்த செந்தில்செல்வியின் இந்நிகழ்வு வழமைபோல் மிகவும் தரமான நாட்டிய நிகழ்வாக இருந்தது. செந்தில் செல்வியின் ‘மொட்டுக்கள் என்றும் மலர்வதற்கே, மடிவதற்கல்ல’ என்ற முடிவுரையும் இந்த நாட்டியமும் காலத்திற் கேற்ற அழகான நடன நிகழ்வாக இருந்தது.

இதை தொடர்ந்து மகாஜனக்கல்லூரியின் பழையமாணவனும் கல்லூரி நிகழ்வுகளுடன் தொடர்ந்து தன்னை ஈடுபடுத்திவருபவரும் மகாஜனக்கல்லூரி மாணவர்களுக்கு கழுத்துப்பட்டியை வழங்கிவருபவருமான வைத்திய கலாநிதி சி. ரகுராஜ் தனது சிறப்புரையை நிகழ்த்தினார்.

மகாஜனக்கல்லூரி மாணவி அனிதா தடியூன்றி பாயும் விளையாட்டில் தேசிய சாதனையை நிகழ்த்தியதைப் பற்றி விபரித்த ரகுராஜ், மேல் நாட்டு மாணவர்கள் தடியூன்றி



பாயும் போது விழும் ‘மெத்தை’ வசதியில்லா மலேயே பழகி இவ்வாறு சாதனை செய்த மாணவி அவ்வாறு ஒரு ‘மெத்தை’ வசதியிருந்திருந்தால் ஆசிய அல்லது ஒலிம்பிக் விளையாட்டிலேயே சாதனை எடுத்திருப்பார் என்றார். இவ்வகையான மெத்தை ஒன்றின் விலை நாலாயிரம் டொலர் என்று கூறிய ரகுராஜ் இது போன்ற வசதிகளை எமது கல்லூரி மாணவர்களுக்கு நாம் வழங்க முன்வர வேண்டும் என்றார்.

அவர் மேலும் கூறுகையில் நாம் மாகாஜனா வில் கல்வி கற்றவேளை அங்கு விடுதி வசதி இருந்தது. இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் வந்து கல்வி பயின்றனர். தற்போது அவ்விடுதி இருந்த இடம் பாடசாலைக்குரிய கட்டடமாக்கப்பட் டுள்ளது. பாடசாலை சுற்றாடலில் உள்ளவர் களிடம் காணி வாங்கி பாடசாலைக்கு ஒரு விடுதி கட்டப்பட்டால் நாடு முழுவதும் உள்ள தமிழ் மாணவர்கள் இங்கு தங்கி கல்வி பெற வசதியேற்படும் என்றார்.

தமிழ்மாணவர்கள் போதியளவு இல்லாத தாலேயே வடக்கிலுள்ள தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் பிறமொழி மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதாகக் கூறிய ரகுராஜ் மகாஜனக்கல்லூரிக்கு மீண்டும் விடுதி வசதி செய்து கொடுப்பதன் மூலம் நாடுமுழுவதிலும் உள்ள தமிழ் மாணவர் களுக்கு உதவி செய்யலாம் என்ற அரிய கருத்தை மிகவும் ஆணித்தரமாகவும் தரவுகளுடனும் வெளியிட்டார்.

அழகு தமிழில் மகாஜனாவின் வழித் தோன்றல்களுக்கு வைத்திய கலாநிதி ரகுராஜ் விடுத்த வேண்டுகோளை தொடர்ந்து மகாஜனாவின் வழித்தோன்றலில் ஒருவரான ஞா. வைஷ்ணவியின் “எம் எண்ணங்கள்” நாடகம் நடைபெற்றது. இதில் மாணவர்களின் விருப்பத்தையறிந்து பெற்றோர் அதை ஊக்கப்படுத்த வேண்டுமே அல்லாது பெற்றோர் தமது விரும்பத்தை மாணவர்கள் மீது திணிப்பதால் வரும் தீய விளைவுகள் சுட்டிக்காட்டப்பட்டன.

இவற்றை தொடர்ந்துவந்த இடைவேளையின் பின்னர் க. சிவதாசனின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட சரித்திர நாடகம் “இலட்சிய வேட்கை” நடைபெற்றது. இச்சரித்திர நாடகத்தால் கலிங்க நாட்டிற்கும் காந்தவ நாட்டிற்கும் இடையேயான பகையை காந்தவ நாட்டு புலவரால் வளர்க்கப்பட்ட கலிங்க நாட்டு இளவரசனான நெடுமாறன் தீர்த்து வைத்த கதை நாடகமாக நடித்து காட்டப்பட்டது. இதில் அமைச்சர், மன்னன், நெடுமாறன், புலவர், மற்றும் அமைச்சரின் மகளான சித்திரா எல்லோருமே தமது பாத்திரத்தை ஏற்று சிறப்பாக நடித்திருந்தனர்.

இவற்றை தொடர்ந்து பழைய மாணவர் சங்க செயலாளர் சிவ கௌரிபாலன் நன்றியுரை வழங்கியதுடன் இவ்விழாவின் அனுசரணை யாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். விழாவின் இறுதி நிகழ்வாக பவதாரணியின் பாரதிக் கலைக்கோயிலின் மெல்லிசை கானம் நடை-பெற்றது. இதில் சுமதி சரவணபவன், செ. சரவணபவன், மயூரதி, தெய்வேந்திரன், சுரோமி, சர்வானந்தன் ஆகியோர் பாடினர். மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகள் இரவு 10:30 மணியளவில் அளவில் நிறைவெய்தியது.



அருந்ததி ஞா.

# அந்நியர்களும்...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

கிளைவிட்டுப் பிறந்த இன்னொரு பரிமாணக் குடும்பம். மனிதர்கள் போன்றே, குடும்பமாக வாழும் இயல்பைக் கொண்டிருந்த இவ்வினம், தங்களுக்குள் சில சொற்களைக் கூட தொடர்பாடலுக்காய் கொண்டிருந்திருக்க லாம் என்பது ஆய்வுகளின் மூலமாகத் தெரிகின்றது. மேலும், மனிதர்கள் சில சொற்களையோ அல்லது ஒலி வடிவங்களையோ இவர்களிடம் இருந்து பெற்றிருக்கலாம் எனக் கூறுபவர்களும் உண்டு. சிலை வடிவங்கள் அமைத்தல், சித்திரங்கள் கீறுதல், ஆயுதங்கள் செய்து அவற்றைக் கையாளல், வேட்டைக்கான சிறப்பான உத்திளைப் பாவித்தல் என்பன இவர்களிடம் இருந்திருக் கிறது. கிடைக்கப் பெற்ற ஆகப் பழமையான சிற்பம் நியாண்டல்களினதாக இருக்கின்றது. குடும்பக் கட்டுமானங்கள் கூட இருந்திருக்க லாம் என்கிறார்கள். குகைகளில், வாழ்ந்த நியாண்டரல்கள் நெருப்பையும் பாவித்திருக் கின்றார்கள் என்பது தெரிகின்றது. ஒப்பீட்டள வில் மனிதர்களையும் விட முன்னேற்றமான-வர்களாகத்தான் தமது காலத்தில் இந்த நியாண்டரல்கள் இருந்திருக்க வேண்டும் என எண்ணத் தோன்றும் அளவிற்கான விபரங்களை ஆய்வாளர்கள் வெளிக் கொண்டு வந்திருக்கின்றனர். மனிதர்கள் பல ஆரம்ப விடயங்களை இவர்களிடம் இருந்துதான் கற்றுக் கொண்டார்கள் என்றும் அடித்துக் கூறும் ஆய்வாளர்களும் உள்ளனர்.

ஏலியன்களுக்கான பார்வை இன்னமும் தொடரும்.


## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
## இலவச ஆலோசனை வழங்கப்படும்



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் “எம்மை நாம் பாதுகாப்பது எப்படி” என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician I.G.Ayurvedic Medical Services (SriLanka)

**Home Line of Credit**

upto $100,000

NO APPRAISAL FEE – FUNDED WITHIN 4-5 DAYS

YOU'RE APPROVED WITHIN 24 HOURS

Need 2nd MORTGAGE?

YOU DECIDE HOW MUCH YOU NEED!

BAD CREDIT? NO PROBLEM!

NO INCOME VERIFICATION – NO CREDIT CHECK

416.298.2777

| 2nd MORTGAGE | YOU PAY BACK |
|---|---|
| $20,000 | $133/mo |
| $30,000 | $200/mo |
| $40,000 | $267/mo |
| $50,000 | $333/mo |
| $75,000 | $500/mo |
| $100,000 | $667/mo |

ULTIMATE MORTGAGE AND FINANCE SOLUTIONS INC.

LIC#11995. 305-5200 Finch Ave E. Scarborough, ON M1S 4Z5

# திரை விமர்சனம் - ஜீவா

கிரிக்கெட் போட்டி முடிவுகளை மைதானங்களுக்கு வெளியே தீர்மானிக்கும் சூதாட்டங்கள் ஊரறிந்த ரகசியமாக இருந்தவை. இன்று வெட்ட வெளிச்சமாகி விட்ட பிறகு அதுபற்றி ஊடகங்கள் துணிச்சலுடன் பேசுகின்றன. பலரும் திரைப்படங்கள்கூட எடுத்திருக்கிறார்கள். இப்படி இன்றும் கிரிக்கெட்டுக்குள் ஊரறிந்த ரகசியமாக இருக்கும் இன்னொரு விஷயமும் உண்டு. அது ஆதிக்க சாதி அரசியல். பல திறமையான இளம் வீரர்கள் சாதி அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டும், திறமை யற்றவர்கள் சாதி காரணமாக தேர்வு செய்யப்பட்டும் இன்றுவரை இதுபற்றி யாருமே பேசியதில்லை. அனைவரும் பேசத் தயங்கிய அந்த சாதி விளையாட்டை துணிச்சலுடன் முன்வைக்கிறது இப்படம். அதனாலேயே முக்கியமாகிறது.

ஜீவாவின் தந்தை ஒரு பேருந்து ஓட்டுநர், தாய் இறந்துவிட்டார். இதனால் தந்தையின் அரவணைப்பிலேயே ஜீவா வளர்கிறான். அனேகமான நேரம் ஜீவா இவர்கள் பக்கத்து வீட்டிலேயே இருக்கிறான். பக்கத்து வீட்டில் வசிக்கும் சார்லி குடும்பத்தாரும் இவனை தங்களில் ஒருவனாகவே ஏற்றுக் கொள்கிறார்கள். ஜீவாவுக்கு சார்லி கிட்டதட்ட வளர்ப்பு அப்பா மாதிரி. ஜீவா சிறுவயதில் இருந்தே கிரிக்கெட் விளையாட்டு என்றால் உயிராக இருக்கிறான். பள்ளிக்கூடம் கிரிக்கெட் அணியில் இருக்கிறான். அவனுக்கு தூங்கும்போதும் விழிக்கும்போதும் வகுப்பறையில் படிக்கும்



போதும் கிரிக்கெட் பற்றிய சிந்தனையைத் தவிர வேறு எதுவும் இல்லை. இதனால் படிப்பில் கவனம் குறைகிறது. இது இவனது அப்பாவுக்கு கவலை தருகிறது. ஜீவா படித்து நல்லதொரு அரசு வேலைக்கு செல்ல வேண்டும் என அவர் கனவு காண்கிறார். அவர் ஜீவாவைக் கண்டிக்கிறார். ஆனால், சார்லியோ ஜீவாவின் கிரிக்கெட் ஆர்வத்தை உற்சாகப்படுத்துகிறார்.

மாவட்ட அளவிலான போட்டிகளில் வென்று ஜீவா பள்ளி சாம்பியனாகிறான். இதற்கு காரணமான ஜீவாவை, 'பீனிக்ஸ் கிரிக்கெட் கிளப்' கோட்ச் தங்கள் அணிக்காக விளையாடும்படி கேட்கிறார். ஆனால், ஜீவா அப்பா இதற்கு மறுப்பு தெரிவிக்கிறார். படிப்பில் கவனம் செலுத்தும்படி ஜீவாவிடம் சொல்கிறார். இதே காலகட்டத்தில் ஜீவாவின் இன்னொரு பக்கத்து வீட்டுக்கு குடிவருகிறார் ஜெனி. அவருக்கும் ஜீவாவுக்கும் இடையேயான பழக்கம் காதலாகிறது. இது வீட்டுக்குத் தெரிய வர சிக்கலாகிறது. ஜெனி குடும்பத்தினர் வீட்டைக் காலி செய்து செல்வதுடன், ஜெனியையும் வேறு பள்ளிக்கு மாற்றி விடுகிறார்கள். காதல் பிரிவால் வருந்தும் ஜீவா ஜெனியை மறக்க குடிக்கத் தொடங்குகிறான். இது ஜீவா அப்பாவுக்கு மேலும் சங்கடத்தைத் தருகிறது. ஜீவா கவனத்தை திசை திருப்ப, சார்லி ஆலோசனைபடி, 'பீனிக்ஸ் கிளப்'பில் ஜீவாவை சேர்த்து, கிரிக்கெட் விளையாட ஊக்கப்படுத்துகிறார்கள். அங்கே விஷ்ணு வின் திறமையைக் கண்டுகொள்ளும் பயிற்சியாளர் ரவி, அவனை கடுமையாகப் பயிற்றுவிக்கிறார். கிளப்பில் சூரியும் லட்சுமணனும் ஜீவாவும் நண்பர்களாகிறார் கள். ஜீவா, லட்சுமணன் கூட்டணியில 'பீனிக்ஸ் கிளப்' வெற்றி மேல் வெற்றிகளைக் குவிக்கிறது. மாநில அளவிலான போட்டிகளில் இவர்களது ஆட்டத்தைக் காணும் தேர்வாளர்கள் மாநில அணியில் சேர்க்கிறார்கள். திறமையிருந்தும் அதற்கும் மேலே செல்ல முடியாமல், மேல்நிலையில் நடக்கும் சாதி ஆட்டங்கள் இவர்களைத் தடுக்கிறது. ரஞ்சித் டிராபியில் விளையாட தேர்வானாலும் சப்ஸ்டியூட்டாகவே இருக்கிறான் ஜீவா. ஒரு போட்டியில் இடம் கிடைத்து தனது அதிரடி ஆட்டத்தை காட்டிய பிறகும் இந்நிலையே தொடர்கிறது. இதனால் மனம் நொந்து போன ரஞ்சித் தற்கொலை செய்துகொள்கிறான்.

**தொடர்ச்சி 38ஆம் பக்கம்**

# Parkway Mall Mobilicity !!!

$50 OFF COUPON

# $69/mo

Exclusive Bundle

Life Time Deal. No Contract.

## Including 2 month UNLIMITED Talk, Text & Caller ID + FREE Phone

**$10 for Unlimited Data, Internet for life time**



| Samsung T469 | Samsung C414 | LG MyTouch Q | Samsung Galaxy Exhibit | LG G2x | Samsung Galaxy S4 |
|---|---|---|---|---|---|
| ~~$99.99~~ | ~~$79.99~~ | ~~$169.99~~ | ~~$199.99~~ | ~~$199.99~~ | ~~$649.99~~ |
| FREE | +$29.99 | +$49.99 | +$69.99 | +$69.99 | +$339.99 |

No Contract !!
No Credit Check !!

PHONES $50 OFF

You can bring in your own phone for $20 OFF

EXCLUSIVE ONLY

**Mobilicity @ Parkway Mall** (Kiosk beside Metro Supermarket)
**Parkway Mall** (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough (தமிழ்/English/Chinese)
M1R4B8, 416-999-9229

mobilicity
Now that's smart.™




# ஒரு துப்பாக்கியும் ஒரு மோதிரமும் - விமர்சனம்

## கடந்த இதழ் தொடர்ச்சி...

ஒரு துப்பாக்கியும் ஒரு மோதிரமும் திரைப்படம் தொடர்பாக சமூக அரசியல் அடிப்படைகளில் முக்கியமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அதாவது இத்திரைப்படமானது (புலம் பெயர்ந்த) தமிழ் சமூகத்தின் பல்வேறு சிந்தனைகளின் எல்லையை கேள்விக்குட்படுத்தியது. முதலாவது தமிழ் சமூகத்தில் கறுப்பர்களுக்கு எதிராக இருக்கின்ற சிந்தனையில் அதிர்ச்சி வைத்தியம் செய்தமையாகும். ஈழத் தமிழ் சமூகம் தாம் ஒடுக்குமுறைகளையும் புறக்கணிப்புகளையும் இலங்கையில் மற்றும் தமிழகத்தில் மட்டுமல்ல புலம்பெயர்ந்த தேசங்களில் எதிர்கொள்கின்றனர். இருப்பினும் தாம் சக இனத்தவர்களுக்கு உதாரணமாக கறுப்பு இனத்தவருக்கு எதிரான சிந்தனைகளையும் போக்குகளையும் கொண்டுள்ளனர். அந்தவகையில் இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்த ஒரு பெண் ஒருவர் கறுப்பர் ஒருவரை காதலித்து திருமணம் செய்வது என்பது சவாலான ஒன்றே. இது ஈழத் தமிழர்களின் சிந்தனையின் எல்லையை முறித்த ஒரு கதை என்றால் மிகையல்ல. இவ்வாறு செய்தமை சிறந்தது என ஒரு சாரரும் இது தமிழ் சமூகத்தின் உறுதியான சமூகக் கட்டமைப்பை உடைப்பதாக சிலரும் கருத்துரைத்தனர். ஏன் ஒரு தமிழரே அவரை திருமணம் செய்திருக்க முடியாது என்றனர். அதேவேளை ஒரு வெள்ளையினத்தவரை திருமணம் செய்வதாக காட்டியிருப்பின் நமது அடிமைத் தனத்தை மீளவும் உறுதி செய்திருப்போம். மாறாக கறுப்பினத்தவரை திருமணம் செய்ததாக காண்பித்தமை மிகவும் முக்கியமான மாற்றம் மட்டுமல்ல முன்னேற்றகரமான சிந்தனையுமாகும். இது நம் சிந்தனை எல்லையை உடைப்பதாகும்.

இரண்டாவது ஈழத் தமிழர்களிடம் ஓரினப்புணர்வாளர்களுக்கு எதிராக இருக்கின்ற சிந்தனையின் எல்லையை கேள்விக்கு உட்படுத்தியதாகும். புலம் பெயர்ந்த இரண்டு தமிழ் குடும்பங்களின் ஆண் பிள்ளைகள் இருவர் ஒருவரை ஒருவர் விரும்புகின்றனர். ஒரு ஆண் பிள்ளையின் தகப்பன் தனது கடுமையான கஸ்டங்கள் நிறைந்த கடந்த கால கதையைக் கூறி இந்த உறவை முறிப்பதற்கு முயற்சிக்கின்றார். இது



**- மீரா பாரதி -**

ஒருவகையான மனநோய் எனவும் குறிப்பிடுகின்றார். ஆனால் மகனுக்கு தகப்பனுடன் உடன்பட முடியவில்லை. மாறாக இழந்த தனது துணையை நினைத்து ஏங்குகின்றான். ஓரினப் புணர்ச்சியாளர்கள் தொடர்பான சரியான பார்வை இல்லாதது மட்டுமல்ல அதைப் பற்றிய எதிர்மறை பார்வை கொண்ட புலம் பெயர்ந்த ஈழத் தமிழ் சமூகத்திற்கு இது இன்னுமொரு அதிர்ச்சி வைத்தியம். இக்கதையும் ஈழத் தமிழர்களின் சிந்தனையின் எல்லையை உடைக்க முயற்சித்துள்ளது என்றால் மிகையல்ல. ஆனால் சிலர் இக்கதையை இன்னும் உறுதியாகவும் வெளிப்படையாகவும் உதாரணமாக இருவரும் கைபிடித்து செல்வது போன்று அமைத்திருக்கலாம். இதுவே அவர்களது உறவை ஆணித்தரமாக கூறி நம் சிந்தனையின் எல்லையை விரித்திருக்கும் என்றனர்.

அவ்வேளை சிலர் இக்கதையானது தமிழர்களின் அடையா-ளத்தை கேள்விக்குட்படுத்துகின்றது என்றனர். எங்களிடம் இவ்வாறான உறவுகள் கலாசாரம் இல்லாதபோது ஏன் அவசியமில்லாது வேண்டுமென்றே இவற்றைத் திணிக்க வேண்டும் என விமர்சித்தனர். இதற்குப் பதிலளித்த சிலர் தமிழர்களின் அடையாளம் என்ன என்பதை கேள்விக்கு உட்படுத்த வேண்டும் என்றனர். மேலும் ஈழத்திலும் இவ்வாறான உறவுகள் இருக்கின்றன. ஆனால் சமூகத்தில் நிலவும் மேலாதிக்க சிந்தனைகளால் அவர்களால் வெளிவர முடிவதில்லை. அவ்வாறு வெளிவருபவர்களையும் மனநோயாளர்களாக சித்தரிப்பதுடன் நையாண்டி செய்வதே வழமை. ஆகவே அவர்கள் மறைந்து பயத்துடன் வாழ்கின்றனர். குறிப்பாக புலம் பெயர்ந்த தேசங்களில் வளர்கின்ற நமது குழந்தைகள் இவ்வாறான தமது பாலுணர்வு அடையாளங்களை வெளிப்படுத்துவதற்கான வெளிகள் இருக்கின்றன. இவர்களைப் புரிந்து கொண்டு ஏற்பதற்கு நாம் நமது சிந்தனைகளின் எல்லைகளை விரிக்க வேண்டும். இல்லையெனில் நமது வாழ்வு மட்டுமல்ல அவர்களது வாழ்வும் சீரழிவதற்கே வழிவகுக்கும். துரதிர்ஸ்டவசமாக அவ்வாறுதான் நடைபெறுகின்றன எனக் குறிப்பிட்டனர். ஆகவே நாம் நமது சிந்தனையின் எல்லைகளை விரிவாக்கம் செய்ய வேண்டியவர்களாக உள்ளோம். மூன்றாவது ஈழத் தமிழர்களின் வன்முறை கலாசாரம். இரும்பனின் கடந்த கால வன்முறைகளும் இன்றைய வன்முறைகளும் மற்றும் தப்பி வந்தவனின் வன்முறைகளும் ஓரினப் புணர்வாளரின் கோவமும் வன்முறை மூலமான எதிர்வினையும் தமிழ் சமூகத்தை வன்முறையான ஒரு சமூகமாகவே சித்தரிக்கும் என விமர்சித்தனர். மேலும் இது புதிய தலைமுறைக்கும் வன்முறை பாதையையே பரிந்துரைப்பதாக உள்ளது.

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

# லோகன் கணபதி

## மார்க்கம் 7 ஆம் வட்டாரம் - கவுன்சிலர் வேட்பாளர்








## STRONG LEADERSHIP - PROVEN RESULTS

- கனடாவில் முதன் முதலாக தமிழர் மரபுரிமை நாட்கள் பிரகடனம்!
- ஈழத்தில் நடந்தது இன அழிப்பே (Genocide) என்ற தீர்மானத்தை மார்க்கம் மாநகர சபையில் நிறைவேற்றியமை!!!
- கனடாவில் முதல்முறையாக வன்னி வீதி!!! ற்றிங்கோ (Trinco) வீதி!!! யாழ் சிடாவூட் பார்க்!!! பற்றிக்கலோ (Batticaloa) வீதி!!!
- மார்க்கம் வரவுசெலவுக் குழுவின் உபதலைவராக–2009, 2010, 2011 சோலைவரி அதிகரிக்காமலும் (0% Tax Increase), அதன் பின் வருடங்களில் GTA யிலேயே மிகக் குறைந்த அளவு அதிகரிப்பு!
- 72 மில்லியன் டொலர் செலவில் சன சமூக நிலையமும் நூலகமும்!!!
- ஸ்டீல்ஸ் (Steeles Ave E) வீதி விஸ்தரிப்பு!!!
- மார்க்கத்தில் முதல்முறையாக கிரிக்கெட் மைதானம்! 16 இற்கும் மேற்பட்ட புதிய பசுந்தரைகள் (16 New Parks)!
- மார்க்கம் இந்தியா வர்த்தகத் தூதுக்குழு உறுப்பினர்!

சிறிலங்கா அரசாங்கத்தினால் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றம், தொடர்ச்சியாக நடத்தப்படும் மானுடத்திற்கு எதிரான குற்றம் மற்றும் இனப்படுகொலை, இனஅழிப்பு ஆகியவற்றுக்கு எதிராக உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் நீதிக்கான போராட்டத்தில் என் தமிழின உறவுகளுடன் தோளோடு தோள் நின்றுழைக்கின்றேன்.

## VISION . EXPERIENCE . RESULTS

கடந்த எட்டு வருடங்களாக மார்க்கம் மாநகரசபை ஊடாக பல திட்டங்களை நிறைவேற்றியுள்ளேன், மேலும் எம்மவர்க்கு நன்மை தரும் பல திட்டங்களை தொடர்ந்தும் நிறைவேற்ற என்னை மீண்டும் தெரிவு செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**லோகன் கணபதி**
மார்க்கம் 7 ஆம் வட்டாரம் - கவுன்சிலர் வேட்பாளர்







RE-ELECT
on Oct. 27th

# LOGAN KANAPATHI

## For CITY COUNCILLOR - WARD 7

VISION.EXPERIENCE.RESULTS

For more information, to volunteer or request a sign, please contact us:
7380 McCowan Rd. Markham, On L3S 3H8
905 415 8686  logankanapathi@gmail.com
www.logankanapathi.com
@LoganKanapathi  logan.kanapathi

# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்

சென்ற தடவையில் மனிதக் குரங்குகளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் பரிணாமப்பாதையில் ஒரு தவறிய இணைப்பு இருக்க வேண்டுமே என்று சில ஆய்வாளர்கள் கருதுவதாகப் பார்த்திருந்தோம்.

இந்தத் தவறிய இணைப்புத்தான் ஆய்வாளர்கட்கு பெரும் சவாலாகவுள்ளது. எப்பொழுது தவறிய இணைப்பு கண்டுபிடிக்கப்படுகின்றதோ அப்பொழுதுதான் குரங்கில் இருந்துதான் மனிதன் தோன்றினான் என்பது உண்மையாக்கப்படும். எழுபதுகளின் பிற்பகுதியில் இந்தோனேசியாவின் காட்டுப் பகுதியில் ஒரு எலும்புக்கூடு கண்டு பிடிக்கப்பட்டது. இந்த எலும்புக்கூடானது மனிதரது எலும்புக்கூடுமல்ல, குரங்குகளின் எலும்புக்கூடுமல்ல. ஆனால் மனிதரதும், குரங்குகளினதும் எலும்புக்கூடுகளை ஒத்திருந்தது. மனிதரையும், குரங்குகளையும் ஒத்ததான அவ்வெலும்புக்கூட்டை பெலிமனிதன் 'Boliman' எலும்புக்கூடு எனப் பெயரிட்டார்கள், ஆய்வாளர்கள். இந்தப் பெலிமனிதன் தான் குரங்குகளுக்கும் மனிதருக்கும் இடையேயான தவறிய இணைப்பாக இருக்குமோ எனச் சில ஆய்வாளர்களைச் சிந்திக்க வைத்தது.

இந்தச் சிந்தனையில் ஏற்றுக் கொள்ளக்கூடிய தன்மை மிக மிகக் குறைவு. ஏனெனில் பெலிமனிதன்தான் மனிதக் குரங்குகளுக்கும் மனிதருக்கும் இடையிலான (தவறிய) இணைப்பாக இருந்தால் ஏன் இதுவரையில் ஒரேஒரு எலும்புக்கூடு மட்டும்தான் கிடைத்திருக்க வேண்டும்? நியாயமான கேள்விதான். எனவே ஒரு பெலிமனித எலும்புக்கூட்டினை தவறிய இணைப்பிற்கு ஆதாரமாகக் கொள்ளமுடியாது. இதைவிட இப்பூமியில் எவ்வளவு மனிதர்கள் வாழுகின்றார்கள்? அதேபோல எத்தனை வகையான எவ்வளவு தொகையான மனிதக் குரங்குகள் உலகமெங்கும் பரவி வாழுகின்றன? ஆரம்பமும் (மனிதக்குரங்குகள்) இறுதியும் (மனிதர்கள்) பெருந்தொகையாக இருக்க இடைத்தோற்றமாகிய தவறிய இணைப்பு மட்டும் எப்படி எந்தவொரு சுவடும் இல்லாமல் முற்றாக அழிந்தொழிந்து போனது? என்ன, அடுத்த கேள்வி என்னவென்று பார்க்கின்றீர்களா! எனவே இந்தத் தவறிய இணைப்பினைக் கண்டுபிடிக்கும் வரை குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் எனும் கூற்று முழுமையானது இல்லை என்றுதான் கூறவேண்டும். இந்தத் தவறிய இணைப்பைத்தான் கடவுட் கொள்கையாளர்களும் உறுதியாகப் பிடித்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஆக, மனிதஇனம் கடவுளின் படைப்பா அல்லது இயற்கையின் உற்பத்தியா என்பது இந்தத் தவறிய இணைப்பில்தான் தங்கியுள்ளது என்று நீங்களும் கூறுகின்றீர்கள், அப்படித்தானே. இந்நேரத்தில் தவறிய இணைப்பு பற்றிய இன்னொரு விடயம் ஒன்றினையும் அறிந்து கொள்வோம்.

## நியாண்டரல்கள்

மனிதக் குரங்குகளுக்கும், மனிதர்களுக்கும் இடையில் நேரடியான இணைப்புகள் எதுவும் கண்டு பிடிக்கப்படாத போதிலும், பக்கமாக உள்ள ஒரு இணைப்பினைச் சில ஆய்வாளர்கள் காட்டுகின்றார்கள். அந்தத் தவறிய இணைப்பினை நிரப்பிக் கொள்ள நியாண்டரல்கள் இருக்கிறார்கள் என அவர்கள் கூறுகின்றார்கள். யார் அல்லது எவை இந்த நியாண்டரல்கள் என்ற கேள்வி, எங்களிற் சிலருக்கு எழலாம். நியாண்டரல்கள் மனிதரைப் போன்ற ஒரு உயிரினம். ஐரோப்பியப் பகுதிகளில் பெரும் திரளாக வசித்தவர்கள். கிட்டத்தட்ட 15000, 20000 வருடங்கள் முன்னராக முற்றாகவே அழிந்து போய்விட்டார்கள். எங்களைப் போலவே பெரும்பாலும் இருந்த இவர்களை ஆய்வாளர்கள் எங்களது சகோதர இனம் எனக் குறிப்பிடுகின்றார்கள். மனிதர்கள் வாழ்ந்த காலப் பகுதியிலேயே, மனிதர்களுடன் இவர்களும் ஐரோப்பா, மற்றும் மத்திய கிழக்காசியா போன்ற பகுதிகளில் வாழ்ந்திருக்கின்றார்கள். தற்போது பெரும் பரபரப்புடன் இந்த நியாண்டரல்கள் பற்றிய ஆய்வுகள் நடந்து கொண்டு இருக்கின்றன. 2 இலச்சம் ஆண்டு காலங்களுக்கும் மேலாக ஐரோப்பியப் பகுதிகளிலும், மத்திய கிழக்காசியப் பகுதிகளிலும் இவர்கள் வசித்து வந்ததற்கான ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன. இஸ்ரேல், ஈராக், ஜெர்மனி, ஸ்பெயின், மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலும் இவர்களது எச்சங்களும் தடயங்களும் அதிக அளவிற் காணப்படுகின்றன. நியாண்டரல்கள் முற்றாகவே அழிந்தொழிந்து போனாலும் அவர்களது மரபணுச் சுவடுகள் மனிதர்களினது மரபணுக்களில் கலந்திருக்கின்றன. தற்கால ஆய்வுகளின்படி, எங்களது DNAயில் 4 வீதமான பகுதியில் நியாண்டரல்களின் DNA கலந்திருப்பது தெரிய வந்துள்ளது. இவர்களது அழிவிற்கு பெரும்பாலும் இயற்கையும், சிறுபகுதியாக மனிதர்களின் போட்டி மனப்பாங்கும் காரணமாக இருந்திருக்கலாம் என்பது ஆய்வாளர்களினது கணிப்பு. மனிதக் குரங்குகளில் இருந்து பரிணாம மாற்றத்தால் பிரிந்து வந்த இனங்களின் ஒரு கிளையாக நியாண்டரல்களைக் குறிப்பிடுகின்றார்கள்.

இவர்கள் ஹோமோ சேபியன்கள் என்கிற மனித இனத்திற்குச் சமாந்தரமாக, கிட்டத்தட்ட ஒரே காலப்பகுதியில், ஹோமோ இரற்ரிஸ் என்ற ஒரே வேரில் இருந்து

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தொடர்ச்சி 18ஆம் பக்கம்

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# உப்பு: தெரிந்தவையும் தெரியாதவையும்

'உப்பில்லா பண்டம் குப்பையிலே' என்ற பழமொழி நீண்ட காலமாகவே நாம் உச்சரித்த பழமொழி. தொடர்ந்து உச்சரித்து வரும் பழமொழியுங் கூட. தேநீர் குடிக்கும்போது ஒரு கரண்டி சீனி போடும்படி கூறும் நாம் உப்பு பற்றி பெரிதும் அலட்டிக் கொள்வதில்லை. சிலர் சாப்பிடாமல் விடுவதுமுண்டு. பழைய காலத்து உணவு முறைகளில் உப்பு ஒரு முக்கிய சுவையாக இருந்தமையால் தான் இந்தப்பழமொழி கூட எழுந்திருக்கலாம். அளவுக்கு உப்பு இருந்தால் தான் உணவு சுவையாக இருக்கும். இதனை உவர்ப்புச் சுவை என்பர். ஆறு வகையான சுவைகளில் இதுவும் ஒன்று. உவர்ப்பு, துவர்ப்பு, இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கசப்பு ஆகிய ஆறு சுவைகளிலும் உமிழ்நீரை சுரக்க செய்யும் சக்தி இந்த உப்புச் சத்துக்கே உண்டு. நமது முன்னோர்கள் உணவில் உப்பை அதிகம் சேர்த்தாலும் அந்தக்காலத்தில் உடல் உழைப்பு இருந்தது. இதனால் உணவில் உள்ள உப்பு வியர்வை மூலம் வெளியேற வாய்ப்பு இருந்தது. ஆனால் இப்போது உடல் உழைப்பும் இல்லை. வாழ்வதும் குளு குளு அறைகளில் அல்லது குளு குளு வாகனங்களில். இதனால் உப்பு உட்கொள்ளுதல் பிரச்சினையாக வருகிறது.



உப்பு - இரசாயன பெயர் சோடியம் குளோரைட் எனப்படும். 'Ionic salt' என்னும் கூட்டு சேர்வையில் இதுவுமொன்று. கிறிஸ்ரலைன் பாறைகளில் இயற்கையாகவே இது உருவாகிறது. எனினும் கடல்களின் மூலமே பெருமளவு உப்பு தயாராகிறது. பிராணிகளின் வாழ்வுக்கும் உப்பு பிரதானமானது. அதேபோலவே மனித இனத்திற்கு இன்றியமையாத சுவையும் இதுதான். நீண்ட நாட்களுக்கு உணவுகள் பழுது படாமல் இருப்பதற்கும் இதுவே உதவி வந்துள்ளது. கருவாடு, ஊறுகாய் (Pickle) வகைகள் எல்லாவற்றையும் வருடக்கணக்கில் இது பாதுகாக்கவல்லது. 6000 வருடங்களுக்கு முன்பிருந்தே உப்பு பாவனையில் இருந்துள்ளது. கிரேக்கர், றோமர், எகிப்தியர் இதனை பாவித்துள்ளனர். சீனாவும் இதில் முன்னணி நாடாகும். சமய நடவடிக்கைகளிலும் உப்பு பயன்பட்டுள்ளது. ஒரு காலத்தில் பவுணுக்கு சமமாக உப்பு கருதப்பட்டுள்ளதாக வரலாறு உள்ளது. பிரிட்டிஷ்ஷாருக்கு எதிராக 1930 இல் மகாத்மாகாந்தி உப்பு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு ஒரு இலட்சம் பேர் பங்கு பற்றியிருந்தனர். உப்புக்கு வரி கொடுக்காமல் தங்களுக்கு தேவையான உப்பை தயார் செய்வதே இப்போராட்டத்தின் நோக்கம்.

உலகில் உள்ள சமயலறைகளில் உப்பு கட்டாயம் இருக்கும். எந்த உணவிலும் இது சேர்க்கப்பட வேண்டியுள்ளது. தற்போது Table salt என் பெயரில் மேசைகளில் இது வைக்கப்படுகிறது. வேறு வேறு தேவைகளுக்கெல்லாம் வேறு வேறு வடிவங்களில் சந்தைகளில் கிடைக்கிறது. ஒவ்வொன்றும் வேறு வேறு சுவையுடையவை. bamboo salt, kosher salt, sea salt, iodized salt போன்று பலவகை உள. கீழைத்தேச நாடுகளில் கறியில் சேர்த்து சமைப்பர். ஆனால் இங்கெல்லாம் கறிகளில் மட்டுமின்றி மேசைகளிலும் அலங்காரமாக வைக்கப்படும். ஒரு ரீ ஸ்பூனில் 2,300 மில்லிகிராம் சோடியம் உள்ளது. இது நரம்புக்கும் தசைக்கும் உதவுவது. ஒருவர் சாப்பிட வேண்டிய உப்பின் அளவு ஐந்து கிராம் என்றால் ஆசிய மக்கள் 12-18 கிராம் வரையில் எடுக்கின்றனர். இதற்கு காரணம் பைக்கெட்டுகளில் வரும் உணவுகள் தான்.

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

மறைமுகமாக உப்பு உடலுக்குள் செல்வதே பெரிய பிரச்சினையாகும்.

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555




# அனைவருக்கும் உளம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## நிரு பிராண்ட்













## அறு சுவைகளின் அரசன்

## இல்லத்தரசிகளின் முதல் தெரிவு

### தரத்தில் சிறந்தவை தமிழ்கடைகளில் கிடைக்கும்

நிரு பிராண்ட்

Niru Enterprises Inc
40 Minuk Acres
Scarborough, ON M1E 4Y6
Canada
Tel: 416.750.1976
Fax: 416.750.8779
www.niru.com

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

### இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

**கடந்த இதழ் தொடர்ச்சி....**

வித்தியாதரனையே பார்த்துக் கொண்டு இருந்தார்கள். டொக்டர் தொடர்ந்தார்.

நான் நினைக்கிறேன் உங்களது ஆழ்மனதிலை ஏதோ பயங்கரக் காட்சி பதிந்திருக்கிறது. அது உங்கடை வீட்டிலை நடந்திருக்கலாம், அல்லது மொன்றியலாலை வரும்போதும் ஏற்பட்டிருக்கலாம். அது என்னெண்டு தெரிஞ்சாத்தான் உங்கடை வருத்தத்தை மாத்தலாம். அதாலை நான் என்ன நினைச்சிருக்கிறேனெண்டால், என்றவர் சற்று இடைவெளி விட்டுவிட்டு, இருவரையும் பார்த்து விட்டுத் தொடர்ந்தார்.

மெதுவான குரலில் கூறினார். சிவா, உங்களைக் ஹிப்னரைஸ் பண்ணிப் பாக்கலாம் எண்டு யோசிக்கிறேன்.

ஹிப்னரைஸ்சா? சிவா வியப்புடன் கேட்டான்.

ஓம், ஹிப்னரைஸ்தான் தலையை மெதுவாக ஆட்டிக் கொண்டே கூறிய வித்தியாதரன் 'ஆனால் நீங்கள் அதுக்கு ஓமெண்டு சொன்னால்தான் செய்யலாம். சிவாவுக்கு ஒண்டுமில்லை. மக்கிரனும் இல்லை. மூளையில் ரூமரும் இல்லை. ஸ்கான் நல்ல கிளியராய் இருக்குது. அப்ப இந்தத் தலையிடி, கனவுகளுக்கு என்ன காரணமாய் இருக்குமெண்டு பாத்தால், இனி இருக்கிற ஒரே வழி இதுதான். நான் நல்லாய் இதைப்பற்றி யோசிச்சிட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்தனான். இப்பிடி நான் சிலருக்கு வந்த தலையிடியை மாத்தியிருக்கிறேன். அவையளுக்கு தலையிடி அடியோடு மாறிட்டுது. இப்ப நல்ல சுகமாய் இருக்கினம்.

டொக்டர், ஹிப்னரைஸ் செய்து மருந்து குடுக்கிறது பற்றி நானும் கேள்விப்பட்டனான். இலங்கையிலை ஆபிரகாம் கோவூர் முந்திக் கனக்க விசருக்கு விசரை மாத்தினவர் எண்டு பேப்பருகளிலையும் வந்தது. அது கொஞ்சம் மூளை பழுதானவைக்கெல்லோ செய்யிறவை 'நீலவேணி அப்பாவித்தனமாக, கணவனைப் ஓரக்கண்ணால் பாத்துக் கொண்டே டொக்டரைக் கேட்டாள்.

வித்தியாதரன் மெதுவாகச் சிரித்து விட்டார். இல்லை இல்லை. அப்பிடிப் பிழையாக நினைக்காதையுங்கோ. இது என்னண்டால், ஏதாவது பயங்கரமான காட்சிகளைப் பாத்துப் பயந்தாலும் இப்பிடித் தலையிடியள், கனவுகள எண்டு திரும்பத் திரும்ப வரும். எதுக்கும் ஒருக்கா செய்து பாத்திட்டால் மனதுக் கெண்டாலும் நிம்மதியாய் இருக்குமெல்லோ.

டொக்கடர், நாங்கள் மொன்றியலாலை வரேக்கை இடையிலை ஒரு இடத்திலை சாப்பிடவெண்டு காரை நிப்பாட்டினனாங்கள். சாப்பிட்டிட்டு சும்மா மக்டொனால்சுக் பக்கத்திலை நடக்கேக்கை அதுக்குக்கிட்ட இருந்த சுடலைக்கு பக்கத்தாலை நடந்தனாங்கள். அந்தச் சுடலைக்குள்ளை இருட்டுக்குள்ளை, ஏதோ வெள்ளையாய் நிண்டது போலை இருந்தது. கொஞ்ச நேரத்திலை அந்த இடத்திலை ஒண்டையும் காணேலை. அதுதான் இப்பிடி இருக்குமோ டொக்கர்.? அப்பாவித்தனம் போல இருந்தது, நீலவேணி அப்படிக் கேட்கயில்.

சிவா ஒன்றும் கூறாது இருந்தான்.

என்ன சிவா உண்மையே

'ஓம் டொக்டர். இருட்டுக்குள்ளை ஏதோனும் புதுசாய் வெள்ளை அடிச்ச சுவருகள், சமாதியள் இருந்திருக்கும். பக்கத்திலை இருந்த கட்டிடங்களின் வெளிச்சம் பட்டு அது மினுங்கியிருக்கும். அதுதான் அப்பிடி' சிவா சிரத்தை இல்லாதது போல உண்மையைக் கூறிக் கொண்டிருக்க

வித்தியாதரன் தனக்குள் யோசித்த வண்ணம் கையில் இருந்த பேனாவால் மேசையில் மெதுவாக தாளம் போட்டுக் கொண்டார். பேனாவை வைத்துவிட்டுக் கூறினார்

ஸ்ரீபன் என்று ஒரு கெட்டிக்காரர் இருக்கிறார். நேற்றுத்தான் உங்களைப் பற்றி அவருடன் கதைச்சனான். வாற சனிக்கிழமை அமெரிக்காவுக்குப் போகப்போகிறார். திரும்பி வாறதுக்கு 6 மாசமெண்டாலும் எடுக்கும். அதாலை அதுக்கு முன்னாலை சிவாவை ஒருக்க ஹிப்னரைஸ் செய்து பிரச்சனைக் கான காரணத்தை கண்டுபிடிக்கலாம் என அவர் நினைக்கிறார். வாற புதன் கிழமைக்கு அப்பொயின்மன்ற் வைச்சிருக்கிறேன். நாளைக்கிடையிலை அதைக் கொன்போம் பண்ண வேணும். அதுதான் அவசர அவசரமாக் கூப்பிட்டனான் விடயத்தைத் தெளிவுபடுத்தினார் வித்தியாதரன்.

சிவாவும் நீலவேணியும் குழம்பிய முகத்தோடு பார்த்தார்கள். நீலவேணி கணவனுக்கு மூளையிலை ஏதோவோ என்று மெதுவாக ஐமிச்சம் கொண்டாள்.

◊ கனி ◊

டொக்கடர் இது கட்டாயம் செய்ய வேணுமோ சிவா கேட்டுக் கொண்டே நெற்றியைச் சுருக்கி, மெதுவாக வலது கையால் வருடினான்.

உந்தத் தொல்லை இல்லாமல் போக வேணுமெண்டால் அதையும் ஒருக்கா செய்து பாப்போம். இதாலை ஒரு பிரச்சனையும் இல்லை. நான் உங்களுக்குச் சொன்னனான் தானே கனபேருக்கு இப்பிடி மாத்தியிருக்கிறேன்.

எங்களுக்குத் தெரிஞ்சாக்கள் ஆரேனும் செய்தவையோ டொக்டர். நீலவேணியின் அப்பாவித்தனம் என்பதா அல்லது ஏதாவது அறிய முயலும் எண்ணமா தெரியவில்லை.

வித்தியாதரன் நீலவேணியைப் பார்த்துச் சிரித்து விட்டு, ஒருவேளை உங்களுக்கு இந்த வைத்தியம் செய்தால் மற்றவர்களுக்கு நான் சொல்லுறதை விரும்புவீர்களா? என்ற கேள்வியை அவளுக்குப் பதிலாகக் கூற, நீலவேணி மௌனமாகியாள். அவர்களுக்கு இன்னமும் விளக்கம் தேவை என்பதை உணர்ந்த வித்தியாதரன் ஹிப்பனசிஸ் பற்றிய தெளிவினை அவர்களுக்குக் கூறினார்.

அடுத்த தடவையில் அவற்றைப் பார்ப்போம்.


TBC Toronto Business College

கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்

Knowledge Is Power



DIPLOMA PROGRAMS

Accounting & Payroll Admin.
35 Weeks

Business Administration
26 Weeks

Computerized Accounting
26 Weeks

Medical Office Admin.(MOA)
32 Weeks

Personal Support Worker(PSW)
26 Weeks (NACC Diploma)

FREE TRAINING

யார் தகுதி உடையவர்கள்?

★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றை இலவசமாகக் கற்கலாம்

Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000
அனைத்தும் இலவசம்

PART TIME COURSES

MS Office 2010, Quick Books 2013
Simply Accounting 2013, Accpac 5.6
Canadian Securities Course
First Aid & CPR
Food Handler Certification

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Professional & Experienced Staff
- TTC Accessible
- Career Planning & Counselling

416-291-5155 / 416-451-6680
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com

[Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005]

# BASEMENT RENT

**ELLESMERE & BIRCHMOUNT**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.274.3203**
**Math class available for all grades.**

**MIDLAND & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Avail. immediately.Couple or small family preferred. **(After 5:00pm)**
தொடர்புகளுக்கு: **416.827.0147**

**MARKHAM & DENISON**
**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall, bank. Avail. immediately. Only Asians.
**416.606.4595 / 905.294.0139**

**WARDEN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.267.0161**

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
1 OR 2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, kitchen, washroom, cable, hight speed internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.207.4731**

**KENNEDY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
**647.705.3170 / 647.505.4340**

**TAPSCOTT & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen, washroom. Close to all facilities. No pets & No smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.849.0759**

**MORNINGSIDE & MCNICOLL**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.802.9837**

**MCCOWAN & MCNICOLL**
**MIDDLEFIELD & MCNICOLL**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**647.774.6599 / 647.408.4372**

**9TH LINE & 14TH AVE.**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, TV. Close to all facilities. Avail. October 15, 2014.
தொடர்புகளுக்கு: **416.662.1418**

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Avail. immediately.
**905.471.0356 / 416.305.9276**

**MARKHAM & ELSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close all facilities. Avail. November 01, 2014. Single person or couple preferred.
தொடர்புகளுக்கு: **647.774.0884**

**MARKHAM & HIGH GLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, bank, supermarket. Avail. immediately.
**647.522.0108 / 647.745.4416**

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school, mall. Avail. immediately.
**416.335.3638 / 647.821.1284**

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt also available.
**647.500.4564 / 905.472.1370**

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Large living room, kitchen, washroom, stove, fridge, laundry etc. Close to all facilities.Good for family. Very convenient location.
தொடர்புகளுக்கு: **416.285.4695**

**WARDEN & FINCH**
Rooms for rent. Sep. entrance, parking, laundry. Full furnished. Close to all facilties. Avail. immediately. 40 வயதுக்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது.
**647.391.4637 / 647.802.9476**

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, washroom. Close to TTC, school, mall, UTSC. தொடர்புகளுக்கு: **416.520.5883**

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. November 01, 2014.
தொடர்புகளுக்கு: **416.419.4916**

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Internet, cable. Avail. November 15, 2014.
அறைகள் தனித்தனியாக கொடுக்கப்படும்
**905.554.5810 / 416.648.1987**

**EGLINTON & BRIMLEY**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school, stores.
தொடர்புகளுக்கு: **905.428.7887**

**MCCOWAN & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. November 01, 2014.
தொடர்புகளுக்கு: **416.435.3728**

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, school, mall, temple. Avail. immediately.
**416.332.9991 / 647.707.6095**

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. November 15, 2014.
தொடர்புகளுக்கு: **416.830.7689**

**KEELE & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.740.1022**

**KENNEDY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Living area, kitchen, washroom, stove, fridge. Close to all facilities. Private side door. Family preferred. Very convenient location.
தொடர்புகளுக்கு: **416.264.3899**

**MCLEVIN & MORNINGSIDE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.955.5284**

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.893.1449**

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. 1 Bedroom also avail. in main floor.
தொடர்புகளுக்கு: **416.284.0475**

**MORNINGSIDE & STAINES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. November 01, 2014.
**647.979.4350 / 416.880.4350**

**SCAR.GOLF CLUB & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **416.261.2279**

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Immediately.
**416.844.2235 / 647.402.4435**

**PHARMACY & FINCH**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, Seneca college. Avail. immediately.
**416.201.1222 / 416.299.4895**

**14TH AVE. & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Garage parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately. No pets & no smoking.
தொடர்புகளுக்கு: **647.981.1438**

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.609.9111**

**KENNEDY & EGLINTON**
Newly renovated 3 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.751.1337**

**MCCOWAN & BRIMORTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to HWY 401, hospital. Avail. November 01, 2014.
தொடர்புகளுக்கு: **416.271.6573**

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to bus 2 mints., shopping, school, etc. Furniture included. Avail. immediately.
**905.472.8528 / 647.524.5062**

**BRIMLEY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.569.2760**

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
**647.293.9565 / 647.989.7284**

**SHEPPARD & NEILSON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **647.999.1566**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.300.7595**

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. No smoking & No pets. Avail. Novem. 01, 14.
**647.345.8437 / 647.606.4070**

**BELLAMY & ELLESMERE**
2 or 1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. November 01, 2014
தொடர்புகளுக்கு: **416.289.6076**

**TAPSCOTT & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.833.5488**

**MORNINGSIDE & OASIS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.916.8734**

**MCCOWAN & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, park- ing, laundry. Close to YRT, school, mall. Avail. Anytime.
**416.669.8711 / 905.201.8350**

**MARKHAM & LAWRENCE**
Bsmt for rent. Sep. entrance, kitchen. Avail. immediately. Utilities included. Close to TTC, HWY, mall. Rent $ 590.
தொடர்புகளுக்கு: **647.706.4881**

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, temple. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **647.449.7440**

**MIDLAND & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen, living room. Close to bus, school, stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.501.5064**

**WARDEN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Working couple or female preferred.
தொடர்புகளுக்கு: **416.666.2053**

மேலும் பக்கங்கள் 27, 28, 29

# BASEMENT RENT

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom bsmt இல் 1 bedroom வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Family preferred.
தொடர்புகளுக்கு: **416.332.0504**

**MIDDLEFIELD & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, park- ing, laundry, cable. Close to TTC, school, mall, bank. Avail. Anytime.
**905.201.8434 / 647.964.8434**

**MARKHAM & FINCH / TAPSCOTT**
3 Bedroom or 4 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Rent $900 + 40% utilities. No smoking & No pets. No alcohol. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.855.2148**

**BRIMLEY & LAWRENCE**
1 Bedroom BSMT for rent. Kitchen, laundry, parking. Close to TTC, school, mall. Ladies Preferred.
**416.756.2469 / 647.709.2469**

**KENNEDY & EGLINTON**
Basement room for rent. Sep. entrance, parking, laundry, kitchen. Close to TTC, mall, school. No pets & No smoking. No alcohol drink. Male students or single working person preferred. Avail. November 01, 2014.
தொடர்புகளுக்கு: **416.757.7792**
**(After 4:00pm)**

**PORT UNION & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, park- ing, laundry, cable. Close to TTC, school, mall, bank. Avail. Anytime. No smoking & No pets.
**416.895.0381 / 647.869.7865**

**WARDEN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Internet free. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.433.1116**

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school, bank. Avail. immediately
தொடர்புகளுக்கு: **416.523.1312**

**WARDEN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **416.505.4449**

**WARDEN & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
**416.519.0505 / 416.886.8732**

**DONMILLS & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Very strictly No smoking, No drink & No pets. Rent $550.
தொடர்புகளுக்கு: **647.855.2148**

**VICTORIAPARK & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Rent $995.
தொடர்புகளுக்கு: **416.473.2988**

# BASEMENT RENT

**BRIMLEY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.358.3714 / 416.587.2314**

**BELLAMY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close TTC, school, mall, Go station. Avail. immediately. 1 Bedroom also avail in main floor.
தொடர்புகளுக்கு: **647.892.4034**

**WARDEN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to facilities. Avail. immediately. Boy preferred. அத்துடன் Cleaning வேலைக்கு ஆள்தேவை.
**416.431.9832 / 416.315.9348**

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
**647.719.7442 / 416.845.4833**

**MARKHAM & 14TH AVE.**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. 1 Bedroom also avail.
தொடர்புகளுக்கு: **416.735.2354**

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Ladies or family preferred. No pets & No smoking. தொடர்புகளுக்கு:
**416.430.0422 / 416.389.7399**

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately. Working couple preferred.
தொடர்புகளுக்கு: **416.750.9138**

**DENISON & MARKHAM**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Immediately. Couple preferred.
**905.209.9809 / 416.706.5914**

**NEILSON & MCLEVIN**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Pentecost Christian preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு: **416.831.8549**

**BASEMENT & ROOMS FOR RENT ETOBICOKE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 2 Bedroom also rent in main floor. Close to Humber College & all facilities. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **416.318.4681**

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **416.568.0686**

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall, YRT. Avail. immediately.
**416.576.0602 / 905.471.1374**

# BASEMENT RENT

**MARKHAM & DENISON**
Newly renovated 2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.520.0496**

**BRIMLEY & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to Tamil stores, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **905.947.8018**

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: **416.551.8379**

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.219.4491**

**MIDDLEFIELD & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall, Spiceland. Avail. November 01, 2014. Couple preferred. No smoking & No pets.
தொடர்புகளுக்கு: **647.505.7951**

**9TH LINE & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.931.3444**

**STEELES & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.937.1352**

**BRIMORTON & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. washroom and kitchen. Sep. entrance. Rent $550. Non smokers & Working people preferred.
தொடர்புகளுக்கு: **416.884.0513**

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. வயதானவர்கள் விரும்பத்தக்கது. Hospital வசதி, சாப்பாடு செய்து கொடுக்கப்படும். Avail. October 01, 2014.
**416.332.0623 / 647.618.0623**

**MCCOWAN & STEELES / ELSON**
Newly constructed 2 bedroom bsmt for rent. Sep. entrance, living room, parking, laundry, hardwood, lighting. Close to TTC, Public school, parks. Very silent Neighborhood. Avail. immediately.
**905.294.0086 / 416.710.7122**

**வாடகைக்கு பெற்றிட**
வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட அழையுங்கள்: **647.402.2937**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# ROOM FOR RENT

**FINCH & MORNINGSIDE**
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **416.879.6301**

**FINCH & MIDDLEFIELD**
1 Bedroom for rent in a condo. Laundry, kitchen, Sep. washroom, cable. Close to all facilities. பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **647.835.5244**

**ELLESMERE & MORNINGSIDE**
2 Bedroom for rent. Parking. Close to Centennial college, Scarborough Campus. Female students only.
தொடர்புகளுக்கு: **647.769.3389**

**TAPSCOTT & MCLEVIN**
1 Bedroom for rent. Laundry. Close to TTC, mall, school. Avail. immediately. Boys preferred.
தொடர்புகளுக்கு: **416.754.8947**

**MCCOWAN & LAWRENCE**
2 Bedrooms for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.707.1561**

**MCCOWAN & EGLINTON**
2 Bedroom for rent. Close to all facilities. Avail. Immediately
தொடர்புகளுக்கு: **647.857.9773**

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.834.2266 / 647.201.8082**

**ORTON PARK & LAWRENCE**
2 Rooms for rent in a bsmt. அறைகள் தனித்தனியாக வாடகைக்கு கொடுக்கப்படும். Parking. Close to all facilities.
**416.701.0667 / 647.928.0667**

**SHEPPARD & MIDLAND**
1 Bedroom for rent. Laundry. Close all facilities. Avail. immediately.
**416.266.4789 / 416.980.5697**

**BRIMLEY & EGLINTON**
Room for rent in main floor. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
**416.264.9642 / 416.833.9567**

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom for rent. Parking. Close to TTC, mall. Avail. immediately.
**647.346.0930 / 647.862.6590**

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: **416.335.5242**

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt சகல வசதிகளுடன் உண்டு. மற்றும் மேல் தளத்தில் 1 அறை வாடகைக்கு உண்டு. ஆண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **416. 759.7016**

மேலும் பக்கங்கள் 26, 28, 29

# அனைவருக்கும் எமது உளம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்






**Raja Mahendran, P.Eng.**
**Broker / Owner**



**Eddie Woo**
**Broker / Owner**

**Homelife/GTA Realty Inc.** *Brokerage**

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது

*5215 Finch Ave, E, #203, Toronto, ON : 416.321.6969*

* INDEPENDENTLY OWNED AND OPERATED

## HOUSE FOR RENT

**MARKHAM & DENISON**
3 Bedroom house for rent. 1 Bedroom bsmt also avail. Close to all facilities. Avail. immediately.
**416.879.9603 / 416.829.3212**

**BELLAMY & LAWRENCE**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. December 01, 2014.
தொடர்புகளுக்கு: **647.284.0480**

**BRIMORTON & MCCOWAN**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately
தொடர்புகளுக்கு: **416.543.5068**

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. November 01, 2014. No pets & No Smoking
**416.439.9638 / 4126.993.4649 / 647.667.0107**

**MIDDLEFIELD & STEELES**
4 Bedroom house for rent. Parking, laundry. Close TTC, school, bank. Avail. November 01, 2014.
தொடர்புகளுக்கு: **416.995.3960**

**MARKHAM & STEELES**
3 Bedroom house for rent. 2 ½ Washroom, parking, laundry. Close to all facilities. Rent $1,550. Avail. immediately.
தொடர்புகளுக்கு:: **416.889.1083**

**NEILSON & SHEPPARD**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.417.3755**

**NEILSON & FINCH**
4 Bedroom bungalow house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**2 bedroom bsmt also available.**
தொடர்புகளுக்கு: **647.866.9464**

## திருமண சேவை

மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
**647.556.4114 / 416.992.8782**

## HOUSE FOR RENT OR SALE

**LAWRENCE & BELLAMY**
3 Bedroom + 2 bedroom bsmt house for rent or sale. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.671.0085**

## CONDO FOR SALE

### PRIVATE SALE

**WARDEN & FINCH**
3 Bedroom + den luxury condo. for sale. Underground parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**647.718.6266 / 905.294.0086**

### PRIVATE SALE CONDO FOR SALE

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom condo for sale. 1 Washroom, parking, laundry. Close to TTC, mall, school.
தொடர்புகளுக்கு: **416.732.2939**

## HOUSE FOR SALE

**LAWRENCE & KINGSTON**
4 Bedroom 2 storey semi detached house for sale. Finished BSMT. Close to all facilities. Price $374,900. Why pay rent. When you can own.
**WHITBY**
3 Bedroom 2 storey detached house for sale. With finished bsmt. Close to all facilities. Price $289,000. தொடர்புகளுக்கு: **416.917.0557**
***Rajah Masillamany***
***(HomeLife / Future Realty Inc.)***

## தையல் Orders

**BELLAMY & ELLESMERE**
Saree Blouses, Churidar, Flower girl's Dresses. All kind of Alteration.
***(Special made One Minite Saree)***
தொடர்புகளுக்கு: **647.624.6847**

உங்கள் வீட்டினை கொண்டோவை, அல்லது பேஸ்மெண்டை உடனடியாக வாடகைக்கு கொடுக்க வேணுமா??

உடனடியாக, சோலியில்லாத ஆட்களை கண்டுபிடிச்சு, பிரச்சனை இல்லாமல் மாதம் மாதம் வாடகையை பெற வேணுமா ??

அழையுங்கள் :
**Jey 416-816-9011**

## JOB JOB JOB

### Spice City Restaurant in Ajax

Cooking, Baking, Rotti making செய்வதற்கு ஆள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
**416.731.9138 / 647.295.4464**

## JOB JOB JOB

**MARKHAM & SHEPPARD**
***Stairs*** செய்யும் நிறுவனம் ஒன்றிற்கு அனுபவம் உள்ள ***Worker*** தேவை. ஆர்வமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். திங்கள் - சனிக்கிழமை. முழுநேர வேலை.
தொடர்புகளுக்கு: **416.830.3932**

## DRIVERS WANTED

AZ Drivers want to drive to California as a team or single. Need clean CVOR & One year experience.
தொடர்புகளுக்கு: **647.274.0300**

AZ Drivers want to drive to **US - CANADA**. Team or single. Minium One year experience.
**416.825.5440 / 647.667.3656**

## JOB JOB JOB

**MIDDLEFIELD & MCNICOLL**
Sweet & Snacks கடைக்கு வேலைக்கு ஆள் தேவை. Full - time or Part - time. ஆண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **416.722.5150**

**QUEEN & VICTORIAPARK**
**WOODBINE BEACH AREA**
***Vivetha Bistro**, French - Italian*
Restaurant is looking for 2 experienced line cooks. Full-time or part-time.
தொடர்புகளுக்கு: **647.866.0939**

### FINCH & MIDDLEFIELD

GTA Square இல் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு Cashier, cleaner, cook ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: **416.318.9866**

## CAR FOR SALE

2003 Honda Civic. Blue colour car. 4 door. Price $1500. 286 Km.
தொடர்புகளுக்கு: **416.802.6067**

**TOYOTA CAMRY LE 2010**
Toyota camry LE 2010 car for sale. Silver colour. 98% Brand new. One owner. 5200 km. Fixed price $18 k.
தொடர்புகளுக்கு: **647.855.2148**

## TUTORS FOR STUDENTS.COM

Gr.K - Gr. 12, University - Abacus, English, Math, Science, Calculus & Vectors, Physics, Chemistry, Algebra, Functions, Data Management, Accounting & More.
***• Free homework help. EQAO prep. every sunday.***
Kumar, B.A.Sc. - ***647.648.3992***
www.tutorsforstudents.com

## வீடு காணி விற்பனைக்கு

சாவகச்சேரி பட்டணசபை எல்லைக்குள் வீடும், காணியும் விற்பனைக்கு உண்டு. 160 பரப்பு, 25 பரப்பு, 50 பரப்பு, 25 பரப்பும் 10 அறைகளையும் கொண்ட வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **416.279.0261**

## SPACE FOR RENT

**MARKHAM & NASHDENE**
Five office space room for rent with furnished. Close to all facilities. Suitable for Realestate office, class rooms, meetings, Doctor office.
**416.830.3241 / 416.575.3211**

## திருமண சேவை

உங்களுக்கு பொருத்தமான வாழ்க்கைத்துணையைத் தேடிக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.
விபரங்களுக்கு: **647.966.3786**

## TRUCK PARKING

Truck parking space available for rent.
தொடர்புகளுக்கு: 416.568.0686

## TUITION CLASSES

Gr. 3 - Gr.12, College & University Math, Science, English, Functions Calculus & Vectors, Data, physics, Chemistry & Biology.
***University preparation class.***
***Calculus 1 &2, Linear Algebra, Statics & Dynamics, Mechanics, Physics, Chemistry.***
***Ruban Master: 416.817.8226***

## TUITION

An experienced Graduate tutor for Grade 5 to Grade 10. Math & Science. Tuition Center இலும், வீட்டிற்கு வந்தும் குறைந்த கட்டணத்தில் கற்பிக்கப்படும். College University math short course. Guna Master: ***647.834.7358***
atgunam@yahoo.ca

## தையல் வகுப்புக்கள் தையல் Orders

**MARKHAM & LAWRENCE**
Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். மணப்பெண்ணுக்கும் Saree blouse தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
**416.438.2552 / 647.853.5524**

## புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிகத் தரமான புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு.

- சிறியது $3
- நடுத்தரம் $4
- பெரியது $5



*வரி கட்டப்பட்டது.*
தொடர்புகளுக்கு: **647.629.9095**

## DAY CARE

**DANFORTH & EGLINTON**
6 மாதத்தில் இருந்து 3 வயது வரை உள்ள குழந்தைகளை கவனமாகவும் அன்பாகவும் பராமரிக்க வேண்டுமா? அத்துடன் Snacks, Meals & Activity programmes என்பன கொடுக்கப்படும். Pet Free.
**647.859.2492 / 647.765.4978**

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:***905.492.0259***

## CONDO. & BSMT FOR RENT

2 Bedroom bsmt for rent @ ***Middlefield & Elson***.
2 Bedroom Condo. for rent @ ***Mccowan & Eglinton***.
Both closed to public transit, shopping & all amenities.
***Contact: 416.857.9773***

## RECEPTIONIST / CUSTOMER SERVICE

Fast growing heating & cooling company in scarborough is looking for receptionist / Customer service. Person must speak Tamil & English. Some computer knowledge. Full / Part - time position available please fax resume.
***Fax: 647.317.1511 / Tel: 416.993.8001***

# "நான் தவறு செய்துவிட்டேன்"

## நேர்காணல்: நடிகர் நாசர்



கலைப் படங்களையும் வியாபாரப் படங்களையும் இணைக்கும் இடைநிலை தமிழ்த் திரைப்படங்களுக்கான காலம் இது. 'உதிரிப்பூக்கள்', 'அவள் அப்படித்தான்', '16 வயதினிலே'... காலகட்டம் போல் 'சென்னை 600028', 'சுப்ரமணியபுரம்', 'சூதுகவ்வும்' தொடங்கி 'மெட்ராஸ்' வரைக்கும் இடைநிலைத் திரைப்படங்கள்தான் இப்போது தமிழில் 'சக்கை போடு' போடுகின்றன. இடை நிலை திரைப்படங்கள் குறித்து தொடர்ந்து பேசியும் எழுதியும் வந்ததுடன் சில இடைநிலை திரைப்பட முயற்சிகளையும் செய்தவர் நடிகர் நாசர். அவரது 'அவதாரம்' திரைப்படம் இவ்வகையில் குறிப்பிடத்தக்க ஒரு முயற்சி. சமீபத்தில் 'அவதாரம்' திரைக்கதை புத்தகமாகவும் வெளியாகி யுள்ளது. 'அவதாரம்' அனுபவங்கள் பற்றி நாசருடன் ஒரு குட்டி சந்திப்பு.

'அவதாரம்' திரைப்படத்துக்கு முன்பு வரைக்கும் தமிழில் நீங்கள் ஒரு நடிகராக மட்டுமே அறியப்பட்டிருந்தீர்கள். இந்நிலை யில் திடீரென ஒரு திரைப்படத்தை இயக்கும் எண்ணம் எப்படி உருவானது?

ஒரு டாக்டரோ, ஒரு வக்கீலோ, ஒரு நடிகனோ... இருபத்தி நாலு மணிநேரமும் அந்தத் தொழிலைச் செய்வது ஒரு சாத்வீக புனிதம் என்று சொல்லுகிறார்கள். இதில் எனக்கு உடன்பாடு கிடையாது. என் வாழ்வில் ஒரு பகுதிதான் நடிப்பு என்பது. இருபத்திநான்கு மணிநேரமும் நடிப்பு என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், பல நிர்ப்பந்தங்கள் காரணமாக இருபத்தி நான்கு மணி நேரமும் அதை நான் செய்துகொண்டுதான் இருக்கிறேன் என்பது வேறு விஷயம். ஓயாத நடிப்பால் ஏற்பட்ட ஒரு சலிப்பு, அந்தத் தொழில் தருகின்ற சவால்கள் ஆகியவற்றிலிருந்து தப்பிப்பதற் காகவும், ஒரு நடிகனுக்கு ஓய்வு கொடுப்பதற் காகவும் நான் 'அவதாரம்' படத்தை எடுத்தேன்.

முதல் படம் தொடங்கி இன்று வரைக்குமான உங்கள் நடிப்பு தொழில் 'க்ராப்'பைத் திரும்பிப் பார்க்கும்போது, 'அவதாரம்' படத்துக்கு முந்தைய காலகட்டம்தான் மிக உச்சத்தில் இருக்கிறது. குறிப்பிட்டதுபோல், அப்போது கிட்டத்தட்ட இருபத்தி நான்கு மணி நேரமும் நீங்கள் நடித்துக்கொண்டு இருந்தீர்கள். 'தேவர் மகன்', 'வரவு எட்டணா செலவு பத்தணா', 'மகளிர் மட்டும்' போன்ற படங்கள் பெரிய வெற்றியைப் பெற்றிருந்தன. உங்கள் க்ராப் மேலும் உயர வாய்ப்புகள் இருந்தது. வில்லன் நடிகன் என்பதிலிருந்து, குணச்சித்திர நடிகனாகவும் பிறகு கதா நாயகனாக நீங்கள் மாறிக்கொண்டிருந்தீர்கள்.

ஆனால், இதனையெல்லாம் விட்டுவிட்டு இயக்குநர் அடையாளத்தை நோக்கிப் போவது சரிதானா என்று அப்போது உங்களுக்குள் கேள்வி எழவில்லையா?

நீங்கள் ஒரு விஷயத்தில் முழுமையாக ஈடுபட்டால், அதைப் பற்றிய எதிர்மறையான விஷயங்களை, உங்கள் மீது உண்மையான அக்கறை கொண்டு சிலர் சொன்னாலும், அது உங்கள் காதில் விழாது. 'அவதாரம்' படம் எடுக்கும்போது, பல நண்பர்கள் என் மீதுள்ள உண்மையான கரிசனத்தின் காரணமாக, வேண்டாம் என்று கூறினார்கள். நான் செவி மடுக்கவேயில்லை. 'இப்போது படம் பண்ண வேண்டாம். கொஞ்சநாள் கழித்துச் செய்யலாம்' என்று என் மனைவிகூட சொன்னார். இதற்காக அவரிடம் நான் கோபப்பட்டிருக்கிறேன்.

படம் எடுப்பது என்பது உறுதியாகிவிட்டது.



சரி, அவதாரம் கதை எப்படி உருவானது?

ஒருநாள்... அன்று ஹைதராபாத்திலே ஒரு சிறிய தங்கும் விடுதியில், குடும்பத்துடன் இருந்தேன். அப்போது பெரிய ஹோட்டல் களில் அறை போடுகிற அளவுக்கு வசதி-யெல்லாம் கிடையாது. அந்த தங்கும் விடுதி குளியலறையில் குளித்துக் கொண்டிருந்த போது, ஒரு பிம்பம் என் மனதில் தோன்றியது. நரசிம்ம அவதாரக் கோலத்தில் ஒரு கதாநாயகன், ஒரு வில்லனின் வயிற்றைக் கிழிப்பதாக அந்த பிம்பம் இருந்தது. படத்தில் இப்படியொரு 'இறுதிக் காட்சி' இருந்தால் எப்படி இருக்கும் என்று குளியலறையிலிருந்து வெளியே ஓடிவந்து என் மனைவியிடம் கேட்டேன். திடுதிப்பென்று நுரையும் தண்ணீருமாய் தோன்றி நான் கேட்ட கேள்விக்கு அவர் திகைக்காமல் வேறு என்ன செய்யமுடியும்? 'வெளியிலே கார் வெயிட் பண்ணிகிட்டு இருக்கு, சீக்கிரம் குளிச்சிட்டு வாங்க' என்றார். 'அவதாரம்' உருவானதற்குக் காரணம் அந்த பிம்பம்தான். அதன்பிறகு அந்தப் பிம்பத்தைப் பல வடிவங்களில் எழுதிப் பார்த்தேன்.

நான் செங்கல்பட்டில் பிறந்து வளர்ந்தவன். அங்கு, பத்து நாட்கள் நடக்கும் பாரதக் கூத்தை, சிறுவயதில் பல ஆண்டுகள் பார்த்திருக்கிறேன். கூத்தையும் என் மனதில் இருந்த பிம்பத்தையும் இணைத்து கதையை உருவாக்கினேன். முதலில் 'அவதாரத்தை' திரைக்கதையாக எழுதவில்லை, கதையா-கத்தான் எழுதினேன். அஞ்சல் அட்டை வடிவத்தில் நூறு அட்டைகளை எடுத்துக் கொண்டேன். என் கதையை காட்சிகளாகப் பிரித்து, ஒவ்வொரு அட்டையிலும் ஒரு காட்சியை எழுதினேன். கடைசியில் மொத்தமாகப் படித்துப் பார்த்தபோது மிகப் பிரமாதமான, உலகத்திலே எவனும் எழுதியிருக்க முடியாத ஒரு திரைக்கதையை எழுதியிருக்கிறேன் என்று புளங்காகிதம் அடைந்து, அதை டைப் செய்து வைத்துக்கொண்டு சுற்றிக்கொண்டிருந்தேன். அதனை மெருகூட்ட திட்டங்கள் தீட்டினேன்.

நான் கூத்தைப் பார்த்திருக்கிறேன். ஆனால், கூத்துக் கலைஞர்கள் வாழ்வுமுறை, எண்ணோட்டம், என்ன திசையில் சிந்திக்கிறார்கள் என்பதெல்லாம் தெரியாமல் இருந்தது. இதற்காக கூத்து வாத்தியாரான குண்டையாந்தண்டலம் தட்சணாமூர்த்தி அவர்களைச் சென்று பார்த்தேன். தட்சிணாமூர்த்திக்கு சினிமா என்ற வடிவம் புரியவில்லை. கூத்து என்கிற வடிவம் எனக்கு புரியவில்லை. ஆனாலும், நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து இயங்கினோம். அங்குதான் சுவாரசியம் நிகழ்கிறது. 'அவதாரம்' படத்திற்கு கண்ணுக்குப் புலப்படாத ஒரு பலம் இருக்கு என்றால் அது தட்சிணாமூர்த்திதான். ஒரு ஆன்ம பலம்தான் அது.

தட்சிணாமூர்த்தி வாத்தியாருடனான அனுபவங்களுடன், நான் என்ன நினைத்தேனோ அதையெல்லாம் சேர்த்து திரைக்கதையை மீண்டும் எழுதினேன். அப்படி எழுதினது நீண்டதாக இருந்தது. முதன்முதலாக எழுதுகிற திரைக்கதை என்பதால், அதில் ஒவ்வொன்றும் எவ்வளவு நேரம் என்பதை நான் குறிப்பிடவில்லை. அந்த திரைக்கதை நீண்டதாக இருந்தாலும், எல்லாவற்றையும் எடுத்தேன். அது மூன்றரை மணி நேரம் படமாக இருந்தது.

எவ்வளவு செலவு ஆனது?

பட்ஜெட் அன்றைய முப்பது லட்ச ரூபாய். முப்பத்தி ஐந்தே நாட்களில் படம் பிடித்தோம். நான் பிறகு எடுத்த மற்ற படங்களின் படப்பிடிப்பின் போது கூட எனக்கு மன அழுத்தம் இருந்தது. 'அவதாரம்' எடுத்தபோது, எனக்கோ அந்தப் படத்தில் பணிபுரிந்த மற்றவர்களுக்கோ கொஞ்சம்கூட எந்த ஒரு மனஅழுத்தமும் இல்லை. படப்பிடிப்புத் தளத்தில் எல்லோருமே மிக சந்தோஷமாக இருந்தோம்.

திருச்சிக்குப் பக்கத்தில் உள்ள குளித்தலையிலும் குளித்தலையைச் சுற்றியுள்ள இடங்களிலும்தான் எடுத்தோம். காலையில் ஏழு மணிக்குப் படப்பிடிப்பைத் துவக்குவோம். எனக்கு எப்பொழுதும் மதியம் ஒரு குட்டித்தூக்கம் போடணும். அதனால் பன்னிரெண்டரை மணிக்கே படப்பிடிப்பை முடித்துவிட்டு தூங்கச் செல்வேன்.

- சந்திப்பு: ஃபிம்நியூஸ் கிருஷ்ணன் -

தொடர்ச்சி 37ஆம் பக்கம்

**BANU BEAUTY CREATION**



For all your bridal makeup, other occasions make up, Upto. Saree pleating, Ironing, Much more with negotiable price.

*(With Certified Licence)*

**Contact: 416.885.0992**

**AERO COURIER**

Fast & Secure World Wide Service

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது......

கொழும்பு-திருகோணமலை-மட்டக்களப்பு-மன்னார்-வவுனியா

கிளிநொச்சி-யாழ்ப்பாணம் கண்டி மற்றும் இந்தியா-ஐரோப்பிய

நாடுகள் அனைத்து இடங்களுக்கும் உங்கள் பொதிகளை

பாதுகாப்பாக அனுப்ப வேண்டுமா? எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!

**Tel: 416.292.0444** 5635 Finch Ave East Unit 2&3 Toronto On.M1B 5K9

# மெட்ராஸ் நாற்பது வரிகள் - இரு விமர்சகர்கள்

தமிழ் அரசியல் படங்களில் முக்கிய படமொன்று அண்மையில் வெளிவந்துள்ளது. மெட்ராஸ் என்ற அப்படம் பற்றிய இரு எழுத்தாளர்களின் முக்கிய பதிவுகள் இவை

## மெட்ராஸ் திரைப்படம் பற்றி நாலு வரி

• ஆடுகளம், மதயானைக் கூட்டம் வரிசையில் வைக்கத்தக்க ஒரு படம்.

• இடைவேளை வரை மிரட்டல். இடைவேளைக்குப் பிறகும் மோசம் என்றெல்லாம் இல்லை. நன்றாகவே உள்ளது. ஆனால் வழக்கம் போன்ற ஹீரோயிஸம் பாணிக்குப் போனதே பெரிய சறுக்கல். அதிலும் கடைசிக் காட்சியில் ஹீரோ கால்பந்து ஆடுவதைக் காட்டி அதைப்போல வில்லன்களைப் பந்தாடுகிறார் என்று காட்டியிருப்பது மிகப்பெரிய சறுக்கல். (சவுக்கு வெளியிட்டிருந்த கட்டுரையில், இப்படம் கருப்பர் நகரத்தின் காப்பி என்று எழுதும்போது, கருப்பர் நகரத்தில் வரும் ஹீரோ கால்பந்து ஆடுபவர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எது காப்பி எது மூலம் என்றெல்லாம் எனக்குத் தெரியாது. ஒருவேளை காப்பி என்றால், காப்பி அடிப்பவர் ஏன் அப்படியே கால்பந்து ஆடுபவராக வைத்தார் என நினைத்துக்கொண்டேன். இந்தக் காட்சிக்காகத்தான் என்றால், சிரிப்பே வருகிறது. கபடி ஆடுபவராக வைத்தி ருக்கலாம். காப்பி அடிக்கவே கூடாது. அடித்தே தீரவேண்டும் என்றால், மூலத்தைவிட ஒருபடி மேலே போய்விட வேண்டும். அல்லது குறைந்தபட்சம் அதுவேறு இதுவேறு என்று சொல்லும் வாய்ப்பைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும்.

• தலித்துகளுக்கான படம் என்று பெரிய பிரசாரம் நடக்கிறது. இருக்கட்டும். நல்ல விடயம்தான். தலித்து களுக்கான படம் மிகத் தெளிவான அடையாளங்களுடன் வரவேண்டியது அவசியம். ஆனால் இப்படம் அப்படி அமையவில்லை என்பதுதான் வேதனை தருகிறது. நாமாக இதை தலித் திரைப்படம் என்று எடுத்துக்கொள்கிறோம். அல்லது அப்படிச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். படத்தை இயக்கியவர் தலித் என்பதால், இப்படத்தின் மூலம் தங்கள் 'படைபலம்' (படைபலம் பற்றி ரெண்டு மூணு பெத்துக்க சொல்லி வருகிறது. வீரத்தாய் திட்டத்தில் ராம கோபாலனும் இதையே சொன்னார். இரண்டும் ஒன்றல்ல. ஆனாலும் என்னவோ ஒற்றுமை உள்ளது) உலகத்துக்குத்



• ஹரன் பிரசன்னா •

தெரியட்டும் என்று நினைத்துக்கொண்டு செயல்படுகிறார்கள் போல. இதில் தவறில்லை. ஆனால் அதற்காக இப்படம் தலித்துகளுக்கான கனவுப்படமெல்லாம் இல்லை. இன்னும் நாம் ஒடுக்கப்பட்ட சாதிகளின் பெயர் சொல்லாத முதல் மரியாதை, காதல், மதயானைக்கூட்டம் போன்ற படங்களில் இருந்து ஒரு இம்மிகூட முன்னேறிவிடவில்லை.

• இது தலித்துகளுக்கு உள்ளே நடக்கும் பிரச்சினையா அல்லது தலித்துகளுக்கும் நாயுடுகளுக்குமான பிரச்சினையா (அப்படி ஒன்று இருக்கிறதா) அல்லது ஒரே கட்சிக்குள் நடக்கும் பிரச்சினைகள் மட்டும்தானா என்ற குழப்பமெல்லாம் எவ்வகையிலும் தெளிவாகச் சொல்லப்படவில்லை. நாமம் வைத்துக்கொண்டு வருபவர்களை இணையப் புரட்சிக்காரர்கள் தலித்துகள் என்று எப்போதும் சொன்னதில்லை. அவர்களை மேல் சாதிக்காரர்கள் என்றே ஓட்டியிருக்கிறார்கள். ஆனால் அதே பொதுப்புத்திக்காரர்கள் இப்படத்தை எப்படி தலித்துகளின் படமாக ஏற்றுக்கொண்டார்கள் எனத் தெரியவில்லை. நம் ஜனம் முன்னேற வேண்டும் என்ற வசனத்தை இருதரப்பும் பேசிக்கொள்கிறார்கள் என்பதால் குழப்பம் உச்சமடைகிறது.

• வட சென்னையை சிறப்பாகக் காட்டியிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் நிறையப் படங்கள் வட சென்னை யைச் சிறப்பாகக் காட்டியிருக்கிறது என்றே நினைக்கிறேன். ஆனால் தேவைக்கு மட்டும் வட சென்னையைக் காட்டிவிட்டுச் செல்லும் படங்களிலிருந்து மாறுபட்டு, ஒட்டுமொத்த படமே வடசென்னையில்தான் நடக்கிறது.

• இத்தனை மெனக்கெட்டவர்கள் வெண்பதுமை போல இருக்கும் கார்த்தியை எப்படித் தேர்ந்தெடுத்தார்கள் எனத் தெரியவில்லை. பெரிய குறை இது. இதற்கும் ஏதோ சாதித் தொடர்பே காரணம் என்றார்கள். யார் யார் என்ன என்ன ஜாதி என்றெல்லாம் தெரியாததால் என்னால் இதனுள் மேற்கொண்டு போகமுடியவில்லை. இக்குறையைத் தீர்ப்பது அன்பு மேரி காதல் காட்சிகள்.
அட்டகாசம்.

தொடர்ச்சி 33ஆம் பக்கம்





தாய்வீடு இதழ்
வழங்கும்

# அரங்கியல் விழா

எதிர்வரும் ஒக்டோபர் 18ம் 19ம் திகதிகளில்
1785 Finch Avenue வில் அமைந்திருக்கும் York Woods Library Theatre கலையரங்கில்,
மூன்று நாடகங்கள்,

கே. கே. ராஜாவின் நெறியாள்கையில்
"தீவு"

ஞானம் லெம்பட்டின் நெறியாள்கையில்
"காத்திருப்பும் அகவிழிப்பும்"

பொன்னையா விவேகானந்தனின் நெறியாள்கையில்
"சுமை"

18ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒன்று முப்பதுக்கும் ஆறு மணிக்குமாக இரண்டு காட்சிகள்,

19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நான்கு மணிக்கு ஒரு காட்சி.

அன்றாட வாழ்வின் அரங்கப் பதிவுகளாக தாய்வீடு வழங்கும்
அரங்கியல் விழா.

மேலதிக விபரங்களையும்
நுழைவுச் சீட்டுகளையும் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
**419 857 6409**

தாய் வீடு
THAIVEEDU HOME & LIVING

# சுவையான கல் சூப்

ஒருவர் பல நாட்களாக நடந்து ஒரு புதிய ஊருக்குள் வந்தார். அவர் பல நாட்களாக நடைபயணத்தை மேற்கொண்டதால் மிக களைப்பாக இருந்தார். அவருக்கு அந்த ஊரில் ஒருவரையும் தெரியாது. கையில் நிறைய பணமும் இல்லை.

எனவே அவர் கண்ட அனைவரிடமும் தங்க இடம் ஒன்று கேட்டார். ஆனால் அந்த ஊரில் ஒருவரும் அவருக்கு உதவி செய்யவில்லை. ஆக ஒருவன் மட்டும் அந்த பயணியிடம் சமைக்க பெரிய பழைய பாத்திரம் ஒன்றை கொடுத்தார். அவர் 'பொதுவாக பயணிகள் தங்கும் இடம் இதுவாகும்' என்று அந்த பயணிக்கு பழைய கட்டிடம் ஒன்றையும் காட்டினார்.

அங்கு சென்ற பயணியும் தன்னுடைய கொஞ்ச சாமான்களை வைத்து விட்டு



இருந்தபோது, அவரது காசுப் பை காணாமல் போய்விட்டதைக் கண்டார்.

இப்பொழுது உணவுக்கு என இருந்த கொஞ்ச பணமும் துலைந்து விட்டது. எனவே அவர் சற்று நேரம் யோசித்து விட்டு, அந்த விடுதியிலிருந்த கிணற்றிலிருந்து, அந்த கிராமத்தவர் தந்த பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி அந்த ஊரின் கடைகள் இருக்கும் தெருவிற்கு போய், மூன்று கல்லு வைத்து நெருப்புமூட்டி பாத்திரத்தை கொதிக்க வைத்தார். ஊருக்கு புதியவர் என்ன செய்கிறார் என நினைத்து கடையில் சாமான் வாங்க வந்தவர்கள் எல்லோரும் அவரை சூழ்ந்து நின்றனர். 'என்னுடைய ஊரில் கல் போட்ட சூப் செய்வார்கள். இதை சாப்பிட விரும்புவர்கள் இங்கே இருக்கலாம்' எனக் கூறி ஒரு கல்லை பாத்திரத்தில் போட்டார். சில சனம் சென்று விட்டனர். ஆனால் பலர் ஆவலுடன் பார்த்தனர்.

அப்பொழுது அருகிலிருந்த மரக்கறி கடைக்காரர், 'இதையும் சூப்பில் போட்டால் இன்னும் சுவையாக இருக்கும்' என்று சில மரக்கறிகளை பாத்திரத்தில் போட்டார். இதைக் கண்ட மளிகை சாமான்கள் விற்கும் கடைக்காரர். 'சூப் என்றால் இதுவும் தேவை' என்று உப்பும் மிளகும், பாத்திரத்தில் போட்டுவிட்டார். இப்படி ஊர்க்காரர்கள் பலர் வந்து பாத்திரத்தில் தங்களால் முடிந்தவற்றை போட்டனர். கொஞ்ச நேரத்திற்கு பின்பு பயணியும், 'சூப் விரும்புவர்கள் வந்து வாங்குங்கள்' என்று கூறிக்கொண்டு, சூப் வாசனையை மணந்து வந்தவர்களிடம் சூப்பை விற்றார். ஊர்மக்கள் சூப்பை ருசித்தனர். சூப் முடிந்த பின்னர், அதை விற்று வந்த பணத்தை சேர்த்துக்கொண்டு, சூப்பில் சாமான்கள் போட்டவர்களுக்கு நன்றி கூறிவிட்டு பயணி விடுதிக்கு சென்றார்.

இதை எல்லாம் கண்ட வியாபாரி ஒருவர் பயணியின் அறிவை கண்டு அவருக்கு வேலையும் தங்க இடமும் கொடுத்தார்.

**நீதி: வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.**



ஞா. ஆரணி
அகவை 16

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# சைவசித்தாந்தத்தின் ஒளியை உலகெங்கும் பரப்பிய சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் குருபூசை

சிவதொண்டன் தில்லையம்பலம் சிவயோகபதி
உலக சைவப் பேரவை - கனடா

சைவ உலகத்திற்கு அளப்பரிய சிவதொண்டு செய்வதற்கு 1927 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி வடஅமெரிக்காவில் கலிபோனியாவில் ஜனனம் செய்த ஒரு அவதார புருஷர் எங்கள் குருதேவர் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள். அவர் இளம் பராயத்திலேயே தமது பெற்றாரை இழந்து விட்டார். இவரின் பூர்வ புண்ணியவசமாக இருபது வயதிலேயே இவருக்கு ஆன்மீக உதயம் ஏற்பட்டு துறவு நிலைக்கு ஆளாகி விட்டார். உலக பந்தங்களைத் துறந்து பரமசிவ தத்துவங்களின் மகத்துவத்தை உணர்வதற்காகத் தவத்திலும் தியானத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அவரது தூய்மையான யோகப் பயிற்சியினால் அவருக்கு முழுமையான ஞான அறிவு கிட்டியது.

குருவருளைப் பெற்று பின்பு திருவருளை அடையும் பெருநோக்குடன் ஞானபுருஷரான குருதேவர் தமது இருபத்திரண்டு வயதில், கொழும்புத்துறையில், மிக எளிமையான முறையில் அன்பர்களுக்கு அருட்கடாட்சம் அருளிவந்த எங்கள் ஞானகுரு சிவயோக சுவாமிகளின் அருட்கண் பார்வையுடன், இளந்துறவியாகிய திருநாள் 1949 ஆம் ஆண்டு வைகாசிப் பூரணை தினமாகிய ஒரு நிறைந்த நாள். அன்றைய தினம் சிவயோக சுவாமிகள் இளந்துறவியாகிய குருதேவருக் குப் பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்து சுப்பிரமுனிய சுவாமிகள் எனும் நாமதீட்சை அளித்தார். தீர்க்கதரிசியான எங்கள் சிவயோகசுவாமிகள் சைவசித்தாந்த தத்துவங்களையும் சைவக் கோயில்கள் கட்டி எழுப்பும் திருப்பணிகளையும் முறையே உலகெங்கும் பரப்பியும் செயற்படவும் மிகப் பரந்த நோக்குடன் குருதேவரை இனங்கண்டு அந்தப் புனிதமான மிகப்பொறுப்புள்ள சிவ-தொண்டினைச் செய்யும்படி கட்டளையிட்டு, குருதேவருக்கு அருள்செய்தார்.



குருதேவரும் தமது குருவின் விருப்பப்படி அமெரிக்காவிற்குத் திரும்பி வந்து தனது ஞானகுரு உபதேசித்தபடி சிவப்பணியாக நிறைந்த மனதுடன் நெறி தவறாமல் "இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற முழு நம்பிக்கையுடன் கர்ம வீரராகச் செயற்பட ஆரம்பித்தார். உலகம் முழுவதும் வியந்து பாராட்டத்தக்க சிவதொண்டுகள் பல ஆக்கபூர்வமாக செய்தார்.

உலகத்தின் கிழக்கில் இந்தியாவிலே ஒரு புண்ணிய காசிஷேத்திரம் போல், சைவ மக்களுக்கு மேற்கில் அமெரிக்காவில் வைலுவ நதிக்கரையில் அமைந்திருக்கும் குவை சைவ சித்தாந்த ஆச்சிரமும் அங்கு வெகுவிரைவில் பிரதிஷ்டை செய்யப்பட விருக்கும் சன்மார்க்க இறைவன் கோயில், மிக அற்புதமான முறைகளில் நிர்மாணிக்கப் பட்டு வருகிறது. இதன் திருப்பணிகள் பூரணமாக நிறைவேறுவதற்கு உலகெங்கும் வாழும் சைவ மக்கள் யாவரும் குவை சைவசித்தாந்த ஆச்சிரமத்துடன் தொடர்பு கொண்டு நன்கொடையாக நிதி வழங்கி குருதேவருக்கு எங்கள் நன்றிக்கடனைச் செலுத்துவது முக்கிய கடமையாகும். சைவ உலகின் ஒளிச்சுடராக விளங்கிய குருதேவர் அவர்கள் 13ஆம் திகதி நவம்பர் மாதம் 2001 ஆம் ஆண்டில் கனடா நேரப்படி காலை 5:54 மணியளவில் மகாசமாதியாகி சிவனின் பொற்பாதங்களை அடைந்து சிவசோதியுடன் கலந்து கொண்டார்.

ஒரு பொல்லாப்புமில்லை
எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்
நாம் ஒன்றுமறியோம்
முழுவதும் உண்மை.
-சிவயோக சுவாமிகள்

குருதேவர் சமாதி நிலை அடைந்து 13 வருடங்கள் பூர்த்தியாகிய 13 வது மகா குருபூசை, ஐப்பசித் திங்கள் சித்திரை நட்சத்திரமன்று ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி, 2014, புதன்கிழமை ஆகும். இந்த நிலையில் சைவசமய அன்பர்கள் யாவரும் எங்கள் நாளாந்த காலை, மாலை கடவுள் வழிபாடுகளிலும், பிரார்த்தனைகளிலும் எங்கள் குருநாதன் சிவயோக சுவாமிகளை யும், சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளையும் மனம் கசிந்து வழிபடுவோமாக! எங்கள் நாளாந்த வாழ்க்கையிலும் அவர்கள் காட்டிய வழியில் ஆணவத்தை நீக்கி, ஆன்ம ஈடேற்றத்திற்குச் சிவநாமத்தைச் சொல்லி ஒளிமயமான வாழ்க்கைப் பாதையில் செல்வோமாக!

வாழ்க சிவயோக குருபரன் திருவடி வாழ்க!
வாழ்க குருதேவர் திருநாமம் வாழ்க!
வாழ்க, மேன்மைகொள் சைவநீதி வாழ்க!
வாழ்க, வாழ்க, இவ்வையகம் வாழ்க!

ஓம் நமசிவாய! ஓம் சாந்தி!



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# Education

## Review Questions14 -19

➢ **CHEMISTRY 12**

**(A) Predict the most likely geometry**

(i) $NO_3^-$ (ii) $NO_2^-$ (iii) $SO_4^{2-}$ (iv) $CO_3^{2-}$ (v) $I_3^-$

(vi) $CH_3^+$

**(B) Explain how the emission spectrum of hydrogen is related to the energy levels in hydrogen.**

**(C) Compare 3rd ionization energies of magnesium and fluorine**

➢ **ADVANCED FUNCTIONS 12**

**Consider the function** $f(x) = \frac{3}{4x-5}$,

**(i) Determine the following key features of the function (i) domain (ii) range (iii) $x$ –intercept(s) (iv) y- intercept (s) (v) equation of the vertical asymptote: (vi) equation of the horizontal asymptote:**

**(ii) Sketch a graph of the function**

➢ **BIOLOGY 12**

**(i) Compare the hydrogen–bonding patterns characteristics of the α- helix and β- pleated sheet.**

**(ii) What type of RNA has the shortest lifetime in cells.**

**Describe the differences between mRNA, tRNA and rRNA**

## Answer Key : 14-18

**CHEMISTRY 12**

**Combustion of combustion of $C_3H_8(g)$**

$H_{2(g)} + ½ O_{2(g)} \rightarrow H_2O_{(l)}$ $\Delta H^o = -285.8kJ$

........X (2)

$C_3H_{4(g)} + 4 O_{2(g)} \rightarrow 3 CO_{2(g)} + 2 H_2O_{(l)}$

$\Delta H^o = -1937kJ..$

$C_3H_{4(g)} + 2H_{2(g)} \rightarrow C_3H_{8(g)}$ $\Delta H^o =$

290kJ.......... X (-1)

And then add, results,

**$C_3H_{8(g)} + 5 O_{2(g)} \rightarrow 3CO_{2(g)} + 4H_2O_{(l)}$ $\Delta H^o = -2798.6kJ$**

**DATA MANAGEMENT 12**

(i) Probability, ${}_7C_3$ / ${}_{15}C_3$ = 1/13

**(ii) At least/ at most = total cases – unwanted cases**

${}_{52}C_5 - [\,{}_{48}C_5 + {}_4C_1 - {}_{48}C_4) = 108336$

**PHYSICS 12**

Ans: bomber plane...(ans 30 ° to the horizontal)

**PHYSICS 11/12**

**For the car Vc = 24 m/s; Police car Vi =0 m/s², a =2m/s². If the police car catch the car in '$t_p$' s and with the displacement of 'd' m.**

**For the car $\Delta$ d = v $\Delta$ $t_c$; $t_c = (t_p +3)$; $\Delta$ d = 24 ($t_p$ +3)**

**For the police car $\Delta$ d= $v_i\Delta$ t + ½ a$\Delta$ t² ;**

**$\Delta$ d= 0 + ½ x 2 $\Delta$ $t_p^2$**

**consider the distance travelled by the speeder and the police car are same.**

**24 ($t_p$ +3)= ½ x 2 $\Delta$ $t_p^2$**

**Solve for $t_p$ using quadratic formula.**

**( ans=26.7 )**

**(ii) ) 0. 6 km (downstream) (b) 0.9 km/h (downst.)**

➢ **POLYNOMIAL FUNCTION 12**

**Consider the graph is passing through (-1, 17))**

$f_{(x)} = ax^3 + bx^2 + cx + d$

$a + b + c + d = -7$ ………..(1)

$8a + 4b + 2c + d = -8a + 4b - 2c + d$

$4a + c = 0$ ….(2)

**The graph passes through origin, d= 0 ..............(3)**

**The graph passes through (-1,17)**

$-a + b - c + d = 17$ …….(4)

**Solve for a, b, c.**

$f_{(x)} = 4x^3 + 5x^2 - 16x$

**Ans. key 14-19 - next issue**

☎ 647 341 3975

K.A.Srikrishnaraj B.Sc, MSc. PhD

ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE

# ஒரு துப்பாக்கியும்...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆகவே திரைப்பட இயக்குனரின் நோக்கத்திற்கு எதிராகவே இது இறுதியில் அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டனர். இதற்கு இயக்குனர் தனது நோக்கம் கடந்த தலைமுறைகளின் சிந்தனைகள் அழியவேண்டும் என்பதையே குறியீடாகப் பயன்படுத்தியதாக குறிப்பிட்டார்.

இயக்க வன்முறைகள் தொடர்பாக குறிப்பிடும் பொழுது அநேக இயக்கங்களும் இவ்வாறன வன்முறைகளில் ஈடுபட்டனர் மற்றும் பல சித்திரவதைகளை தமது சக தோழர்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் செய்தனர். ஆனாலும் இங்கு ஒரு சமரசம் மேற்கொள்ளப்பட்டதாகவே விமர்சித்தனர். சிலர் புலிகளே போராட்டத்தின் குறியீடு எனவும் ஆகவே அது சரியாகவே சித்தரிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வாதம் செய்தனர். போர் சூழல் மற்றும் சித்திரவதைகள் போன்ற அனுபவங்களுக்கு ஊடாக வருகின்ற ஒரு மனிதர் சக மனிதரை புரிந்து கொள்ளாதவராக எப்படி இருப்பார் என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது. இத்திரைப்படத்தில் வந்த மேற்குறிப்பிட்ட பல பாத்திரங்கள் அவ்வாறான அனுபவங்களைப் பெற்றிருந்தபோதும் ஒவ்வொருவரும் பொறுப்பற்றதனமாக பக்குவமற்றே தம் பிரச்சனைகளுக்கு எதிர்வினையாற்றினர். இவர்கள் பொறுப்பான பக்குவமான புரிந்துணர்வான எதிர்வினையாற்றி இருக்கமுடியாதா? தமது கடந்த காலம் தொடர்பான புரிதலில்லாதவர்கள் அதைப்பற்றி மேலும் தேடி அறியாதவர்கள் தம்மை மாற்ற முயற்சிக்காதவர்கள் மீள மீள இப்படியே செயற்படுவார்கள். இது ஒவ்வொருவரது தேடலும் அகமாற்றம் தொடர்பான அக்கறையுமாகும். அது இல்லாதவரை எந்த அனுபவங்களும் ஒருவரை ஆரோக்கியமானவராக மாற்றாது. இதற்கு இன்றைய ஈழத்து மற்றும் புலம் பெயர்ந்த ஈழத்து தமிழ் சமூகத்தின் வாழ்வு நல்ல சாட்சியாகவே இருக்கின்றது. இவர்கள் தலைவிதியை மாற்றுவதாக கூறுகின்ற அரசியல் வாதிகள் கூட கடந்த காலத்தில் இருந்து கற்காதபோது பொது மக்கள் எம்மாத்திரம்.

நான்காவதாக பொலிஸ் புலனாய்வாளர் தனது கொலையை நியாயப்படுத்துவது தொடர்பான விமர்சனம் முன்வைக்கப்பட்டது. குறிப்பாக இன்றைய வட அமெரிக்க கனேடிய சூழலில் பல (குறிப்பாக வெள்ளையின) காவல் துறையினர் சக இனத்தவர்களை சிறு குற்றங்களுக்காகவும் அல்லது குற்றமே இல்லாதபோதும் அல்லது குறிப்பிட்ட நபர் ஆபத்தானவராக இல்லாதபோதும் கூட அவரை சுட்டுக் கொல்வதை வழமையாக கொண்டுள்ளனர். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் வெள்ளையின காவல் துறையைச் சேர்ந்த புலனாய்வாளர் தனது குற்றவுணர்வாலும் உணர்ச்சிமயமான தன்மையாலும் ஒரு குழந்தையைப் பாலியல் துஸ்பிரயோகம்



செய்து கொலை செய்தவரை கொலை செய்கின்றார். இக்காட்சியானது அந்தக் கொலையை நியாயப்படுத்துகின்றது. மேலும் தான் தன் இதயம் சொல்கின்ற வழிதான் நடந்தேன் எனவும் ஆனால் குழந்தையைக் காப்பாற்ற முடியவில்லை எனவும் கவலை கொள்கின்றார். இவ்வாறு கூறுவதுகூட தான் குற்றவுணர்விலும் உணர்ச்சியிலும் செய்த கொலையை நியாயப்படுத்துவதாகவே உள்ளது. இக்காட்சியும் கூற்றும் இன்றும் ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு வெள்ளையின காவல் துறையினர் செய்கின்ற அவசியமற்ற கொலைகளை நியாயப்படுத்துவதாகவே இருக்கின்றது. இறுதியாக இத்திரைப்படத் தயாரிப்புக்கு ஐம்பதாயிரம் டொலர்களே திட்டமிடப்பட்டது. ஆனால் மேலும் ஐம்பதாயிரம் டொலர்கள் தேவைப்பட்டது என தயாரிப்பாளர் குறிப்பிட்டார். அதேவேளை இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியில் இதைவிட குறைந்த செலவில் தயாரித்திருக்கலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. அதேவேளை இதற்கான ஆதரவை திரட்டுவதற்கு தமிழகப் பத்திரிகைகள் எழுத்தாளர்கள் பலரிடம் பங்களிக்க கேட்டும் அது கிடைக்கவில்லை. தமிழகத்தில் ஓடாத படத்திற்கு பங்களிக்க மாட்டோம் என்ற பதிலே கிடைத்தது.

இத்திரைப்படம் பல்வேறு அடையாளங்களை தன்னுள் கொண்டுள்ளது. முதலாவது அடையாளம் இது ஒரு கனேடிய இரு மொழித் திரைப்படம். கனேடிய தமிழர்களின் தமிழ்த் திரைப்படம். புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களின் திரைப்படம். தமிழர்களின் திரைப்படம். இலங்கையர்களின் தமிழ்த் திரைப்படம். ஈழத்தவர்களின் திரைப்படம். யாழ்ப்பாணத்தவர்களின் திரைப்படம். உடுப்பிட்டி கிராமத்தவர்களின் திரைப்படம் என பல அடையாளங்களை இத்திரைப்படம் கொண்டிருக்கின்றது. அந்தடிப்படையில் இவர்களுக்கான ஆதரவுகள் (ஆதரவின்மைகளும்) கிடைக்கின்றன.

ஒரு இலங்கை, ஈழத்து, புலம்பெயர் தமிழராக நாம் பெருமைப்படக்கூடிய ஈழத்தவர் ஒருவர் இயக்கிய ஒரு தமிழ் சினிமா ஒரு மோதிரமும் ஒரு தூப்பாக்கியும். இதில் நடித்த பெரும்பான்மையானவர்கள் எமது நண்பர்கள். இவர்கள் மிகவும் நன்றாக நடித்திருக்கின்றமை நமக்கு பெருமையாக இருக்கின்றது. இதற்காக திரைப்படத்தின் நெறியாளர் லெனின் எம். சிவம் பெருமைப்படலாம். இவர் நடிகர்களை மட்டும் திறம்பட நடிக்க வைக்கவில்லை, இலங்கை, ஈழம் மற்றும் புலம் பெயர் மக்களின் வாழ்க்கைளை அவர்களின் பல கதைகளை ஒன்றிணைத்து வெளிப்படுத்தியுள்ளது மட்டுமல்ல பல கோணங்களில் உரையாடியுமுள்ளார். முதல் முறையாக ஒரு தமிழ் திரைப்படத்தில் ஈழத் தமிழர்களின் உரையாடல் மிக யதார்த்தமாக வந்துள்ளது. ஈழத்து தமிழர்களை பாத்திரமாக தமது திரைப்படங்களில் கொண்டுவரும் தமிழக திரைப்பட நெறியாளர்களுக்கு

# சிறப்பாக நடந்து முடிந்த நடன அரங்கேற்றம்

ஆகஸ்ட் மாதம் முப்பத்தோராம் (August, 31st, 2014) திகதி ஞாயிற்றுகிழமை றிச்மண்டில் சென்ரர் இல் (Richmond Hill Centre for the performing Arts ) செல்வி. அக்சயா ரகுநாதன் அவர்களின் நடன அரங்கேற்றம் நடைபெற்றது. இறைவணக் கத்துடனும் குரு, கலைஞர்கள் பெரியோர்கள் ஆகியோரின் ஆசீர்வாதத்துடன் நடன நிகழ்ச்சி புஸ்பாஞ்சலியுடன் ஆரம்பமானது. 'திலக நர்த்தனாலயம்' என்ற கலைக்கோவி லின் அதிபர் நடனக்கலை வித்தகர் திருமதி. சுமித்திரா பத்மலிங்கம் அவர்களின் மாணவி யான அக்சயா ரகுநாதன் அவர்கள் தாம் பன்னிரண்டு வருடங்களாக முறையாகக்கற்ற



**- ரஞ்சி கதிர் -**

நடனக்கலையை சில மணித்தியாலங்களில், ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், கீர்த்தனை, பாரதியார் பாடல், மீனாட்சி அம்மன் பாடல், தில்லானா, மங்கலம் என பல்வேறு நடன வகைகளில் தன் நடனத் திறன்களை வெளிப்படுத்தினார். சபையோர் மிகவும் உன்னிப்பாக தம்மை மறந்து நடன நிகழ்ச்சிகளை பார்த்து ரசித்துக் கொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

மதுமதி சிவகுமாரன் அவர்களின் கணீரென்ற குரலில் இசைத்த பாடல்களும் சங்கீத வித்துவான் தனதேவா மித்திரதேவாவின் வயலின் இசையும், ஸ்ரீராமகிருஸ்ணன் இராசரத்தினம் அவர்களின் மிருதங்கமும் முனைவர். செல்வநாயகம் தயாபரன் அவர்களின் புல்லாங்குழல் இசையும் நடன ஆசிரியர் பரதக்கலாவித்தகர் திருமதி. சுமித்திரா பத்மலிங்கம் அவர்களின் நட்டு வாங்கமும் நடன நிகழ்ச்சியை மேலும் மெரு கூட்டியது. 'திக்குத்தெரியாத காட்டில்…." என்ற பாரதியார் பாடலுக்கும்" கொண்டை முடி……..", என்ற மீனாட்சி அம்மன் பாடலுக்கும் அக்சயா வெளிப்படுத்திய நவரச பாவங்கள் சபையோர் மனதைக் கொள்ளை கொண்டது. ஆரம்பத்தில் இருந்து முடியும்



வரை அத்தனை நடன உருப்படிகளிலும் அக்சயா மிகவும் லாவகமாக ஆடியமை பாராட்டுக்குரியதே. நடனவகைகளுக்கு ஏற்ற உடைகளும் அழகிய மேடை அமைப்பும், நேர முகமைத்துவமும் நடன ஆசிரியரின் நெறியாழ்கையையும் அணிசேர் இசைக் கலைஞர்களின் சிறந்த பங்களிப்பையும் பாராட்டாமல் இருக்க முடியாது. நடனக் கலைவித்தகர் திருமதி சுமித்திரா பத்மலிங்கம் அவர்கள் பல நடன நிகழ்ச்சி களை ஆற்றுப்படுத்தி தொலைக்காட்சி களிலும், ரொரன்ரோ பாடசாலைகளிலும் தனிப்பட்ட முறையில் பல மாணவர்களுக்கு அரங்கேற்றங்களையும் மேடையேற்றியமை இவரது திறமைக்குச் சான்றாகும்.

இத்தகைய நடனத்திறனும் செயல் திறனும் மிக்க நடன ஆசிரியர் அக்சயாவுக்கு குருவாக வாய்த்திருத்தலும் ஓர் சிறப்பு அம்சமாகும். அதே போலவே நடனக் கலையில் ஆர்வமும் தளரா முயற்சியும் பல்திறன்களும் கொண்ட செல்வி. அக்சயா ரகுநாதன் அவர்கள் நடனக்கலையைப் பயின்றது ஆசிரியருக்கு மட்டுமல்ல தமிழ் கூறும் நல்லுலகுக்கே பெருமை சேர்க்கும் நிகழ்வு எனலாம். மேலும் பிரதம விருந்தினராக திரு. இரத்தினசிங்கம் கோபாலபிள்ளை அவர்கள் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக திரு.குகதாசன், திரு. பொன்னையா விவேகானந்தன், திருமதி. வாசுகி நகுலராசா, திரு. கனக மனோகரன் ஆகியோர் கலந்து அரங்கேற்ற நிகழ்வை சிறப்பித்தார்கள்.

திரு. குகதாசன் அவர்கள் அன்று நடை-பெற்ற நடன நிகழ்ச்சிகள் பற்றி தெளிவாக வும் சிறப்பாகவும் இரத்தினச்சுருக்கமாகவும் தம் உரையில் குறிப்பிட்டிருந்தார். அவரது உரை யாவரும் பாராட்டும் வகையில் அமைந்தது. திரு சுதர்சன் துரையப்பா அவர்கள் மிகவும் கம்பீரமான தொனியில் மிகச்சிறப்பான முறையில் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியமை அரங்கேற்ற நிகழ்வுக்கு. மேலும் ஓர் சிறப்பு அம்சமாக விளங்கியது. திரு. பொன்னையா விவேகானந்தன் அவர்கள் நடன நிகழ்சிகள் தொடர்பான தம் கருத்துக்களை தமக்கே உரிய தொனியில் சபையோர் மனம் மகிழ வெளிப்படுத்தினார். திருமதி. வாசுகி நகுலராசா அவர்கள் அக்சயாவின் நடனத் திறன்களையும் நடன ஆசிரியரின் கலைத் திறன்களையும் வியந்து போற்றினார். அவர் 'அறுபத்து நான்கு கலைகளில் ஒன்றான நடனக்கலையினை ஒருவர் நினைத்த மாத்திரத்தில் சபையில் ஆடிவிட முடியாது. அதற்கு சிறந்த பயிற்சியும் திறனும் அமைய வேண்டும் என்றும் அவை அக்சயாவிடம் அமைந்துள்ளது' என பெருமையாகக் கூறி தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

திருமதி மாலினி பாலேந்திரன் அவர்களின் நடன உடை அலங்காரமும் சிறப்பாக அமைந்திருந்தது என்பதை இவ்விடத்தில் குறிப்பிடுவதும் பொருத்தமே. அக்சயாவின் பெற்றோர்களான திரு.திருமதி ரகுநாதன் அவர்களின் முழுஅளவிலான கலைத்துறை ஈடுபாட்டையும் இவ்விடத்தில் பாராட்டாமல் இருக்கமுடியாது. செல்வி அக்சயா அவர்கள் நடனத்துறையில் மட்டுமன்றி கனடாத்தமிழ்க் கல்லூரியில் கடந்த பன்னிரண்டு ஆண்டு களாக தமிழை சிறப்பாக கற்றுவரும் சிறந்த மாணவி என்பதும் இவ்விடத்தில் நினைவு கூருவது பொருத்தமானதே. ஒரு அரங்கேற்ற நிகழ்வுக்கு என்னென்ன அம்சங்கள் அமைய வேண்டுமோ அவை அத்தனையும் அமையப் பெற்ற வெகு சிறப்பான நடன அரங்கேற்ற மாக இனிதே நிறைவேறியது.

# ஒரு துப்பாக்கியும்...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

எவ்வாறு ஈழத்து தமிழர்களின் உரையாடலை தமது திரைப்படங்களில் கொண்டுவருவது என்பதற்கு உதாரணமாக இந்தத் திரைப்படம் இருக்கும் என நம்பலாம். எதுவும் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டதல்ல. இத்திரைப்படமும் அதற்கு விதிவிலக்கல்ல. இருப்பினும் திரைப்படத்தின் இறுதியில் நிச்சயமாக ஒரு புலம் பெயர்ந்த தமிழராக நாங்கள் பெருமைப்படலாம்.

வாழ்த்துக்கள் ஒரு துப்பாக்கி ஒரு மோதிரம் திரைப்படக் குழுவினருக்கு.
இதைவிட சிறந்த அடுத்த படைப்பை எதிர்பார்த்து...

## Mayor's Senior Hall of Fame Awards 2014



மார்க்கம் நகரசபையினால் 2014 ஆம் ஆண்டுக்கான தன்னார்வத்தை தொண்டார் (Volunteer) தெரிவில் மார்க்கம் வாழ் தமிழ் மக்களால் ஏகோபித்த சிபார்சின்படி Mayor's Senior Hall of Fame ஒக்ரோபர் மாதம் 1ஆம் திகதி மாலை 4 மணியளவில் மார்க்கம் நகரசபை மண்டபத்தில் கொடியேற்றும் வைபவத்துடன் கௌரவ நகரபிதா Frank Scarpitti அவர்களால் Mayor's Senior Hall of Fame Awards (சான்றிதழ்) திரு. கந்தையா பரமனாதன் அவர்கட்கு வழங்கப்பட்டது. அச்சமயம் மாநகரசபை அங்கத்தவர்களும் மற்றும் அறிஞர்களும் அபிமானிகளும் கலந்து கொண்டு திரு. பரமனாதன் கந்தையா அவர்களை கௌரவித்து வாழ்த்தினார்கள். இவர் ஒரு சிறந்த சமூக சேவையாளரும் மார்க்கம் தமிழ் முதியோர் சங்க ஸ்தாபகரும் (2003 August 24th), தற்போதைய இச்சங்கத்தின் தலைவராகவும் மக்களால் தெரிவு செய்யப்பட்டு சேவையாற்றி வருவது குறிப்பிட்டத்தக்கது. இவரது சேவை என்னும் பணி மேலும் தொடர வேண்டும்மென வாழ்த்தும் மார்க்கம் வாழ் தமிழர்.

- திரு. வை. வேலுப்பிள்ளை: **905.479.9770**

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

**YOGA - MEDITATION CLASSESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**

**SPACE AVAIL. FOR PROFESSIONAL OFFICES**

1000 - 1800 Sq.ft available for professional offices in GTA Square mall - **Middlefield & Finch.** Dedicated underground parking & locker included.

**Pl. call: 416.315.9397**

# உப்பு...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

'உலக மக்கள் இப்போது சாப்பிடும் உப்பில் 30 சதவீதத்தை 2025 க்குள் குறைக்க வேண்டும்' என உலக சுகாதார நிறுவனம் (WHO) அறிக்கை விடுத்துள்ளது. உயர் இரத்த அழுத்த நோய் கூடுதலாவதால் இது இறப்புகளுக்கு காரணமாகி விட கூடும். உப்பு தானே, என்ன செய்து விடும்! என அசட்டை செய்பவர்களின் சட்டையைப் பிடித்து உலுக்குகிறது இந்த தகவல். பொதுவாக இங்குள்ள மக்கள் உணவு பைக்கற்றுகளில் எந்த ஒரு சத்துக்களையும் குறிப்பிடுவதை பார்க்கலாம். கலோரி, புரோட்டீன், சீனி, கொழுப்பு போன்ற அளவுகளை போடாமல் விற்பனை செய்யமுடியாது. நம்மவர்கள் மனம் போனபடி உப்பினை கறிகளில் போடுவர். ருசி பார்த்து மீண்டும் போட்டுக் கொள்வர். மெகாசீரியல் பார்த்துக் கொண்டு 2 தடவை போடவும் செய்வர். இந்தியாவில் உள்ள ஜோர்ஜ் இன்ஸ்ரியூட் என்ற நிறுவனம் 7,124 உணவுகளை ஆய்வு செய்தது. இதில் 73 சதவீத உணவு பைக்கெட்டுகளில் 'உப்பு அளவு' குறிப்பிடப்படவில்லை. எனவே நவீன உணவுகள் மூலம் நூதனமான வழிகளில் உப்பு வகைகளை உடலுக்குள் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

இரத்த செல்களில் பொட்டாஷியம் என்னும் உப்பு உள்ளது. செல்களுக்கு வெளியே சோடியம் உள்ளது. இந்த இரண்டும் சமமாக இருந்தால் தான் இரத்த ஓட்டம் சீராக இருக்கும். அதிக உப்பு சேரும் போது இந்த சமநிலை மாறும். இது படிப்படியாக இதய நோய், பக்க வாதம் போன்ற பலவற்றையும் கொண்டு வந்து விடும். எனவே உப்பு விசயத்தில மிகவும் கவனம் தேவையாகிறது. இன்றைய பைக்கெட்டு உணவுகளில் கெட்டுவிடாமல் இருப்பதற்கு சோடியம் பென்சோயிட் சேர்க்கப்படுகிறது. சுவைக்காக மோனோ சோடியம் (monosodium), க்ளூடமேட் போன்ற உப்புக்கள் சேர்க்கப்படுகின்றன. பேக்கிங் சோடா, அப்பச்சோடாவை மிருதுவாக்க உப்பு சேர்க்கப்படுகிறது. இவை கண்ணுக்கு தெரியாத உப்புவகைகள். அத்துடன் கல் உப்பு என்ற கடல் மூலம் பெறும் உப்புகளல்ல இவை. பல இரசாயனக் கலவை கலந்து வெள்ளை நிறத்தில் சீனி போல அழகாக வருகின்றன. அதனை அப்படியே கையில் போட்டும், கரண்டிகளில் எடுத்துக் கறிகளில் போடுவது தனி அழகு.

உடலில் உப்பினை கூட்டும் 10 வகை உணவுகள் சமையல் சோடா, சோஸ் வகைகள், றெடிமேட் இறைச்சி, மீன், பாலாடைக்கட்டி, ஊறுகாய், திடீர் சூப், உப்பிட்டு வறுத்த தானிய வகைகள், நொறுக்குத்தீனிகள், விரைவான உணவு களை வழங்கும் மக்டொனால், KFC, Burger King, Harveys போன்றவற்றின் உணவு வகைகள், பைக்கட்டில் அடைத்த காய்கறிகள் அனைத்தும் உள.

நாம் சிலவேளை கறிகளை ருசி பார்த்து விட்டு என்ன உப்புச்சப்பு இல்லாத சாப்பாடாயிருக்கிறது என்போம். உப்பை கூட்டினாலும் குறைத்தாலும் சண்டைக்கு செல்வோம். சில குடும்பங்களில் இந்த உப்பு பிரச்சினை பெரிதும் பூதாகரமாயும் விடுகிறது. ஒரு கதையை படித்து விட்டு கூட 'இது என்ன உப்புச்சப்பில்லாத கதை' என்போம். அந்த அளவுக்கு தினசரி உப்பு எமது அன்றாட வாழ்வில் புகுந்து விளையாடுகிறது.



உப்பு ஒரு தெய்வீக பொருளாகவும் விளங்குவது ஓர் ஆச்சரியம் தான். வீடு குடிபுகுதல் நேரத்தில் உப்பு கொண்டு செல்வது எமது வழக்கம். இதற்கும் பலபடிகள் மேலாக வேறு நாடுகளில் சமய கலாசாரங்களில் பங்கு அதிகம். கிரேக்கர், றோமானியர், எகிப்தியர் கடவுளுக்கு படைத்துள்ளனர். Holy Water என வழங்கும் தூயநீரில் இருந்து உப்பு உருவானதாக கிறிஸ்தவர் நம்புவர். தீர்க்கதரிசி முகமது 'உப்பு உணவின் தலைவர்' Salt is the master of the food என கூறியதாக வரலாறுள்ளது. புத்த சமயத்தில் உப்பு தீமையை அகற்றும் என்கிறது. இவர்கள் சவக்கிரியைகளின் பின்பு வீடு திரும்பும் போது இடது பக்க தோளுக்கு மேலால் உப்பினை எறிவர். பைபிளில் உப்பு பற்றி 35 வாக்கியங்கள் உள. ஜேசுவை பூமியின் உப்பு 'salt of the Earth' என புகழ்வர். யூதர் பாண் மீது கொஞ்சம் உப்பிட்டு கொள்வர். இரு ஒரு கடவுள் போன்ற எண்ணம் தான். பூமியின் மூலகம் என்பர். இவ்வாறு கலாசாரங்களில் ஒரு பூசிக்கப்படும் பொருளாக உப்பு இருந்து வருகிறது.

உப்பு பல்வேறு மருத்துவ துறைகளில் உதவியும் உள்ளது. குறிப்பாக விளையாட்டு வீரர் நீண்ட தூரம் ஓடும்போது களைப்பை தீர்க்க உப்பிட்ட நீர் உதவி வருகிறது. அமெரிக்க விளையாட்டுத்துறை மருத்துவர் பலரில் செய்த சோதனை மூலம் இது தெரியவந்துள்ளது. எனினும் இரத்த அழுத்த நோயாளிகள் பாவிக்க முடியாது.

எந்தக்கடைக்கு சென்றாலும் Windsor Salt என்ற உப்பு பெட்டிகளை காணமுடியும். இதுவே மிக முக்கியமானதும் தனித்துவ மானதுமான நிறுவனமுமாக தொடர்ந்து உள்ளது. இவர்கள் table salt, houeshold salt, coarne kosher salt, half salt, coarse slat, fine sea salt, iodized salt and pepper என விற்பனை செய்கின்றனர். எந்த ஒரு சமையல் முறை (Recipe) யிலும் இது முக்கிய இடம் பெறும். உலகில் அதிகம் பாவிக்கப்படும் ஒரு Mineral இதுவேயாகும். 1983 இல் ஆரம்பித்த Windsor Salt நிறுவனம் தற்போது K & S Windsor Salt Ltd. ஆகியுள்ளது. கனடாவில் மிகப் பெரிய நிறுவனமும் இதுவே. 800 தொழிலாளர் களுடன் இயங்குகிறது. இவர்களுக்கு மூன்று Rock salt mines உள்ளது.

உப்பு 14,000 வேறுவேறு தேவைகளுக்குப் பயன்படுகிறது. பிளாஸ்ரிக், பேப்பர், கிளாஸ், பொலியெஸ்ரர், உரம், சோப்வகை, சலவை திரவம், சாயமூட்டுதல் போன்ற ஆயிரக் கணக்கான தேவைகளுக்கு இது உதவுகிறது. கனடாவின் உப்பு உற்பத்தியில் 68 சதவீதம் தொழில் இரசாயனம், 6 வீதம் பெருந்தெருத்தேவை, 6 வீதம் விவசாயம், 8 வீதம் உணவு உற்பத்தி, 12 வீதம் நீர் சுத்திகரிப்புக்கு உதவுகிறது. கடல்நீர் மூலம் இயற்கை உப்பினை உற்பத்தி செய்வதில் Maldon salt நிறுவனம் உதவுகிறது. இது 130 வருடம் இயங்குகிறது. இவ்வளவெல் லாம் செய்து வரும் உப்பு எதிர்காலத்தில் பல நோயாளருக்கு தீங்காக அமையவுள்ளது.

முதலாவது தீங்கு இரத்த அழுத்தமுள்ளவர்களுக்கானது. அதாவது உப்பின் அளவினை குறைக்கும் போது இரத்த அழுத்தமும் குறைவடையும். உப்பு கூடினால் இரத்த அழுத்தமும் கூடுகிறது. ஒரு நாளுக்கு சாதாரணமாக ஒருவர் 6 கிறாம் உப்பையே உண்ண வேண்டும். ஆனால் மறைமுகமாக பல வழிகளில் உப்பினை கூடுதலாக பாவிக்கிறோம். இதில் பிஸ்கட் தொடக்கம் பல உணவுப் பொருட்களும் அடங்கும். பெருமளவு உணவுப் பொருட்களில் உண்மையான அளவை போடமாட்டார்கள். 1g சோடியம் என்றால் அது 2.5 கிராம் உப்பு அளவுக்கு சமமாகும். இப்படியே கணக்கிடமுடியும். இதன்படி சமையல் செய்யும்போது கவனம் வேண்டும். உப்பு செய்யும் முக்கிய தீங்கு எமது இரத்த குழாய்களை பாதிப்பதாகும். இதனால் ஏற்படுவது பக்கவாதம். மாரடைப்பு, சிறுநீரக கோளாறுகள் என்பனவாகும். மேலதிக உப்பு உண்ணும் போது மேலதிக நீர்ச்சேர்க்கை ஏற்பட்டு இரத்த அழுத்தத்தை கூட்டும். இதேபோன்று மேலதிக நீர் ஏற்பட்டு பலவழிகளில் உடலை தாக்கி விடும். சராசரி அமெரிக்கர்கள் 3,400 மில்லி கிறாம் உணவினை உண்ணுகின்றனர். இதனால் மருத்துவ செலவும் அதிகரிக்கிறது. அடுத்த 10 வருடங்களில் இருதய நோய்களில் 1.2 மில்லியன் மக்கள் பாதிப்புறலாம். உணவுகளில் இயல்பாகவே பொட்டாசிய சத்து உண்டு. அதிக பொட்டாசியம் உடலின் சம நிலையை பாதிக்கிறது. எனவே சோடியம் பொட்டாசியம் குறைவான உணவுகளையே எடுக்க வேண்டும்.

எமக்கு தினசரி 500 மில்லி கிராம் உப்பு தேவைப்படுகிறது. ஆனால் பலர் 10 மடங்கு அதிகமாக எடுக்கின்றனர். 1500 மில். கிராம் எடுத்தாலேயே இரத்த அழுத்தம் கூடுமென்றால் 5,000 மில் கிராம் எடுப்பவர்களின் நிலை எப்படியாகும். எமது மக்கள் கருவாடு, ஊறுகாய் போன்ற நீண்ட கால உப்பு உணவுகளை பாவிக்கின்றனர். இதனால் எம்மவர்களுக்கு இரத்த அழுத்தம் கூட ஏற்படுகிறது. கறிகளிலும், சோற்றிலும் எதுவித கணக்குமின்றி சும்மா மனக்கணக்கில் அள்ளிப் போடுவர். ஆசிய மக்களுக்கு மாரடைப்பு கூடுதலாக ஏற்படுவதை நினைவில் கொள்ளவேண்டும்.

எமது உடல் நிலையை உப்பு பாதிக்கும். உலகில் நடைபெறும் மரணங்களில் இதயகோளாறு, இரத்த அழுத்தம் முன்னிலை பெறுகிறது. உயர் இரத்த அழுத்தம் பெண்களின் மரணத்தில் முக்கியமாகிறது. எமது வாழ்நாளில் மூன்றுக்கு ஒருவர் இந்நோய் உள்ளவர்களே காணமுடிகிறது. நாம் தெரிவு செய்யும் எந்த உணவிலும் 75 வீதமானவை சோடிய கலப்புள்ளவை. உலகின் நீரிழிவு நோயாளிகளையும் பாதிக்கிறது. அவர்களது உணவில் கலந்துள்ள உப்பு பல சிக்கல்களையும் ஏற்படுத்துகிறது. நீரிழிவும் இருந்து இரத்த அழுத்தமும் இருந்தால் பிரச்சினை இரண்டு மடங்காகிறது.

கனடாவில் 50 வயதுக்கு குறைந்தவர்கள் கூட இரத்த அழுத்தம், மாரடைப்பால் பாதிப்புறுகின்றனர். எமது குடித்தொகை வயோதிபர்களை கூட்டுகிறது. பலரும் உடல் எடை கூடி வருகின்றனர். உடற்பயிற்சியும் குறைகிறது. சிறிதளவு உப்பை அல்லது சோடியத்தை குறைத்தால் கூட பலர் உயிர் பிழைக்க முடியும்.

நேரடியான, உடன் மரக்கறிகளை வாங்குவதும் அதனை குறைந்த உப்பிட்டு சமைப்பதும் மிகவும் சிறந்தது. மேசைகளில் வைத்துள்ள மேசை உப்பிற்கு பிரியாவிடை கொடுத்து விடலாம். கண்ணுக்கு தெரியாது விட்டாலும் கவலையில்லை. கடைகளில் உள்ள உடனடி உணவுப் பொருட்களை தவிர்க்கலாம். இதில் சாதாரண அளவினை விட மேலதிக உப்பே இருக்கும். கடைகளில் குறைந்த உப்பு குறிப்பிடப்பட்டுள்ள உணவு பொருட்களை தெரிவு செய்யலாம். எந்த குளிரூட்டப்பட்ட உணவுகளை சாப்பிட முன்பு நீரில் கழுவுதல் அவசியம். பழுது படாமல் இருப்பதற்கு பல மீன் போன்ற உணவுகளில் உப்பு கலந்திருக்கலாம். அதிலுள்ள நீரையும் வெளியேற்றிவிடலாம். இது கூட 25-40 வீத உப்பினை குறைக்க உதவும். உணவுகளில் உருளைக்கிழங்கு, தக்காளி என்பனவற்றை போடுவதாலும் உப்புச் சத்து குறையலாம். Fleur De sel என்ற உப்பு 80 தாதுப் பொருட்களை கொண்ட பிரான்சிய உப்பாகும். கடல் நீரிலிருந்து இது பெறப்படுவதாகும். 'உப்பு' இவ்வளவு பிரச்சினையா என்று பயம் கொள்ளாது அளவுடன் உப்பினை உண்போம்.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# "நான் தவறு...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

இரண்டரை மணிக்கு ஒரு தேநீரோடு எழுப்பு வார்கள். மாலையில் படப்பிடிப்பு முடிந்தபிறகு படிப்பிடிப்புக் குழுவினர் அனைவரும் அப்படியே சென்று காவேரி ஆற்றுக்குள் விழுவோம். இருட்டுகிற வரைக்கும் காவேரி யில் ஆடிவிட்டு திரும்புவோம். அடுத்தநாள் என்ன செய்யவேண்டும் என்பதையெல்லாம் பேசமாட்டோம். ஏனெனில், முழு திரைக்கதையும் முன்பே எழுதப்பட்டு, அந்த திரைக்கதை ஒவ்வொருவரிடமும் இருந்தது.

இசைக்காக இளையராஜாவை அணுகினேன். நான் படம் பண்ணப் போகிறேன் என்று இளையராஜாவிடம் சொன்னபோது, அவர் திட்டினார். தொடக்கத்தில் என் நண்பர்கள் சொன்ன வார்த்தையையே அவரும் சொன்னார். ஆனால், படப்பிடிப்பு முடிந்த முழுப் படத்தையும் பார்த்த இளையராஜா, மிகவும் ஆர்வமுற்று, 'என்னய்யா இப்படி ஒரு படம் பண்ணியிருக்கே. இந்தப் படத்தில் ஒரு ஆன்மிக பலம் இருக்கு' என்றார். இரண்டரை நாட்களில் ஆறு பாடல்களைப் போட்டுக் கொடுத்தார்.

இடைநிலை திரைப்படங்களுக்கு இன்று ஒரு வியாபாரம் உருவாகியிருக்கிறது. எனவே, வெளியீடு சுலபமாக இருக்கிறது. ஆனால், அவதாரம் வெளியான போது இப்படியிருக்க வாய்ப்பில்லை. 'அவதாரம்' வெளியீட்டில் சிரமப்பட்டீர்களா?

ஆமாம். என்னுடைய சினிமா வாழ்க்கையில், மிக உன்னதமான காலக்கட்டம் 'அவதாரம்' எடுத்த நாட்கள்தான். ஆனால், அதன்பிறகு தான் என் வாழ்வின் மிக மோசமான நாட்களையும் சந்தித்தேன். நான் மட்டுமல்ல, எல்லா சினிமாக்காரர்களும் அதனைச் சந்தித்திருப்பார்கள். அது சினிமா வியாபாரம். நீங்கள் எடுக்கிற படத்திற்காக உங்கள் வீட்டை விற்கலாம், காரை விற்கலாம், செயினை விற்கலாம், தாலியை விற்கலாம், கடன் வாங்கலாம், திருடலாம். இது எல்லாம் ஒரு படத்தை எடுப்பதற்கான சுவாரசியமான செயல்பாடுகள். ஆனால், படத்தை விற்பது என்பது மிக மிக மிக அவமானத்திற்குரிய ஒரு செயலாகத்தான் இன்றுவரை இருக்கிறது. என் சூழ்நிலையைப் பார்த்து, 'இந்தப் படத்தை நான் வாங்கிக்கொள்கிறேன் என்ற செய்தியை மார்க்கெட்டில் பரப்பி விடு' என்று இளையராஜா சொன்னார். நானும் அதைச் செய்தேன். ஆர்வத்தினால் பல பேர் வந்தார்கள். அலுவலகத்திற்கு நிறைய போன்கள் வந்துகொண்டிருந்தது. ஏனெனில், முதன்முறையாக நாசர் இயக்குகிறார், ரேவதி நடிக்கிறார், இளையராஜா இசை என்று அந்தப் படத்தின் மதிப்பு கூடுதலாகவும் இருந்தது. அப்பொழுது தயாரிப்பாளரின் நண்பர்கள் 'இந்தப் படம் நல்ல விலைக்குப் போகும். மீடியேட்டர்ஸ்க்கு படத்தைப் போட்டுக் காட்டலாம்' எனத் தயாரிப்பாள ருக்கு அறிவுரை சொன்னார்கள். நான் அதனை மறுத்தேன். 'தயவுசெய்து, இந்தப் படத்தில் நீங்கள் பெரும் லாபத்தை எதிர்பார்க்காதீர்கள். 32 லட்ச ரூபாய் செலவு செய்திருக்கிறீர்கள், 40 லட்ச ரூபாய்க்குக் கேட்டால் விற்றுவிடுங்கள். படத்தைப் போட்டு மட்டும் காண்பிக்க வேண்டாம்' என்று கெஞ்சினேன். ஏனெனில் இப்போது இருக்கிற மாதிரி அப்போ ஊடகத்தின் கவனமெல்லாம் சினிமா பக்கம் கிடையாது. படம் போட்டால் மீடியேட்டர்ஸ்தான் பார்ப்பாங்க. அந்த மீடியேட்டர்சுக்கு சினிமாவைப் பற்றி ஒரு அறிவும் கிடையாது. ஆனால், தயாரிப்பாளர் வைத்தியநாதன், 'உங்க படைப்பைப் பற்றி நீங்களே தரக்குறைவாகப் பேசுகிறீர்களே. இது பெருமைக்குரிய படம். நான் எல்லோருக்கும் போட்டுக் காண்பிக்கப் போகிறேன்' என்றார். சொன்ன மாதிரி படத்தைப் போட்டுக் காண்பித்தார். மறுநாளே அலுவலகம் நிசப்தம் ஆகிவிட்டது. படத்தைப் பார்த்தவர்கள், 'இது ஆர்ட் பிலிம், கூத்தைப் பற்றி எடுத்திருக்கிறான்... டாக்யுமென்ட்ரி அது, இது...' என்று சொன்னார்கள். மீடியேட்டர்ஸ் ஷோவுக்கு முன்னால் 'அவதாரம்' அலுவலகம் கல்யாணக் களையோடு இருந்தது, ஷோவுக்குப் பிறகு ஒரு இழவு வீடு மாதிரி ஆகிவிட்டது. தயாரிப்பாளர் கலங்கிவிட்டார். என்னைத் தனியாகக் கூப்பிட்டு, 'நான் தப்பு பண்ணிட்டேன். நீங்க பண்ண படம் உங்களுக்கு மட்டும்தான் தெரிஞ்சுருக்கும். அந்த விலைக்கே விற்றிருக்கலாம். இப்ப கேட்டாக்கூட அதே விலைக்கு விற்றிடலாம்' என்றார். ஆனால், 'யாரும் வரமாட்டார்கள் என்பதுதான் நிஜம் சார்' என்றேன். கடைசி யில் அந்தப் படத்தை நானே ரிலீஸ் செய்தேன். 'ரிலீஸ்' செய்த கொஞ்ச நாட்களிலேயே பாடல்கள் 'ஹிட்' ஆயிருச்சு. ஆனால், படத்தைத் தியேட்டரைவிட்டுத் தூக்கிவிட்டார்கள். திரையரங்கைப் பொறுத்த வரைக்கும் அந்த வெள்ளிக்கிழமைக்குப் புதுப்படம் போட வேண்டும், அவ்வளவுதான்.



அதன்பிறகு அந்தப் படத்தைப் பற்றி யாரும் பேசுவதில்லை. நான் எனது வாழ்க்கையின் மறுபக்கத்தைப் பார்க்க வேண்டியதாயிற்று.

'அவதாரம்' ஏன் வெற்றியடையவில்லை என்ற கேள்வியையும் அதற்கான விடையையும் பற்றி எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?

அவதாரத்திற்குப் பிறகு நான் எடுத்த படங்கள் எல்லாம், ஒரு ஆதாயத்தோடு, எதிர்பார்ப்போடு எடுக்கப்பட்ட படங்கள். ஆனால், 'அவதாரம்' கள்ளம்கபடமற்று, எந்த எதிர்பார்ப்புமற்று, நான் நினைத்ததை, நான் படித்ததை, நான் உள்வாங்கிய ஞானத்தைப் பரீட்சித்துப் பார்க்கின்ற ஒரு படம். அந்தப் படம் வெற்றிப் படமாக இருந்திருக்க வேண்டும். ஒரு வெற்றிப் படத்திற்கான அத்தனை விஷயங்களும் அவதாரத்தில் இருப்பதாகவே நான் கருதுகிறேன். நல்ல பாடல்கள் இருந்தன. நல்ல நகைச்சுவைக் காட்சிகள் இருந்தன. இதில் பலவற்றை திரையரங்கத்திலேயே வெட்டி எறிந்துவிட்டார்கள். ஒரு படம் எப்படி இருக்கவேண்டும் என்று இங்கு தீர்மானிப்பவர்கள் தியேட்டர் ஆப்ரேட்டர்களும் இருக்கிறார்கள். அவருக்கு ஒரு காட்சி பிடிக்கவில்லை என்றால், தியேட்டருக்கு வருகிற முப்பது, நாற்பது பேர்களுக்கும் அது பிடிக்காது என்று அவர் தீர்மானிக்கிறார். இது என்ன சட்டம்? இன்றைக்கு வருகிற ஒரு படத்தை மதுரை யில் பாருங்கள், தஞ்சாவூரில் பாருங்கள். இரண்டும் வேறு வேறாக இருக்கும். இதற்குப் படைப்பாளிகளும் உடன்படுகிறார்கள். இது எப்படி சரியாக வரும் என்று எனக்குத் தெரியவில்லை.

இன்னொரு பக்கம் 'அவதாரம்' கூத்துக் கலைஞர்கள் வாழ்வு சார்ந்து இருப்பதாலேயே அதனைக் கலைப்படம் என்று சொல்லிவிட்டார்கள்.

'அவதாரம்' ஆரம்பத்திலேயே உங்கள் நண்பர்கள் மற்றும் மனைவி சொன்ன அறிவுரைகளை நிராகரித்ததாகச் சொன்னீர்கள். இப்போதும் அது சரிதான் என நினைக்கிறீர்களா?

'அவதாரம்' வந்தால் அது உலகத்தையே மாற்றி விடும் என்று அப்போது நான் நம்பினேன். அதனால்தான் அவர்கள் அறிவுரைகளை மதிக்காமல் இருந்தேன். என் முடிவு தவறு, அவர்கள் அறிவுரைதான் சரி என இப்போது கருதுகிறேன். 'வரவு எட்டணா செலவு பத்தணா', 'மகளிர் மட்டும்' போன்ற படங்கள் பெற்ற வெற்றியின் மூலம் நான் கதாநாயகனாக மாறிக்கொண்டிருக்கிறேன் என்ற சுய உணர்வு இல்லாமல், இந்த முடிவை எடுத்துவிட்டேன். அப்போது கே.எஸ். ரவிக்குமார் போன்ற பெரிய இயக்குநர்கள் எல்லாம் என்னை கதாநாயகனாக வைத்துப் படம் பண்ணுவதற்காகக் கதை சொன்னார் கள். நான் மறுத்துவிட்டு அவதாரத்திலே இருந்தேன். 'அவதாரம்' காலக்கட்டத்தில், அதாவது ஒரு வருஷத்தில் எந்தப் படமும் நான் நடிக்கவில்லை. ஒரு வருடம் முடிந்து திரும்பி வந்த போது, 'அவதாரம்' தோல்வியும் சேர்ந்து, ஒரு நடிகராக எனக்கு வந்த வாய்ப்புகள் குறைந்துவிட்டது.

# மெட்ராஸ்...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

• இயக்குநர் ரஞ்சித்தைப் பொறுத்தவரை அட்டகத்தி என்ற சுமாரான படத்திலிருந்து இது மிகப்பெரிய தாவல். அட்டகத்தியையே ஆனையாக்கும் என்றார்கள். இன்று இன்னும் அதிகமாக. தங்கள் அரசியலுக்கு தன்னைப் பயன்படுத்திக் கொள்பவர்களைப் பார்த்து ஒரு புன்னகை பூத்துவிட்டு ரஞ்சித் அடுத்த பாய்ச்சலுக்குத் தயாராவது நல்லது. இது நல்ல படம்தானே அன்றி மிகச் சிறந்த தமிழ்த் திரையுலக வரலாற்றில் ஒரு முக்கியமான படமல்ல. அப்படத்தை ரஞ்சித் எடுக்ககூடும். தன் கவனத்தை மின்மினி அரசியல் சமூகப் போராளிகளிடம் தொலைக்காமல் இருந்தால்.

• சந்தோஷ் நாராயண் பின்னணி இசை மிரட்டல். இவரும் இன்னும் சாதிக்கட்டும்.

• படத்தில் இடைவேளைக்குப் பிறகு வரும் பாடல்கள் எரிச்சலை ஏற்படுத்துகின்றன. இரண்டை வெட்டியிருக்கலாம்.

• தொடர்ந்து மாறி மாறிக் காட்டப்படும் நம்பிக்கைத் துரோகக் காட்சிகள் அஞ்சானை மிஞ்சுகின்றன. இக்காட்சிகள் தமிழ்த் திரையுலகில் க்ளிஷேவாக மாறிவிட்டன. இனியும் இதைப் பிடித்துக்கொண்டு அலைவதில் லாபமில்லை என்பதோடு நஷ்டமுண்டு!

• எல்லோரும் படத்தில் வரும் புத்தர் சிலை, அம்பேத்கர் படம், அம்பேத்கர் நூல் போன்றவற்றைச் சொல்லி அதன் குறியீடுகளை வியக்கிறார்கள். நாமும் நம் பங்குக்குக் கொளுத்தி வைப்போம். படத்தில் வராத படங்கள் இல்லை. ரஜினி படம், சாய் பாபா படம், கிறித்துவ கதாபாத்திரங்கள், ஹிந்து சாமியார்கள் என என்னவெல்லாமோ வருகின்றன. அம்பேத்கர் படம் வருகிறது. புத்தர் சிலை வருகிறது. சே குவேராவின் படம்கூட வருகிறது. வராத ஒரே ஒரு படம் ஈவெராவின் படம் மட்டுமே. ரஞ்சித்தை இதற்காக எத்தனை பாராட்டினாலும் தகும். வடசென்னையில் ஈவெரா படமில்லை என்று உரக்க நிரூபித்துவிட்டார். (எங்காவது யாராவது இப்படத்தில் ஈவெரா படம் வருவதை ஆதாரத்துடன் சொன்னால், அப்படியா கவனிக்கலைங்க என்று மட்டும் சொல்வேன் என உறுதி கூறுகிறேன்.)

• கடைசியாக – ஆடுகளம், மதயானைக் கூட்டம், மெட்ராஸ் எனக் கொண்டால் என் வரிசை இப்படி: மதயானைக் கூட்டம், ஆடுகளம், மெட்ராஸ்.

• தனுஷ் நடித்திருக்கவேண்டிய திரைப்படம். தனுஷ் நடிக்காததால் நமக்கு பெரிய இழப்பு இது.

* தியேட்டரில் நிச்சயம் பார்க்கவேண்டிய படம். Do NOT miss.

## சினிமா ஆய்வாளர் ராஜன் குறை

மெட்ராஸ் படத்தை பாராட்டுவது அவசியம்தான். பலவிதங்களில் முக்கியமான படம். ஆனால் அது ஒரு முற்றிலும் புதிய துவக்கம் என்று சொல்வதில் சிக்கல் இருக்கிறது. காதல், கல்லூரி, வழக்கு எண் 18/9 - பாலாஜி சக்திவேல், வெயில், அங்காடித்தெரு - வசந்தபாலன், பருத்தி வீரன் - அமீர், சுபரமண்யபுரம் - சசிகுமார், நாடோடிகள் - சமுத்ரகனி, எம்டன் மகன் - திருமுருகன், பூ - சசி, வெண்ணிலா கபடிக் குழு, நான் மகான் அல்ல, அழகர்சாமியின் குதிரை, ஆதலினால் காதல் செய்வீர் - சுசீந்திரன் உள்ளிட்ட பலருடைய பங்களிப்புகள் உருவாக்கிய மாற்றுப்பாதைக-ளின் தடத்தில் வந்துள்ள படம் மெட்ராஸ் என்பதை ஒரு விமர்சகனாக பதிவு செய்ய விரும்புகிறேன். இந்த பட்டியல் மெட்ராஸ் படத்தின் உடனடியான சமகால திரை நிகழ்வுகள். வரலாறு என்று எடுத்துக் கொண்டால் சேரனின் பாரதி கண்ணம்மா என்று தொடங்கி இன்னும் பல திரைப் படங்களை யோசிக்கத்தான் வேண்டும். வட சென்னை என்று எடுத்துக்கொண்டால் செல்வராகவனின் புதுப்பேட்டை, பத்ரி வெங்கடேஷின் பாணா காத்தாடி போன்ற படங்களையும் புறக்கணிக்க முடியாது. திருமலை, கில்லி போன்ற படங்களில் விஜய் வடசென்னை வாசியாக இருந்தது வெறும் சாகச கதாநாயகத்தன்மைக்குள் முற்றிலும் அடங்கிவிடுமா என்பதும் புறக்கணிக்கத்தக்க கேள்வியல்ல. இதையெல்லாம் சொல்வது ரஞ்சித்தின் சாதனையை குறைத்து மதிப்பிடுவது ஆகாது என்று உறுதியாக நம்புகிறேன். தமிழ் சினிமா மதிப்பீடுகளில் மீண்டும், மீண்டும் என்னை மிகவும் உறுத்துவது வரலாற்றுப்பார்வை என்பது தவறிவிடுவதுதான். ஏற்கனவே வந்த படங்களுடன் இணைத்து ஒரு படத்தை பேசுவதும், அதன் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வதும் அவ்வளவு பெரிய குற்றமா என்ன? எந்த காரணத்தால் இங்கே ஒரு கலாசார அம்னீஷியா மரபாக மாற்றப்படுகிறது என்பது புரிவதேயில்லை.

நகைச்சுவைத் தொடர் 296

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீசன்



காக்க காக்க கதிர்வேல் காக்க!
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே!
அமரர் இடர் தீர அமரம் புரிந்த குமரன் அடி நெஞ்சே குறி!
இருவர் சந்திக்கும் பொழுது காலத்திற்கு காலம் இடத்திற்கிடம் சம்பாசனையில் மாற்றம் காணப்படும்.



என்ன.... அவவை இன்னும் விடேல்லையாம்?
இந்தமுறை லெக்சனிலை அவர் திரும்பவும் ஜனாதிபதியா வரேலாதாம்.

தீபாவளி இன்டைக்கோ...நாளைக்கோ?



அந்தக்கோவில்லை கொடியேத்தமெண்டு போனன் அது போனகிழமையே கொடியேறிவிட்டுதாம். இப்படியான சம்பாசனை நாளுக்கு நாள் நாம் அல்லது மற்றவர் எம்மீது தொடுக்கும் கேள்விகள்...



ரிவியில் தீபாவளி சேலைகளுக்கு சேல் விளம்பரங்கள்...
கோவில்களில் கந்தசஸ்டி விளம்பரம் பார்த்து பார்த்து இடையிடை தங்கள் கருத்துக்களை கதைத்துக்கொண்டிருந்த உலகர் குழாம்
உலகண்ணை புலம்பெயர்ந்து வந்த காலம் வேறு இன்று வாழ்ந்து வரும் காலம் வேறு...என உலகருக்கு விளக்கம் சொன்னா பெற்றோர் பிள்ளைகள் வாழ்க்கை முறையும் வாழும் முறையும் வேறு வேறு



வெள்ளை வேட்டி சீனவெடி எம்ஜிஆர் ஜெயலலிதா படம் சைக்கிளிலே ஒரே ஊருக்குள்ளேயே திருமணம் முடித்து வாழும் அத்தனை உறவினர் வீடுகளிலும் உலா வந்த காட்சிகளை ரவி சீரியல் நாடகம் பிறேக் விட்டு சொல்வது போல் சொல்லி கொண்டிருந்தார்.




இதற்கும் மேலாக 27 ம் திகதி நடக்கவிருக்கும் லெக்சன் பற்றி வரும் செய்திகளை அப்டேற் பண்ணிக்கொண்டிருந்தா... ஐபொட அகிலாண்டேஸ்வரி. இதிலை உள்ள எல்லாரையும் எனக்கு தெரியும் என பெருமைப்பட்டுக்கொண்டா ஐபொட் அகிலாண்டேஸ்வரி.



உலகரின் கையில் கந்தசஸ்டி கவசம் இருந்தது. அதுவும் மிகவும் பழையது. பேரனார் கொடுத்தது இதுதான். அவர் கொண்டுவந்த சொத்துக்களில் ஒன்று. அவர்கள் அதிகம் சொத்து சேர்க்கவும் இல்லை என்று சொல்லிச்சிரிச்சா... செக்கண்டபுளோர் செல்லம்மா.

இன்று ஊழல் அபகரிப்பு சொத்து சேர்ப்பதற்கு என்ன தண்டனை என உலகில் பலருக்கு புரிந்துவிட்டது. நடுவிலை கொஞ்சம் மிச்சத்தைக் காணோம் என்பது போல இனி யார்...யாரோ...?



காலநிலை மாற்றத்தால் உலகம் முழுவதும் உணவுப்பொருட்களின் விலை உச்சத்தை தொட்டுவிட்டது. ஆனால் சில கோவில்களில் பாலாபிசேகம் அளவோடு செய்கிறார்கள். ஆனாலும் கடந்தவாரம் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா விடுதலை வேண்டி 3000 குடம் பால் அபிசேகம் நடந்தது. (ஒரு குடம் எத்தனை லிட்டர் எனத் தெரியாது)



கொலோவினுக்கு எத்தனை அந்தர் பூசனிக்காய். அதற்காக வளர்க்கப்படும் பூசனிக்காய் கொலோவின் முடிந்ததும் வீதிகளில் எறியப்படுகிறது?




தினம் தினம் வீடுகளிலும் பொது நிகழ்சிகளிலும் உணவுச்சாலைகளிலும் விரயமாகும், எறியப்படும் உணவு எத்தனை அந்தர்? யார் இதனை நினைப்பார்கள்? (உண்ண ஒருவருக்கு உணவில்லையென்றால் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்)

ஞாபகம் இருக்கிறதா? 15......31



15. இணுவில் வீரமணி ஐயர் பிறந்ததினம் (1931....2003)

16. பாஞ்சாலங்குறிச்சி மன்னன் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்ட தினம். (1760..1799)

16. உலக உணவு நாள்.



17. கவியரசு கண்ணதாசன் நினைவு தினம். (1927...1981) எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை.

17. உலக வறுமை ஒழிப்பு நாள்.

18. கனடாவில் பெண்களும் மனிதர்கள் என சட்டமாக்கப்பட்டது. 1929

18. பி.பி.சி வானொலி ஆரம்பிக்கப்பட்ட நாள். 1922



19. மயில்வாகனம் நிமலராஜன் நினைவுதினம். 2000

19. திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அன்னை திரேசாவை முத்திப்பேறு பெற்றவராக அறிவித்தார்.

17. ஐப்பசி வெள்ளி விரதம் ஆரம்பம்.



18. 1982 இலங்கையில் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

22. தீபாவழி




24. ஐக்கிய நாடுகள் தினம் (UNITED NATION DAY) (1945)

27. தேர்தல்

28. கந்தசஸ்டி (24 - 28




29. கவிஞர் வாலி பிறந்தநாள். 1931 ....2013

31. ஹலோவீன்

# திரை...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்நிலையில், ஜெனி சென்னை கல்லூரியில் படிப்பதைத் தெரிந்து அவளை பார்த்து காதலைப் புதுப்பித்துக் கொள்கிறான் ஜீவா. இது அவனது அப்பாவுக்கு தெரிய வருகிறது. ஜீவாவுக்கு கிரிக்கெட்டில் பெரிய எதிர்காலம் இருக்காது என நினைக்கும் அவர், அவனை கிரிக்கெட்டை விட்டு வெளியே கொண்டுவர இந்தக் காதலை பயன்படுத்துகிறார். கிரிக்கெட்டை விட்டு வந்தால், ஜெனியுடன் கல்யாணம் செய்து வைப்பதாகக் கூறுகிறார்.

காதலா கிரிக்கெட்டா - இரண்டில் எதை தேர்வு செய்வது என்பதைவிட இரண்டிலும் வெற்றிபெற்றால்தானே ஜீவா கதாநாயகன். இரண்டிலும் வெற்றிபெறுகிறான். சுபம்.

ஜீவாவாக விஷ்ணு விஷால் நடித்திருக்கிறார். படம் முழுக்கவே அமைதியான தனது நடிப்பை ஆழமாக பதிவு செய்திருக்கிறார். ஆனாலும், பள்ளி மாணவனாக முதிர்ச்சியான முகத்துடன் வருவதை நிச்சயம் ஏற்றுக் கொள்ள முடியாது. 'இதுவரைக்கும் நான் விளையாடியதை அப்பா பார்த்ததில்ல' என்று வருந்துகிறவர், அடுத்த காட்சியிலேயே மைதானத்தில் விளையாடும் வீரர்களுக்கு தண்ணீரை எடுத்துக்கொண்டு ஓடுவதும், சின்ன குற்றவுணர்ச்சியோடு கேலரியில் அமர்ந்திருக்கும் அப்பாவை பார்த்து குனிந்துகொள்வதும்... அருமை.

ஜெனியாக வரும் ஸ்ரீதிவ்யாவின் துறுதுறுப்பும் அழகும் கவர்கின்றன. பள்ளிப்பருவம், கல்லூரிப்பருவம், வேலைக்குச் செல்லும் பருவம் - எல்லாவற்றுக்கும் பொருந்துகிறார்.



ரஞ்சித்தாக வருகிறார் 'அன்னக்கொடி' லட்சுமணன். மிகக் குறைவான காட்சிகளிலேயே தலை காட்டினாலும் கவனம் ஈர்க்கிறார். 'ஆறு வயசுல கிரிக்கெட் மட்டையை பிடிக்க ஆரம்பிச்சேன். இனி என்ன பண்ணுற துன்னே தெரியலை' என்று புலம்பிய படியே அவர் எடுக்கும் முடிவு, பயங்கரம், கண்ணீரை வர வைக்கிறார். நாமத்தை நெற்றியில் பூசிக்கொண்டு வீரர்களுக்கு நாமம் போட்டுவிடும் கிரிக்கெட் போர்டு தலைவரை பார்த்து இவர் கேள்வி கேட்கும் போது அரங்கம் கைதட்டல்களில் அதிர்கிறது.

நகைச்சுவைக்காக சூரி. சில இடங்களில் சிரிப்பும் வரவழைக்கிறார். நீண்ட இடைவெளிக்கு பிறகு வரும் சார்லி நிறைவாகச் செய்திருக்கிறார். மகனுக்காக சார்லியிடம் சண்டை போடும்போதும், திரும்பி வந்து மன்னிப்பு கேட்டு அழுவதிலும், தனது மகன் விளையாடுவதை பார்க்க வந்து அவன் தண்ணீர் கொண்டு போய் கொடுப்பதை பார்க்கச் சகிக்காமல் பாதியிலேயே எழுந்து செல்லும் வேகத்திலும், விஷ்ணுவின் அப்பாவாக வரும் மாரிமுத்து உண்மையான அப்பாவாகவே ஆகிவிட்டார். ஜெனியின் அப்பாவாக வரும் 'அம்மா கிரியேஷன்ஸ்' சிவாவும் காதலிக்கும் தன் மகளை கைவிட்டு போகாமல் தடுக்க போராடும் ஒரு அப்பனின் அர்ப்பணிப்பையும் கோபத்தையும் இயல்பாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

**- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

இசை: டி. இமான். 'ஒரு ரோசா', 'ஒருத்தி மேல'... பாடல்கள் பரவாயில்லை. பின்னணி இசையிலும் மோசமில்லை. மதி ஒளிப்பதிவு படத்துக்கு வண்ணம் சேர்க்கிறது. வசனம்: சந்தோஷ். 'அவர் தட்டிக் கொடுக்கிறார்னு நினைச்சேன். ஆனால் தடவி பார்க்கிறார்னு அப்புறம்தான் தெரிஞ்சுது.' 'இதுவரைக்கும் நீங்க செலக்ட் பண்ணின 16 பேரில் 14 பேர் உங்க சமூகத்தை சேர்ந்தவங்கதானே?' போன்ற துணிச்சலான வசனங்கள் கைதட்டல் பெறுகின்றன. இயக்கம்: சுசீந்திரன். தான் ஒரு திறமையான இயக்குநர் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளார்.

ஜீவா – சாதிக்கு எதிரான ஆட்டம்!


உங்கள் பிள்ளைகளின் முன்னேற்றமான எதிர்காலம் இங்கு ஆரம்பமாகிறது
கணித வகுப்புகள், ஆங்கில வகுப்புகள், பிரஞ்சு வகுப்புகள், பாடசாலை வீட்டுவேலை வகுப்புகள்.
NETKRAM
GIVING THE GIFT OF EDUCATION
ADVANCE AND NEW
MATH CLASSES
For Grade 1 - 12
INDIVIDUAL APPROACH FOR EACH STUDENT
(ADVANCE EXPLANATION)
SPECIAL KIDS COMPUTER CLASS
> PROGRAMING LOGIC
> SKILL BUILDING ACTIVITIES
ADVANCE CLASSES
UML
PHP
ASP.NET
ASP
JAVA
C++, C#
VISUALBASIC.NET
DATABASES
PC-TECHNICIAN
A+ CERTIFICATION
OFFICE 2010/2007
WORD
EXCEL
POWERPOINT
ACCESS
OUTLOOK
Microsoft Office Specialist (MOS) Certification
INTERNET PROGRAMMING ( I )
HTML
CSS
XML
INTERNET PROGRAMMING ( II )
Javascript
Server Side Web Development
Internet Webmaster Certification
JOB TRAINING FOR QUALIFIED STUDENTS
FRENCH & ENGLISH READING CLASSES
HOME WORK CLASSES
Math
English
French
Other Subjects
GRADE 1 TO GRADE 6 ENGLISH AND FRENCH MEDIUM
மாதாந்தத் தேர்வுகள் கணினி மூலம் கற்பிக்கப்படும்
உயர்தர வகுப்புகள்
Math for HIGH SCHOOL
French for HIGH SCHOOL
English for HIGH SCHOOL
COMPUTER
மின்கணினியில் பிரச்சனையா?
சிறந்த முறையில்
திருத்தி அமைத்து கொடுக்கப்படும்
-REPAIR -SALES
-UPGRADE
-SERVICES
opening hours
Mon - Thu : 4:00 PM - 9:00 PM
Sat - Sun : 9:00 AM - 5:00 PM
www.netkram.com
Contact : 905 - 471 - 1230
30 New Delhi Drive, Unit 68
Markham and 14th Avenue


வாகன விபத்து
MOTOR VEHICLE ACCIDENT
SKT PARALEGAL SERVICE
CRIMINAL MATTERS
SUMMARY
416.803.5296
Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்
SK THEESAN
TRAFFIC TICKETS
LICENSED PARALEGAL
sktheesan@gmail.com
MOTOR VEHICLE ACCIDENT
SERIOUSLY INJURED ?
ACCIDENT BENEFITS
PERSONAL INJURY
TRAFFIC TICKETS
DON'T
MISS YOUR TRIAL DATE
LOSE YOUR POINTS
CRIMINAL CONVICTION
PERMANENT RESIDENT
CITIZENSHIP
SPONSORSHIP
CRIME
CRIMINAL CHARGES ?
EXPERIENCED LAWYERS AVAILABLE

"Let me help you make the right choice"

Schuren Sriskandarajah B.A.
Sales Representative

HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8

SCHUREN.CA • 416.333.9393

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL

Vany Jeganmohan
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca

HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6962

GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2

Higher Standards Agents... Higher Results!™

BMO Bank of Montreal

Thanusha Rajadurai
Mortgage Specialist

BMO Bank of Montreal
Greator Toronto Area

Tel.: 905-301-5160
Cell: 416-312-5047
Fax: 905-567-4799
thanusha.rajadurai@bmo.com
bmo.com/ms/thanusharajadurai

A part of BMO Financial Group

Great options for all your mortgage needs...

Lowest interest rates and best pre - payment options.

Pre - Approvals

Renewals & Refinance

Home Equity Line of Credit

RBC Insurance

Mahindan Mailvaganam, M.Sc.
Insurance Advisor
Life and Living Benefits

RBC Life Insurance Company
111 Grangeway Avenue
Scarborough, ON M1H 3E9
mahindan.mailvaganam@rbc.com

RBC Insurance:
Home / Auto / Life / Health / Travel / Business / Retirement

Tel: 416-262-4973
Fax: 905-394-6048

Save an average of $695. Combine car and home plus life insurance.

TD Canada Trust வங்கியில் அனைத்து
Mortgage கடன் வசதிகள் பெற்றுக்கொள்ள
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)

416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com

ADVICE WHEREVER WHENEVER

Low Mortgage Rates

அகத்தின் அழகு முகப்பில் தெரியும்......
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....

VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698

Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

Free Real Estate Class - Call: 416.321.6969

RealEstate / Mortgage / Commercial Investments

AUTO BODY SHOP + BUSINESS FOR SALE
DANFORTH & MAIN
Price : $1.49 Million

HARWOOD & ROSSLAND
Bedroom : 3
Washroom: 3
Walk-out bsmt
Price : $489,900

MARKHAM & FINCH
Profitable knit wear Business + Building
Sales Over 700k
Price : $865,00

MEADOWVALE & ELLESMERE
Bedroom : 4 + 3
Washroom: 5
Price : $725,00

BRIMLEY & EGLINTON
CONVENIENCE STORE
FOR SALE
Price: $650,900
Lease: $2600

KENNEDY & HWY 401
Bedroom : 2
Washroom: 2
Price : $299,900
900 Sq.ft

Mortgage Alliance
RE/MAX Dynasty Realty Inc

A. Anton Jeeva B.Eng
Principal Mortgage / RealEstate Broker
Ranked among the top 1% of all Realtors in the GTA
Mortgage Rates Starting From 2.5%
Dir: 416.575.5055

Remax Dynasty Realty Inc., Brokerage 8 Shadlock St, Unit #7 Markham, ON L3S 3K9

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell

RE/MAX All-Stars Realty Inc., Brokerage

Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com

வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit
கவலை வேண்டாம்

Guaranteed Result

Mortgage Alliance
The Guardian

Mortgage In Trouble?
Need a Mortgage?

- Residential & Commercial Mortgage
- 2nd Mortgage
- Purchase & Refinance
- Renewal & Switch
- Home Equity Loan

We're Hiring New Agents

Gini Annarasa
Cell: 416.830.3241

Franchise Of The Mortgage Alliance Network

Sales Reps. Welcome

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

For All your Real Estate & Investments Needs!

HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969

* INDEPENDENTLY OWNED AND OPERATED